
க்ரைம்
நாவல்
214
ஜூன் - 2005
விலை ரூ. 6
கி
X
கலியுகம்!
ராஜேஷ்குமார்

வற்றாத அன்பும் பாசமும் கொண்ட வாசக உள்ளங்களுக்கு வணக்கம்!

கோடையின் வெப்பம் தணிந்து தென்மேற்கு பருவ மழைக்கான மேகங்கள் உலா வர ஆரம்பித்து விட்டன. காவிரி



# கோயமுத்தூரிலிருந்து

# ட்ரங்க்கால்

நீர்க்காக இனி கர்நாடகாவோடு சண்டை போடக்கூடிய சூழ்நிலைகள் உருவாகும். வருண பகவான் கருணை வைத்து அளவுக்கு மீறி கொட்டித் தீர்த்தாலன்றி மேட்டூர் அணைக்கு காவிரி நீர் எட்டிக்கூட பார்க்காது. மத்திய அரசு சொன்னாலும், சுப்ரீம்கோர்ட் சொன்னாலும், அந்த ஆண்டவனே சொன்னாலும்கூட சரி கர்நாடக முதல் மந்திரி அதை காதில் போட்டுக் கொள்ளாமல் 'கஜல்' மியூஸிக் நடக்கும் கலையரங்குகளுக்குப் போய்க் கொண்டிருப்பார். தமிழக முதலமைச்சர் வாடிய நெற்பயிர்களைக் கையில் எடுத்துக் கொண்டு விமானம் ஏறிப் போய் பிரதமரை சந்தித்து, காவிரி நீர் தீர்ப்பாயத்தை உடனே கூட்டும்படி சொல்வார். உடனே பிரதமரும் தமிழ்நாட்டு மக்கள் தப்பாய் நினைத்துவிடக்கூடாதே என்பதற்காக தீர்ப்பாயத்தைக் கூட்டுவார். கர்நாடகாவின் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கொஞ்சம்கூட பயமில்லாமல், பதட்டமில்லாமல் அந்த தீர்ப்பாயத்தில் கலந்து கொள்வதற்காக பெங்களூரிலிருந்து விமானம் ஏறுவார். 20

(தொடர்ச்சி 96ம் பக்கத்தில்)

214

ஜூன் - 2005

வணக்கமுங்க...

இங்க சென்னையில் கத்திரி போயும் வெய்யில் கடுமை குறையவில்லை.

பைக்கில் சென்றால் அனல் காத்து - சிக்னலில் நின்றால் நெருப்பில் நிக்கற மாதிரி இருக்கு.

இந்த மாதிரி வெய்யில் நேரத்தில் கார் ஓட்டுநர்கள் பாடுதான் ரொம்ப கஷ்டம். முதலாளி யாரையாவது பார்க்கப் போய் இருப்பார். இங்க, ஓட்டுநர் காரிலேயே காத்திருக்க வேண்டும். அப்ப, அடுப்பில் உட்கார்ந்து இருக்கற மாதிரி இருக்கும். வெய்யில் நேரத்தில் பஸ் பயணம் போவதும் கொடுமைதான். அதுவும் ஜன்னல் ஓரம் உட்கார்ந்துட்டா சொல்லவே வேண்டாம். பயணம் முடிந்து வீட்டுக்கு வரும்போது மூஞ்சி பேய் அறைஞ்ச மாதிரி இருக்கும்.



பஸ்ஸிலும், பயணத்திலும் இருக்கும் கஷ்டத்தை சொன்னேன் இல்லியா... இதே வெய்யிலைக் கண்டு கொள்ளாத ஒரு மக்கள் இருக்கிறார்கள் தெரியுமா?

உடனே 'ஓ! தெரியுமே அவர்கள்தான் பாரம்

# எடிட்டர் ஏரியா

அதிகாரிகளோடு நீர்ப்பாயக் கூட்டத்தில் கலந்து கொள்வார். 'கர்நாடக அணைகளில் இருந்து ஒரு சொட்டு தண்ணீர்கூட தமிழ்நாட்டுக்கு தர முடியாது. இருக்கும் தண்ணீர் எங்களுக்கே போதுமானதாக இல்லை...' என்ற வழக்கமான பொய்யைப் பேசுவார்கள். தமிழ்நாட்டு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் காலில் விழாத குறையாக '5 டி.எம்.சி தண்ணீராவது விடுங்கள்' என்று கெஞ்சுவார். கர்நாடகா அதை காதிலேயே போட்டுக் கொள்ளாது. உடனே பிரதமர் குறுக்கிட்டு 'இப்போதைக்கு 2 டி.எம்.சி.யாவது கொடுங்கள்' என்று அவர் சமரசம் செய்து வைக்க, பிச்சைக்காரனுக்கு பத்து பைசா போட யோசிக்கும் கருமியைப் போல கர்நாடகாவின் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் யோசித்துவிட்டு 'வேண்டுமானால் இப்போதைக்கு 1 டி.எம்.சி. தண்ணீர்விடுகிறோம்' என்று சொல்வார். தமிழக அரசு 2 டி.எம்.சி தண்ணீர்க்காக கூட்டம் முடிகிற வரைக்கும் கெஞ்சிக் கொண்டேயிருக்கும். ஆனால் அவர் அசரமாட்டார். கடைசியில் தமிழக அரசு 1 டி.எம்.சி. தண்ணீர்க்கு ஒப்புக் கொண்டு பிரதமர் முன்னிலையில் கையெழுத்துப் போடும். தமிழக நீர்ப்பாசன அமைச்சரும் குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கதையாக கூட்டத்தைவிட்டு வெளியே வந்ததும் பத்திரிகை நிருபர்களை அழைத்து ''பேச்சு வார்த்தை வெற்றி...! கர்நாடக அரசு தண்ணீர் கொடுக்க சம்மதித்தது!'' என்று பேட்டி கொடுப்பார். ஆனால் அதே சமயம் கூட்டத்தைவிட்டு வெளியே வரும் கர்நாடக மந்திரி ஒரு எகத்தாள சிரிப்போடு அதே பத்திரிக்கையாளர்களுக்கு இப்படி ஒரு பேட்டி கொடுப்பார். ''பிரதமர் கேட்டுக் கொண்டதின் பேரில் தமிழ்நாட்டுக்கு 1 டி.எம்.சி. தண்ணீர் தர ஒப்புக் கொண்டோம். ஆனால் இப்போதைக்கு உடனடியாய் அந்த 1 டி.எம்.சி. தண்ணீரை திறந்துவிட முடியாது. நல்ல மழை பெய்தால் மட்டுமே அது சாத்தியம். அதுவும்

(தொடர்ச்சி 3ஆம் அட்டையில்)

(96ம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் கர்நாடகா சென்று மந்திரி சபையைக் கூட்டி ஆலோசனை செய்து - அதற்குப் பிறகு கர்நாடகாவில் உள்ள சர்வ கட்சியினரையும், விவசாய சங்கத் தலைவர்களையும் கூட்டி ஆலோசனை செய்துவிட்டுத்தான் ஒரு தீர்மானத்துக்கு வர முடியும்... மேலும்...''

''அநியாயம் சார் இது...''

''க்ராஸ்டாக்ல... யாரது...?''

''அப்துல் முத்தலிபு ஸார்...''

''புதுக்கோட்டை கோணக் கொல்லை அப்துல் முத்தலீப்?''

''அதே... அதே...''

''என்ன பாய்... கல்யாணம் நல்லபடியா முடிஞ்சுதா?''

''முடிஞ்சுது ஸார்... நீங்க அனுப்பின வாழ்த்தும் வந்து சேர்ந்தது...! ரொம்பவும் நன்றி ஸார். இப்ப நீங்க ட்ரங்க்காலில் பேசின காவிரி மேட்டர் என்னோட த்தத்தை சூடாக்கிடுச்சு ஸார்... இந்த அநியாயத்துக்கெல்லாம் ஒரு விடிவு காலமே கிடையாதா ஸார்...?''

''உண்டு...''

''அது எப்ப ஸார்...?''

''எல்லா இந்திய நதிகளும் இணையும் போது...''

''எப்ப ஸார் இணையும்...?''

''உலகம் அழியும்போது...! அட போங்க பாய்... எனக்கு டென்ஷன் ஏறுது...! டென்ஷனை குறைக்கணும்ன்னா ான் ரிஸீவரை வைக்கணும்... ரிஸீவரை வைக்கட்டா...!''

''ஸார்... ஸார்... அடுத்த மாச க்ரைம் நாவலோட லைப்பு...?''

### ''வேட்டையாடு விவேக்!''

''ஆஹா... விவேக் வர்றாரா... பேஷ்... கண்ணா... பஷ்...!''

''டொக்!

மிக்க அன்புடன்,
ராஜேஷ்குமார்.

தூக்கும் தொழிலாளிகள்' என்று நீங்கள் எண்ணி இருந்தால் அது என் தப்பு அல்ல...

நான் சொல்லப் போகும் இந்த மக்கள் - அதிசயப் பிறவிகள். இவர்களுக்கு உலகமே தெரியாது. இவர்களுக்கு பசியிருக்காது. பக்கத்தில் யார் வந்தாலும் தெரியாது. தெரியுதா யார் அவர்கள் என்று...?

ஆம். அவர்கள்தான் கலியுக லைலா - மஜ்னுக்கள். இவர்களுக்கு 12 மணி பீச் மணல் பஞ்சு மெத்தை. வேகாத வெய்யிலில் முக்காடு ஒன்று போட்டுக் கொண்டு பேசுவாங்க, பேசுவாங்க... அப்படி பேசுவாங்க... அடிக்கும் வெய்யில் அவர்களுக்கு குற்றால சாரல்.

வெய்யில் ஏறஏற விலகிப் போவாங்க என்று பார்த்தால் இன்னும் நெருக்கம்.

'கிட்டப் போய் பார்த்தாயா' என்று கேட்காதீங்க? சுமார் பதினைந்து வருடத்திற்கு முன் ஜிப்ஸி ஜீப் வைத்திருந்தேன். அது மணலில் போகும் என்பதால் ஆபீஸில் இருந்து வீட்டுக்கு போகும்போது பீச் மணலில் போவேன். அப்பதான் இந்த அமராவதி - அம்பிகாபதி தரிசனங்கள்.

சுனாமி வந்த கொஞ்ச நாள் இவர்கள் பீச்சுப் பக்கம் வராமல் இருந்தார்கள். இப்ப 'எதையும் தாங்கும் எங்கள் இதயம் சுனாமிக்கு எல்லாம் பயப்படாது' என்பதுபோல் வரத் தொடங்கிவிட்டார்கள்.

இவ்வளவு சிரமம் வெய்யிலில் இருந்தாலும் - ஏற்றுக் கொள்ளும் நாம் இரண்டு நாள் தொடர்ந்து மழை அடிச்சா தாங்கிக் கொள்வது இல்லை.

சரி, வாசகர்களே! இதையெல்லாம் அடுத்தமுறை சென்னை வரும்போது பார்த்துக் கொள்ளலாம். இப்ப நீங்க நாவலை படிக்கப் புறப்படுங்க... நான் அடுத்த ஸ்பெஷலில் சந்திக்க வருகிறேன்.

அதுவரை -

அன்புடன்,

**ஜி.அசோகன்.**



# ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்

★ கடவுள் விஷயத்தில் எனக்கு இன்னமும் நம்பிக்கை வரவில்லை. என் குழப்பத்துக்கு தீர்வு சொல்ல முடியுமா?

(பா.முருகன், தஞ்சாவூர்)

★★ சுவாமி தயானந்த சரஸ்வதி உங்கள் கேள்விக்கு அழகாக பதில் சொல்லியிருக்கிறார். அவர் சொன்னது இதுதான்.

கடவுள் எல்லாம் வல்லவர். அவரால் செய்ய முடியாதது எதுவும் இல்லை. பொதுவாக மனிதர்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையுடன்தான் கடவுளை வணங்க ஆரம்பிக்கிறார்கள்: 'அது வேண்டும், இது வேண்டும்' என்று பிரார்த்தனை செய்கிறார்கள். அவர்கள் கேட்டதை தரவில்லையென்றால் உடனே 'நான் எவ்வளவு பிரார்த்தனை செய்தேன். கடவுளை இனி நம்பப் போவது இல்லை' என்று கூறிவிடுகிறார்கள். நம்மில் பெரும்பாலானவர்கள் இம்மாதிரி நடப்பவர்கள்தான். நாமும் இம்மாதிரி உணர்ச்சிவசப்படுபவர்களாகத்தான் இருக்கிறோம். கடவுள் நம்முடைய விருப்பப்படி நடக்கவில்லையென்றால் 'அவர் இல்லை' என்று சிலர் சொல்லி விடுகிறார்கள். அப்படியானால் நம் பேச்சைக் கேட்காத மனிதர்கள் பலரும் இந்த உலகில் வாழ்கிறார்களே, அவர்களும் இல்லை என்று அர்த்தம் கொண்டால் அது அசட்டுத்தனமான வாதமாகத்தானே இருக்கும்? எனவே நம் விருப்பத்தை நிறைவேற்றாத காரணத்தால் கடவுள் இல்லை என்ற முடிவுக்கு வருவது ஒரு பிழையான கருத்து.

## பரிசுக்குரிய கேள்வி

★ இந்த மாதம் எத்தனையோ புத்தகங்களைப் படித்து இருப்பீர்கள். படித்த புத்தகங்களில் பிடித்த கருத்து

ஏதாவது உண்டா...?

(ஜெ.சந்திரமௌலீஸ்வரன், தர்மபுரி-2)

★★ உண்டு... உண்டு...! தேவி வார இதழில் ஆன்மீகவாதியான டி.பாஸ்கரதாஸ் டி.வி.சீரியல் நாடகங்களைப் பற்றி ஒரு கருத்து சொல்லியிருந்தார். பொதுவாக எல்லா வீடுகளிலும் காலையும் மாலையும் கந்தர்சஷ்டி கவசமோ, சுப்ரபாதமோ அல்லது பக்திப்பாடல்களோ ஒலித்துக் கொண்டிருக்கும். சில வீடுகளில் ஓங்கார மந்திரம் கேட்டுக் கொண்டிருக்கும். அதிக அளவு ஆன்மீக ஈடுபாடு இல்லாத வீடுகளில் கூட வெள்ளி மற்றும் செவ்வாய்களில் பெண்கள் சாமி கும்பிட்டு பூஜை செய்வதுடன் தங்களையும் இல்லத்தையும் மங்களகரமாக வைத்து இருப்பார்கள். 'லட்சுமி வரும் நேரம்' என்று விளக்கு வைத்த பிறகு சிலர் யார்க்கும் பணம்கூட தரமாட்டார்கள். ஆனால் இந்த டி.வி. சீரியல்கள் வரத் தொடங்கியதிலிருந்து தினமும் சில மணி நேரமாவது எல்லா வீடுகளிலும் அழுகுரல் கேட்கிறது. ஒருத்தரையொருத்தர் பழிவாங்குவத்ற்காக கடுமையான- கேவலமான வசைமொழிகளை வாரி இறைத்துக் கொண்டிருக்கின்றனர். பொதுவாக வீட்டில் பெரியவர்கள் குழந்தைகளைத் திட்டும் போதுகூட அமங்கலமான வார்த்தைகளை பயன்படுத்தக் கூடாது என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. ஆனால் டி.வி. தொடர்களில் வரும் கேரக்டர்கள் அழுது புலம்பிக் கொண்டு மோசமான அமங்கல வார்த்தைகளை பயன்படுத்துகின்றனர். (உதாரணத்துக்கு... நீ எங்கே உருப்படப் போறே? நாசமாப் போ...! எல்லாம் போச்சு! பாவி! சண்டாளா...!) இதுபோன்ற வார்த்தைகள் வீட்டில் ஒலிக்கக் கூடாது. அப்படி ஒலித்தால் அந்த வீட்டில் மோசமான அதிர்வுகள் ஏற்பட்டு BAD VIBRATIONS உருவாகி வீட்டில் ஏற்கெனவே உள்ள சந்தோஷ அதிர்வுகளை முடக்கும். மோசமான அதிர்வுகள் அதிகமாகும்போது அந்த வீட்டின் சந்தோஷம் காணாமல் போய்விடும். இன்றைக்கு தமிழ்நாட்டில்



உள்ள பல வீடுகளில் பிரச்சனைகள் உருவாகி கணவன் மனைவி பிரியக் கூடிய சூழ்நிலையை உண்டாக்குவது இந்த டி.வி. தொடர்களே! சீரியலில் கஷ்டப்படும் ஒரு பெண்ணைப் பார்த்து பெண்கள் ஏன் கண் கலங்குகிறார்கள்? அவளுக்காக பரிதாபப்பட்டு ஏன் மனம் வெதும்புகிறார்கள் என்று புரியவேயில்லை. பொழுதுபோக வேண்டுமென்றால் டி.வி.யில் எத்தனையோ நல்ல நிகழ்ச்சிகள் உள்ளன. பெண்கள் அந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தால் மனமும் லேசாகும். வீட்டிலும் சந்தோஷம் பொங்கும். தமிழ்நாட்டுப் பெண்கள் மாறுவார்களா?

---

★ எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு ஞானபீட விருது கிடைத்தது பற்றி சர்ச்சை கிளம்பியுள்ளதே?

(பி.பலராமன், விருதுநகர்-1)

★★ ஜெயகாந்தனுக்கு விருது கிடைத்ததில் தமிழ் தெரிந்த எல்லோர்க்கும் சந்தோஷமே. இப்போது சர்ச்சை அதுவல்ல. அந்த விருது கிடைத்த பிறகு அவர் பேசிய பேச்சுதான் சர்ச்சையை கிளப்பியுள்ளது. அவர் பேசிய பேச்சு இதுதான்: 'பிறமொழிக் கலப்பு இல்லாமல் தமிழில் எப்போதும் பேச வேண்டும் என்கிற தமிழ் அறிஞர்கள் தம்மைத் தாமே நக்கிக் கொள்கிற நாய்கள்' என ஜெயகாந்தன் கூறியதுதான் இவ்வளவு பெரிய அமளிக்குக் காரணம். 'தமிழால் வளர்ந்து விட்டு சமஸ்கிருதத்தை நக்கும் ஜெயகாந்தனுக்கு வீசப்பட்ட எலும்புத்துண்டுதான் இந்த ஞானபீட விருது' என்று எழுதிய துண்டுப்பிரசுரங்கள் ஜெயகாந்தனுக்கு பாராட்டு விழா நடக்கும் இடங்களில் ஒட்டப்படுகின்றன. பதவிகளும், விருதுகளும் ஒருவருக்கு கிடைக்கும்போது பணிவு வரவேண்டும். பேச்சில் இனிமை இருக்க வேண்டும். ஆனால் ஜெயகாந்தன் தனக்கு அளிக்கப் பட்ட பாராட்டு விழாவில் பேசும்போது, 'ஞானபீட விருது எனக்கு கிடைப்பதற்கு முன்னால் அதுபற்றி கேட்டு இருந்தால் அது எனது இடது கால் தூசிக்கு சமம்' என்று சொல்ல, விழாவைத் தொகுத்து வழங்கிய கவிஞர்

ஒருவர், 'ஞானபீட விருதுக்கு தனது இடதுகால் தூசு என்ற அந்தஸ்தை வழங்கிய ஜெயகாந்தனுக்கு நன்றி' என்று சொல்லியுள்ளார். ஜெயகாந்தன் மிகச்சிறந்த எழுத்தாளர். அதை எல்லோரும் ஒத்துக் கொள்கிறார்கள். மிகச் சிறந்த மனிதரா என்பதுதான் சர்ச்சையாளர்களின் கேள்வி.

★ காஞ்சி, கும்மிடிப்பூண்டி...?

(எம்.வேலாயுதம், புதுக்கோட்டை-2)

★★ இரட்டை இலை பச்சைப் பசேல்...!

★ கோபப்படக் கூடாது என்று நினைக்கிறேன்... ஆனால் என்னால் முடியவில்லை. கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள என்ன வழி...?

(என்.சாந்தகுமார், மேட்டுப்பாளையம்)

★★ சாந்தகுமார் என்று பெயர் வைத்துக் கொண்டு இப்படி ஒரு கேள்வியா? கோபம் வராத மனிதன் கிடையாது. ஆனால் அந்தக் கோபத்துக்கு நியாயமான ஒரு காரணம் இருக்க வேண்டும். அப்படி வருகின்ற கோபமும் சில விநாடிகளுக்கு மட்டுமே நீடித்துவிட்டு உடனே காணாமல் போய்விட வேண்டும். அற்ப காரணங்களுக்கெல்லாம் ஒருவன் கோபப்பட ஆரம்பித்தால் அவனுடைய உடலில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் அளப்பரிய சக்தி வெகு விரைவிலேயே காணாமல் போய்விடும். சமீபத்திய மருத்துவ ரிப்போர்ட் படி ஒருவர் கோபப்பட்டால் முதலில் பாதிக்கப்படுவது அவருடைய நரம்பு மண்டலம்தான். அந்த நரம்பு மண்டலத்தில் உள்ள லட்சக்கணக்கான நரம்பு செல்கள் கோபப்படும் போது விறைப்படைவதால் அதில் உள்ள உயிர் சக்தி அதிக அளவில் எரிக்கப்பட்டு உடம்பில் உள்ள மயிர்க்கால்கள் மூலமாக வெளியேற்றப்படுகின்றன. இந்த ப்ராசஸ் தொடர்ந்து நடைபெறுமானால் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு பலவிதமான பக்க விளைவுகள் உண்டாகும். ஒருவன் கோபப்படுவதன் மூலம் தன் உடல் ஆரோக்கியத்தை கெடுத்துக் கொள்கிறான். மன அமைதியைத் தொலைத்து விடுகிறான்.



உறவினர்களையும், நண்பர்களையும், பக்கத்து வீட்டுக்காரர்களையும் பகைத்துக் கொள்கிறான். பாவம் செய்தால்கூட ஒருவனுக்கு பிராயச்சித்தம் உண்டு. கோபப்பட்டால் விமோசனமே கிடையாது! (இனிமேல் கோபப்படலாமா... வேண்டாமா என்று யோசனை பண்ணுங்க சாந்தகுமார்)

★ இப்போது வரும் தமிழ்ப்படங்களில் நகைச்சுவை இரட்டை அர்த்தம் கொண்டதாகவும், ஆபாசமாகவும் இருப்பதற்கு யார் காரணம்? படத் தயாரிப்பாளரா...? டைரக்டரா...? வசனகர்த்தாவா...? நடிகரா...?

(பி.உமாசங்கரன், தென்காசி)

★★ விழுந்து விழுந்து சிரிப்பவர்கள்.

★ 'ஏன்தான் இதில் தலையிட்டோமோ?' என்று எப்போதாவது நீங்கள் எண்ணியது உண்டா...?

(ஏ.கனகரத்தினம், பட்டுக்கோட்டை)

★★ இல்லை...! ஒரு பிரச்சனையை அணுகுவதற்கு முன்னால் அதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்பதை ஏற்கெனவே கணித்து விடுவதால் அப்படிப்பட்ட அனுபவம் எனக்கு ஏற்பட்டது இல்லை. நம்மிடம் கேட்டாலன்றி நாம் யார்க்கும் ஆலோசனைகள் சொல்லக் கூடாது. பிறர் விஷயங்களில் மூக்கை நுழைக்காமல் இருந்தாலே நம் நாட்கள் சந்தோஷமாய் கழியும்.

★ பகவத் கீதையில் அப்படி என்னதான் சொல்லப்பட்டிருக்கிறது. எனக்குப் புரியும்படி சுருக்கமாய் சொல்ல முடியுமா...?

(வை.சுப்ரமணியன், திருச்சி-2)

★★ கீதை சொல்வது இதுதான்.

1) How to Live (எப்படி வாழ்வது?)

2) How to Love (எப்படி அன்பு செலுத்துவது?)

3. How to Leave (எப்படி இந்த உலக பந்தத்திலிருந்து விடுவித்துக் கொள்வது?)

(92ம் பக்கம் தொடர்கிறது)

# அர்த்தமுள்ள அரட்டை

விவேக் காலை நேர வாக்கிங்கை முடித்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தபோது, ரூபலா குமுதப் வார இதழை மும்முரமாய் படித்துக் கொண்டிருந்தாள்.

"ரூபி..."

"ம்..."

"எனக்கு டபுள் ஸ்ட்ராங்கா காப்பி வேணும்."

"ஒரு ரெண்டு நிமிஷம் அப்படி உட்கார்ங்க... இந் சிறுகதையை படிச்சுட்டு வந்துடறேன்..."

"என்ன ரூபி ஆச்சர்யமாயிருக்கு! பொதுவா பத்திரிகையில் வர்ற கதைகளைப் படிக்க மாட்டியே...?"

"இந்தக் கதையில் ஒரு புது விஷயம் சொல்லியிருக்காங்க... இண்ட்ரஸ்டிங்காகவும் இருந்தது."

"அப்படியென்ன புது விஷயம்...?"

"ஹைபர்னேஷன்..."

"ஓ...! ஹைபர்னேஷன் தமிழ்நாட்டு எல்லைக்குள்ளேயும் நுழைஞ்சுடுச்சா...?"

"உங்களுக்கு முன்னாடியே தெரியுமா?"

"தெரியுமாவது... அமெரிக்காவில் இருக்கும் ஹட்சின்ஸன் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் ஹைபர்னேஷனைப் பற்றி ஒரு புத்தகமே வெளியிட்டிருக்காங்க... அதை ரெண்டு மாசத்துக்கு முன்னாடியே நான் படிச்சுட்டேன்..."

"இந்தக் கதையிலேயும் 'ஹைபர்னேஷன்' வருது ஆனா எனக்குப் புரியலை. கொஞ்சம் புரியும்படியா நீங்கதான் சொல்லுங்களேன்."

"உயிரோடு இருக்கிற ஒரு மனிதனின் எல்லா

ராஜேஷ்குமார்



உறுப்புகளும் ஒரு சில மணி நேரங்களுக்கு இயங்காமல் நிறுத்தி வைக்கிற நவீன மருத்துவ முறைக்கு பேர்தான் ஹைபர்னேஷன்."

"அது எப்படி உடலின் இயக்கம் நிற்கும்?"

"ரூபி...! மொதல்ல நீ ஒரு உண்மையை புரிஞ்சுக்கணும்... உயிர்கள் பிறப்பதும் பின் ஒரு நாள் அழிவதும் வளர்சிதை மாற்றம் எனப்படும் பரிணாம வளர்ச்சியைப் பொறுத்ததாகும். நம்முடைய உடம்பில் 24 மணி நேரமும் புதிய செல்கள் பிறந்து கொண்டும் பழைய செல்கள் அழிந்து கொண்டும் இருப்பதற்கு பெயர்தான் வளர்சிதை மாற்றம். குழந்தைப் பருவத்தில் செல்கள் வேகமாய் உற்பத்தியாகும். அதே நேரத்தில் அழியும் செல்கள் குறைவாக இருக்கும். இளம் பருவத்தில் செல்கள் வேகமாக வளர்வதால்தான் எல்லா உறுப்புகளிலும் ரத்தத்திலும் வளர்ச்சி தெரிகிறது. பார்வை செல்கள், உணர்ச்சி செல்கள், நுகர் செல்கள், சுவை செல்கள் எல்லாமே, ஒரு மனிதனின் இளம் பருவத்தில் நன்கு வளர்ச்சி அடையும். அந்த சமயத்தில் அவன் ஆரோக்கியமாகவும் இருப்பான். ஆனால் குறிப்பிட்ட வயதுக்குப்பின்; அதாவது சுமார் ஐம்பது வயதுக்குப்பின் வளரும் செல்கள் குறைவாகவும் அழியும் செல்கள் அதிகமாகவும் இருக்கும். அதன் காரணமாக உறுப்புகளின் வேலை செய்யும் திறன் குறைகிறது- ஜீரணசக்தி குறைதல், பார்வை மங்குதல், மூட்டு வலி, கால்வலி காரணமாய் நடக்க முடியாமல் போதல் - இதுபோன்ற குறைபாடுகள் வயது அதிகமாக அதிகமாக அதிகரித்து திடீரென்று ஒருநாள் செல்களின் வளர்ச்சி ஸ்தம்பித்துப்போக - மரணம் ஏற்படுகிறது. இந்த இடத்தில்தான் ஹைபர்னேஷன் டாக்டர்களுக்கு கை கொடுக்கிறது.

"எப்படிங்க...?"

"ஒருவர்க்கு உடனடியாய் இருதய ஆப்ரேஷன் செய்ய வேண்டிய கட்டாய நிலைமை. ஆனால் ஆப்ரேஷன் செய்ய வேண்டிய டாக்டர் வெளியூரில் இருக்கிறார்.

அவர்க்கு தகவல் கொடுத்து அவர் ஊர் வந்து சேர ஆறுமணி நேரம் பிடிக்கும். ஆனால் அதற்குள் நோயாளி இறந்து போய்விடக்கூடிய சூழ்நிலை. இந்த சூழ்நிலையில் அந்த நோயாளிக்கு ஹைபர்னேஷன் சிகிச்சை செய்தால் அவருடைய உடம்பில் உயிர் மட்டும் இருக்கும். உடலின் உறுப்புகள் எந்த வேலையும் செய்யாமல் தற்காலிகமாய் முடக்கப்படும். டாக்டர் வெளியூரிலிருந்து வந்ததும் ஹைபர்னேஷனை நிறுத்திவிட்டு இருதய ஆப்ரேஷனை மேற்கொள்ளலாம். அ[illegible]போல் ஒரு சாலை விபத்து நடக்கிறது. வயதான ஒருவர்க்கு தலையில் அடிபட்டு ரத்தம் போய்க் கொண்டிருக்கிறது. அதே நிலைமை நீடித்தால் அவர் [illegible]ரணம் அடைவது உறுதி. இந்த சூழ்நிலையில் அவர்க்கு ஹைபர்னேஷன் சிகிச்சை செய்தால் ரத்த ஓட்டம் உடனே நின்று ரத்தம் உடம்பினின்றும் வெளியேறுவதைத் தடுக்கும். டாக்டர் ஹாயாய் வந்து நோயாளிக்கு சிகிச்சை தரலாம். ரத்தம் கிடைக்கும் வரை காத்திருந்து நிதானமாக ஆப்ரேஷன் செய்யலாம்...''

''என்னங்க...?''

''ம்...''

''நீங்க சொன்னதெல்லாம் வெளிநாட்டில் நடைமுறைக்கு வந்தாச்சா...?''

''இன்னும் இல்லை... இந்த ஹைபர்னேஷன் சிகிச்சையை இப்போ எலி, முயல் ஆகிய பிராணிகள்மேல் விஞ்ஞானிகள் நடத்தி காட்டியிருக்காங்க. ஹைபர்னேஷன் செய்யப்பட்ட எலியும், முயலும் ஆறு மணி நேரம் வரைக்கும் எந்தவித அசைவும் இல்லாமல் மரக்கட்டைகளாய் இருந்துவிட்டு ஹைபர்னேஷன் சிகிச்சையை நிறுத்தியதும் துள்ளி எழுந்து ஓடினவாம்...''

''முயல், எலி போன்ற பிராணிகளுக்கு எந்த வகையில் ஹைபர்னேஷன் சிகிச்சையைக் கொடுத்தாங்க...?''

''ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட எலியையோ முயலையோ ஒரு சாதாரண கண்ணாடிப் பெட்டிக்குள்



டுவார்கள். அதற்குள் ஒரு காஸ் ட்யூப் மட்டும் ருக்கும். ஒரு பத்து நிமிஷம் கழித்து காஸ் ட்யூப்பை மல்ல திறந்துவிட, ட்யூப்புகள் இருக்கும் ஹைட்ரஜன் ல்பைடு வாயு மெதுவாய் கண்ணாடிப் பெட்டிக்குள் ரவ ஆரம்பிக்கும். வாயு பரவ பரவ ஓடிக் காண்டிருக்கும் எலி மெல்ல மெல்ல தள்ளாடி ப்படியே சுருண்டு படுத்துவிடும். இப்போது எலியின் டலில் உயிர் மட்டுமே ஓடிக்கொண்டிருக்கும். மற்றபடி தன் உடலில் இருக்கும் எல்லா உறுப்புகளின் யக்கங்களும் தற்காலிகமாய் நின்றுபோய்விடும். மிஷத்துக்கு 120 தடவை துடிக்கும் இதயத் துடிப்பு ட்டும் பத்துக்கும் கீழாக குறையும். உடலின் வெப்ப லையும் 98.6 டிகிரி பாரன்ஹீட்டில் இருந்து 51.8 ஆக றையும். மொத்தத்தில் உடலின் 90 சதவீத இயக்கம் ன்றுபோய் பத்து சதவீத இயக்கம் மட்டுமே எலியிடம் ருக்கும். மொத்தம் 6 மணி நேரம் பத்து சதவீத உடல் யக்கத்தில் எலி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும். 6 மணி ரம் கழித்தும் எலிக்கு ஆக்ஸிஜன் கொடுப்பார்கள். எலி மல்ல அசையும். பின் எழுந்து நிற்கும். அடுத்த சில மிடங்களில் பழையபடியே உற்சாகத்தோடு ண்ணாடிப் பெட்டிக்குள் ஓடும். இதயத்துடிப்பு ர்மலுக்கு வந்து உடலின் வெப்ப நிலையும் பழைய லைமைக்கு வந்துவிடும்.''

''மனிதர்களிடம் இந்த ஹைபர்னேஷன் போதுதான் வரும்...?''

''இது சம்பந்தமான ஆராய்ச்சிகள் அமெரிக்காவில் ட்டும் இல்லை, கடந்த 50 ஆண்டுகாலமாய் உலகம் ழுவதும் நடந்துகிட்டுத்தான் இருக்கு. ஆரம்பத்தில் ட், மண்புழு, தேனீக்கள், வண்டு, மீன்கள், வளைகள் இவைகளைப் பயன்படுத்தி ஆராய்ச்சி ண்ணினவங்க அதுக்கப்புறமா எலி, முயலுக்கு ந்தாங்க. இதுல அவங்களுக்கு வெற்றி டைச்சிட்டதால் மனிதர்களிடமும் இதே ஆராய்ச்சியை ய்யப் போகும் காலம் ரொம்ப தூரத்தில் இல்லை...''

''இந்த ஹைபர்னேஷன் ட்ரீட்மெண்ட்டை கண்டுபிடித்தது எந்த நாட்டு டாக்டர்...? அவர் பே என்ன?''

ரூபலா கேட்ட கேள்விக்கு விவேக் என்ன பதி சொன்னார்...?

வாசகர்களே!

உங்களுக்கு பதில் தெரிந்தால் ஒரு போஸ்ட் கார்ஞ எடுங்கள். பதில் எழுதி 25.6.2005 தேதிக்குள் அனுப் வையுங்கள்.

**அர்த்தமுள்ள அரட்டை,**
**க்ரைம் நாவல், ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**
**352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை -5**

இனி சென்றமாத அர்த்தமுள்ள அரட்டையி கேட்கப்பட்ட கேள்வியும் அதற்கான பதிலும்:

கேள்வி: நம் நாட்டில் உள்ள அணுமின் நிலையங்களி இப்போது ஆபத்தான நிலைமையில் உள்ள அணுமி நிலையம் எது?

பதில்: ராஜஸ்தானில் உள்ள 'கோட்டா' அணுமி நிலையம். இந்த அணுமின் நிலையத்திலிருந் வெளிப்படும் கதிரியக்கம் ஆபத்தான அளவி இருப்பதாக அணு விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளார்க

இந்த சரியான பதிலை எழுதி குலுக்கல் முறையி வெற்றி பெற்ற ஐந்து பேர்:

1) எம்.விஜயகுமார், பென்னர்கட்டா (பெங்களூர்).

2) கே.எஸ்.ஸ்ரீதரன், மயிலாப்பூர், சென்னை-4.

3) சி.பிரஜன்ஸிஸ், திருவனந்தபுரம்-1.

4) ஏ.பாலசுப்ரமணியன், தாவணகிரி (கர்நாடகா).

5) திருமதி. நளினிராவ், கோவை-6.





அற்புதமான காரியங்களைச் செய்யப் போகிறேன் என்று சொல்பவர்களிடமும், சித்துக்களைக் காண்பிப்பவர்களிடமும் போக வேண்டாம். அவர்கள் கடவுள் நெறியினின்று வழிதப்பித் திரிபவர்கள். அவர்களுடைய மனம் பிரம்மத்தை அடையும் மார்க்கத்தில் உள்ள சித்துக்கள் என்னும் வலையில் சிக்கிக் கொண்டிருக்கிறது. இந்த சித்துக்களில் அகப்படாதவாறு எச்சரிக்கையாய் இருங்கள்! அவைகளை ஒருபோதும் விரும்ப வேண்டாம். நாடிப் போக வேண்டாம்.

-ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

1



மழை லேசாய் தூறிக் கொண்டிருந்த ஒரு சனிக்கிழமையின் முன்னிரவு நேரம். வானம் இடைவெளி விட்டு உறும, மின்னல் அவ்வப்போது டார்ச் அடித்து, மழை மேகங்கள் எந்தத் திசையில் போய்க் கொண்டிருக்கின்றன என்று வேவு பார்த்தன.

மனநல டாக்டர் மிருத்தியுஞ்சன் கடைசி பேஷண்ட்டைப் பார்த்து அனுப்பிவிட்டு மணிக்கட்டில் நேரம் பார்த்தார்.

மணி பத்தரை.

''மாலினி...'' டாக்டர் குரல் கொடுக்க- வெளியே ர்ஸ் யூனிஃபார்ம் அணிந்த மாலினி உள்ளே வந்தாள்.

''பேஷண்ட்ஸ் யாரும் இல்லையே...?''

''இல்லை டாக்டர்...!''

''சரி... ஜன்னல்களைச் சாத்து. கிளம்பலாம். மழை ந்த நிமிஷமும் பொத்துக்கும் போலிருக்கு...''

மாலினி தலையாட்டிவிட்டு முன்பக்க அறைக்குப் பாய் கண்ணாடி ஜன்னல்களைச் சாத்த முற்பட்டபோது ாசற்படியில் ஏறிக் கொண்டிருந்த இரண்டு பேர் ார்வைக்குக் கிடைத்தார்கள்.

இளைஞர்கள்.

மாலினி ஜன்னலை மூடாமல் அவர்களை நோக்கிப்



போனாள்.

''யார் வேணும்...?''

''டாக்டர் இருக்காரா...?'' இரண்டு பேர்களில் ஒருவன் கேட்டான்.

''இருக்கார்...''

''பார்க்கணும்...''

''ரெண்டு பேர்ல யார் பேஷண்ட்...?''

மோவாய் வழிக்காத, பக்கத்தில் நின்றிருந்த அந்த இளைஞனைச் சுட்டிக் காட்டினான் அவன்.

''ஒரு நிமிஷம்... இப்படி உட்காருங்க...! டாக்டரைக் கேட்டுட்டு வர்றேன்...''

அவர்கள் அங்கிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்து கொள்ள, மாலினி டாக்டரின் அறைக்குள் நுழைந்தாள். வாஷ்பேசினில் கை கழுவிக் கொண்டிருந்தவர் திரும்பினார்.

''என்ன...? மறுபடியும் பேஷண்டா...?''

''ஆமா... டாக்டர்...''

''யாரு...?''

''ரெண்டு யூத்ஸ் வந்திருக்காங்க...''

''வரச் சொல்லு...'' ஈரக்கையை டவலால் துடைத்துக் கொண்டே டாக்டர் மிருத்தியுஞ்சன் நாற்காலிக்கு வந்து சாய்ந்தார். அடுத்த சில விநாடிகளில் அந்த இரண்டு இளைஞர்களும் உள்ளே நுழைந்தார்கள். கைகளைக் குவித்தார்கள்.

''வணக்கம்... டாக்டர்...''

''வாங்க...'' எதிரில் இருந்த நாற்காலிகளைக் காட்டியதும் உட்கார்ந்தார்கள்.

மிருத்தியுஞ்சன் இரண்டு பேர்களையும் உன்னிப்பாய் பார்த்துக் கொண்டே கேட்டார்.

''உங்கள்ல யாருக்கு என்ன ப்ராப்ளம்?''

''இவனுக்குத்தான் டாக்டர்...'' மோவாய் வழிக்காத நபரைக் காட்டினான் மற்றவன்.

''பிரச்னையைச் சொல்லுங்க...''

''டாக்டர்! இவன் பேர் கலிவரதன். என்னோட பேர் காசி. ரெண்டு பேருமே சின்ன வயசிலிருந்தே ப்ரண்ட்ஸ். ப்ளஸ் டு வரைக்கும் ஒரே ஸ்கூல்லதான் படிச்சோம். அதுக்கப்புறம் இவன் படிக்காமே தன் சொந்தத் தொழிலான விவசாயத்தைப் பார்த்தான். நான் எம்.பி.ஏ. படிச்சுட்டு தற்சமயம் ஒரு இன்சூரன்ஸ் கம்பெனியில் வேலை பார்த்துட்டிருக்கேன். ரெண்டு பேருக்கும் வீடு கல்வீரம்பாளையத்தில் இருக்கிறதால அடிக்கடி பார்த்துக்குவோம். மணிக்கணக்கில் பேசிக்குவோம்...''

''கல்வீரம்பாளையம் எங்கே இருக்கு...?''

''மருதமலை அடிவாரத்தில் இருக்கிற ஒரு சின்ன கிராமம் டாக்டர் அது... அங்கிருந்து மருதமலை மூணு கிலோமீட்டர்...''

''சரி... உங்க நண்பர் கலிவரதனுக்கு இப்ப என்ன பிரச்னை...?''

''கடந்த பத்து நாளா இவன் இயல்பாவே இல்லை டாக்டர்...! ஏதேதோ பேசறான். சில நேரங்கள்ல மட்டும்தான் நம்ம ஞாபகம் இருக்கு... அந்தச்சமயத்துல தெளிவாய் இருக்கான். இவனுக்கு என்னாச்சுன்னு இவனுக்கும் தெரியலை... எனக்கும் தெரியலை... அதான் உங்ககிட்டே கூட்டிட்டு வந்தேன்...''

''இப்ப உங்க நண்பர் தெளிவாய் இருக்காரா?''

''தெளிவாய் இருந்ததாலதான் இப்ப உடனடியாய் உங்ககிட்டே கூட்டிட்டு வந்தேன்... டாக்டர்...''

''ஓ.கே! உங்க நண்பர் கலிவரதனுக்கு என்னான்னு இப்ப பார்த்துடலாம்...'' சொன்ன மிருத்யுஞ்சன், கலிவரதனை ஏறிட்டார்.

''கலிவரதன்...! உங்களுக்கு என்னான்னு நீங்கதான் சொல்லணும்... எல்லா விஷயங்களுமே நம் மூளையோடு சம்பந்தப்பட்டதுதான்...! அதை நாம அணுக வேண்டிய முறையில் அணுகினால் எந்த ஒரு பிரச்னையும் இல்லாமே பண்ணிடலாம். மனசுக்குள்ளே எந்த பயமும் வேண்டாம். சொல்லுங்க...''



கலிவரதன் தன் தாடையை மெல்ல தடவிக் கொண்டே டாக்டரிடம் நிமிர்ந்தான்.

''டாக்டர்...! இயற்கையிலேயே எனக்கு ஆன்மீகத்தில் கொஞ்சம் ஈடுபாடு உண்டு. எல்லாக் கோயில்களுக்கும் போவேன். கொஞ்ச நாளைக்கு முன்னாடி கணுவாய்க்குப் பக்கத்தில் உள்ள சமயசஞ்சீவி அனுமார் கோயிலுக்குப் போனேன். நான் போனபோது கோயிலில் யாரும் இல்லை. அது ஒரு மத்தியான நேரம். கோயில் நடையும் பூட்டியிருந்தது. கோயில் திறக்கிற வரைக்கும் அங்கேயிருந்த ஒரு திட்டில் உட்கார்ந்து மரத்துக்கு மரம் தாவிகிட்டிருந்த குரங்குகளை வேடிக்கை பார்த்துக்கிட்டிருந்தேன். அப்போ எனக்குப் பின்னாடி யாரோ வந்து நிக்கிற மாதிரி ஓர் உணர்வு ஏற்பட்டது. திரும்பிப் பார்த்தேன். ஜடாமுடியோடு ஒரு சாமியார் நின்றிருந்தார்...'' கலிவரதன் இந்த இடத்தில் பேச்சை நிறுத்திவிட்டு மௌனமாய் இருக்க, டாக்டர் மிருத்தியுஞ்சன் அவனுடைய தோள் மேல் கையை வைத்தார்.

''ம்... சொல்லு... ஒரு சாமியார் நின்றிருந்தார்... அப்புறம்...?''

கலிவரதன் கஷ்டப்பட்டு எச்சிலை விழுங்கிவிட்டு மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தான்.

''அந்த சாமியார் என்னைப் பார்த்து மெல்ல சிரிக்கவும் நான் கொஞ்சம் பயத்தோடு எழுந்து நின்னேன். அவர் கால்ல விழுந்து கும்பிடணும் போல் தோணிச்சு. கும்பிட்டேன்... அவர் என் தலைமேல கை வெச்சு 'என்னைத் தெரியுதா'ன்னு கேட்டார். நான் 'தெரியலை'ன்னு சொன்னதும் அவர் பலமா சிரிச்சார். அப்படி சிரிச்சப்ப தெரிஞ்ச அவருடைய பல்வரிசை தங்கத்தால செய்ததுபோல் ஜொலித்தது. நான் மெய்மறந்து அவரை பார்த்துக்கிட்டு இருக்கும்போதே அவர் சொன்னார்: 'என்னை எல்லாரும் ஸ்வர்ணதேக ஸ்வாமிகள்ன்னு சொல்லுவாங்க...' நான் அவரை

மறுபடியும் கும்பிட்டேன். 'நீ ஹனுமன் பக்தனா'ன்னு என்கிட்டே கேட்டார். நான் 'ஆமா'ன்னு தலையாட்டியதும், 'எங்கே, ஹனுமன் மேல ஒரு வரி சொல்லு, கேட்போம்'ன்னு சொன்னார். நான் உடனே மனசுக்குள்ளே பாராயணம் பண்ணி வெச்சிருந்த 'ராமதூத... மஹாதீர... ருத்ரவீர்ய... ஸமுத்பவ அஞ்ஜனா கர்ப்ப ஸம்பூத வாயுபுத்திரா நமோஸ்துதே...'ன்னு ஒரு ஸ்லோகம் சொன்னேன்...'' கலிவரதன் மறுபடியும் இந்த இடத்தில் பேச்சை நிறுத்திவிட்டு மௌனமாக, மிருத்தியுஞ்சன் அவனுடைய தோளைத் தட்டினார். ''ம்... சொல்லு... அப்புறம்...?''

''நான் சொன்ன ஸ்லோகம் நல்லாயிருந்ததுன்னு ஸ்வர்ணதேக ஸ்வாமிகள் என்னைப் பாராட்டிட்டு, 'உனக்கு உண்மையான காயத்ரீ மந்திரம் தெரியுமா'ன்னு கேட்டார். 'தெரியாது'ன்னு சொன்னேன். 'நான் உனக்கு சொல்லித்தரட்டுமா'ன்னு கேட்டார். நான் 'சரி'ன்னு சொன்னதும், 'என் பின்னாடி வா'ன்னு சொல்லிட்டு மலைப்படிக்கட்டுகளில் ஏற ஆரம்பிச்சுட்டார். நானும் அவருடைய பின்னாடியே போனேன். ஒரு சின்னப் பையனைப் போல் அவர் மலைப்படிக்கட்டுகளில் தாவித் தாவி ஏறிப் போனார். அவரோட வேகத்துக்கு என்னால ஈடுகொடுக்க முடியலை. உடம்பு பூராவும் வேர்த்து விறுவிறுக்க ஏறிப் போனேன். ஒரு அரை மணி நேரம்! பாறைக் குடைவுக்குப் பின்னாடி தெரிஞ்ச பாழடைந்து போன மண்டபத்துக்குள் நுழைந்தார் அந்த ஸ்வர்ணதேக ஸ்வாமிகள். நானும் பின்தொடர்ந்து உள்ளே போனேன். மண்டபத்துக்குள்ளே ஒரே இருட்டாய் இருந்தது. உள்ளே போன ஸ்வாமிகளைக் காணலை. நான் 'ஸ்வாமி... ஸ்வாமி...'ன்னு குரல் கொடுத்துக்கிட்டே சுற்றும்முற்றும் பார்த்தேன். ஸ்வாமிகள் மண்டபத்தின் ஒரு மூலையில் சம்மணம் போட்டு உட்கார்ந்திருந்தார். உடம்பு பூராவும் ஏதோ தங்கப் பொடி தூவின மாதிரி ஜொலித்தது. 'வா இப்படி!



வந்து என் பக்கத்துல உட்கார்'ன்னு சொன்னார். போய் உட்கார்ந்தேன். 'இன்னும் பக்கத்துல நகர்ந்து வா'ன்னு சொன்னார். நகர்ந்தேன்... அந்த சமயத்துல...''

பேச்சை நிறுத்தினான் கலிவரதன். மிருத்தியுஞ்சன் அவன் தோளைத் தொட்டார்.

''சொல்லு... அந்த சமயத்துல...?''

இறுக்கமான முகத்தோடு அப்படியே உட்கார்ந்திருந்தான் கலிவரதன். கைகளும், கால்களும் ஒருவித நடுக்கத்துக்கு உட்பட்டிருந்தன. அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த காசி, மிருத்தியுஞ்சனை ஏறிட்டான். பதட்டமாய் சொன்னான்.

''டாக்டர்...! கலிவரதன் இப்போ தன்னோட இயல்பான நிலைமையிலிருந்து தொஞ்சம் கொஞ்சமாய் மாறிட்டிருக்கான். இன்னும் ஒரு பத்து நிமிஷத்துக்கு எதுவும் பேசமாட்டான். அப்புறம் அவனோட பேச்சும், நடவடிக்கைகளும் வித்தியாசமாய் இருக்கும். இப்ப உங்ககிட்டே சொன்ன கனுவாய் ஸ்வர்ணதேக ஸ்வாமிகளின். சம்பவத்தை என்கிட்டேயும் சொல்லியிருக்கான். அவன் ஒவ்வொரு முறை சொல்லும் போதும் இதே இடத்துல சரியா நிறுத்திடுவான். அதாவது 'ஸ்வாமிகள் மண்டபத்தின் ஒரு மூலையில் சம்மணம் போட்டு உட்கார்ந்திருந்தார். உடம்பு பூராவும் ஏதோ தங்கப் பொடி தூவின மாதிரி ஜொலித்தது. 'வா இப்படி... என் பக்கத்துல வந்து உட்கார்'ன்னு சொன்னார். போய் உட்கார்ந்தேன். இன்னும் பக்கத்துல நகர்ந்து வான்னு சொன்னார். நகர்ந்தேன். அந்தச் சமயத்துல...'ன்னு சொல்லும் போதே மௌனமாயிடுவான். கைகளும் கால்களும் மெல்ல நடுங்கும். அந்த நடுக்கமெல்லாம் ஒரு பத்து நிமிஷத்துக்குத் தான்! அப்புறம் ஒரு வித்தியாசமான கலிவரதனைத்தான் நாம் பார்க்க முடியும்...''

டாக்டர் மிருத்தியுஞ்சன் காசியிடம் நிமிர்ந்தார்.

''கனுவாய்ல உண்மையிலேயே ஸ்வர்ணதேக ஸ்வாமிகள்ன்னு ஒருத்தர் இருக்காரா?''

''நான் போய் விசாரிச்சேன் டாக்டர்... சமயசஞ்சீவி ஹனுமன் கோயில் குருக்கள் கிட்டேயே கேட்டேன். 'ஸ்வர்ணதேக ஸ்வாமிகள்ன்னு ஒருத்தர் அந்த மலையில் வாசம் செய்யறது உண்மைதான்... ஆனா அவர் அவ்வளவு சுலபத்துல யார் பார்வைக்கும் கிடைக்க மாட்டார். திடீர்ன்னு காட்சி கொடுத்துட்டு மரங்களுக்குப் பின்னாடி மறைஞ்சு போயிடுவார். இந்தப் பத்து வருஷ காலத்துல நானே நாலைஞ்சு தடவைதான் பார்த்து இருக்கேன். மலையின் மேல்பாகத்தில் இருக்கிற ஆதிவாசிகள் ஸ்வாமிகளை அடிக்கடி பார்த்ததாய் சொல்லுவாங்க...'ன்னு கோயில் குருக்கள் சொன்னார்...''

''நீங்க சொல்றதைப் பார்த்தா ஸ்வாமிகள்தான் கலிவரதனை ஏதோ பண்ணியிருப்பார்ன்னு தோணுது...''

காசி புன்னகைத்தான். ''டாக்டர்...! இது விஞ்ஞான யுகம்...! எல்லாமே சயின்ஸ்...! பிள்ளையார் சிலை பாலைக் குடிச்சதாய் சொன்னாலும் சரி... மேரி மாதாவின் கண்ணில் ரத்தம் வடிந்தது என்று சொன்னாலும் சரி... அதுவும் சயின்ஸ்தான்னு விஞ்ஞானிகள் அடித்துச் சொல்கிற காலம் இது. புராண காலம் இல்லை இது. கலியுகம்...! கலிவரதனுக்கு உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் ஏற்பட்டு இருக்கிற பிரச்னைக்கு பக்தி காரணமாய் இருக்க முடியாது டாக்டர். நீங்க ஒரு மனநல டாக்டர். கலிவரதனை சரியானபடி ஹேண்டில் பண்ணி ட்ரீட்மெண்ட் கொடுத்தா அவன் சரியாயிடுவான் டாக்டர்...''

''ஓகே... பத்து நிமிஷத்துக்கு அப்புறம் கலிவரதன் நடவடிக்கைகள் எப்படியிருக்குன்னு பார்க்கலாம். அதைப் பார்த்துட்டுதான் அவர்க்கு எதுமாதிரியான ட்ரீட்மெண்ட் கொடுக்கறதுன்னு முடிவு எடுக்க முடியும்...''

காத்திருந்தார்கள்.

சரியாய் பத்து நிமிஷம்!

கலிவரதனின் உடலில் பரவியிருந்த நடுக்கம் நின்றது.



முகம் ஒரு தெளிவான நிலைமைக்கு வர, கண்களுக்குள் ஒரு ஒளி பரவி நின்றது. சுற்றும்முற்றும் பார்வை அலைந்தது. பின் சுவரில் மாட்டியிருந்த தலை, கபாலம், மூளை வரைபடங்களின் மேல் நிலைத்தது. பார்வை நிலைக்க நிலைக்க கலிவரதனின் உதடுகளில் புன்னகை அரும்பியது.

''இது ஊன் உடம்பு ஆலயமா...?''

கலிவரதன் கேட்ட கேள்விக்கு பக்கத்தில் இருந்த காசி அதே தொனியில் ''ஆமாம்'' என்று சொன்னதும், கலிவரதன் ஒரு பத்து விநாடி தியானத்தில் இருப்பவனைப் போல் கண்களை மூடிக் கொண்டு இருந்து விட்டு பின் திறந்தான். கணீரென்ற குரலில் பேச ஆரம்பித்தான். முன்பு பேசிய கலிவரதனின் குரல் அல்ல அது.

''இந்த ரத்தம் சதை நிரம்பிய உடம்பை இறப்பிலிருந்து எப்படி பாதுகாத்துக் கொள்வது என்று சித்தர்களுக்கெல்லாம் குருவான திருமூலர் சொல்லியிருக்கிறார். அந்த உபாயம் உங்களுக்குத் தெரியுமா...?''

டாக்டர் மிருத்தியுஞ்சன் சுவாரஸ்யமாகி, ''தெரியாது'' என்பது போல் தலையை ஆட்ட, கலிவரதன் வெண்கலக் குரலில் பாட ஆரம்பித்தான்.

''இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றி
துதிக்கையால் உண்போர்க்கு சோரவும் வேண்டாம்.
உறக்கத்தை நீக்கி உணர வல்லார்க்கு
இறக்கவும் வேண்டாம். இருக்கலாமே''

பாடலைப் பாடி முடித்ததும், அறைக்குள் மௌனம். கலிவரதனே பேச்சை ஆரம்பித்தான்.

''என்ன! பாடலின் பொருள் புரியவில்லையா...?''

''புரியவில்லை...''

''புரியும்படியாக சொல்லட்டுமா...?''

''ம்...''

கலிவரதன் ஒரு சித்தரைப் போல் வலது கையை உயர்த்தி வைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்.

நாம் யார்? நம்மைப் படைத்தவர் யார்? நம்மைப் படைத்தவர்க்கும் நமக்கும் என்ன தொடர்பு? எல்லாவற்றுக்கும் மூலமானவரும் நம்மைப் படைத்தவருமான இறைவன் எங்கே இருக்கிறார்? அவரை அடையும் வழிமுறைகள் என்ன? இவை போன்ற கேள்விகளுக்கு பதில் கண்டுபிடிக்க முயன்று அதில் வெற்றி பெற்றவர்கள்தான் சித்தர்கள். கடவுள் எங்கே இருக்கிறார் என்கிற கேள்விக்கு அந்த சித்தர்கள் கண்டுபிடித்த உண்மை என்ன தெரியுமா...? பதில் மூன்றாவது அத்தியாயத்தில்.




"என்னங்க...?"

"சொல்லு... பர்வதம்..."

"நான் ஒரு விஷயம் சொன்னா நீங்க கோபப்படாமே, எரிஞ்சு விழாமே கேக்கணும்..." ராத்திரி பத்து மணியை சுவர்க் கடிகாரம் காட்ட, படுக்கையறைக் கட்டிலில் மல்லாந்து படுத்திருந்த சந்திரசேகரன் ஒருக்களித்து படுத்து தன் மனைவியைப் பார்த்தார்.

"என்ன சொல்லப் போறே?"

"அது... வந்து... வந்து..."

"சொல்லு..."

"கோபப்படலைன்னா சொல்றேன்..."

"படலை... சொல்லு..."

"ஒரு ரெண்டு நாளைக்கு லீவு போடுங்க..."

"எதுக்கு...?"

"திருக்கடையூர் அபிராமி கோயிலுக்குப் போய்ட்டு வரலாம்..."

"இப்ப என்ன திடீர்னு கோயில்?"

"உங்களுக்கு போன வாரமே அறுபது வயசு முடிஞ்சாச்சு. விஷயம் வெளியே யார்க்கும் தெரியக் கூடாதுன்னு நீங்க சொன்னதால பிறந்தநாளைக் கொண்டாடவே இல்லை. ஆனா அறுபது வயசு நிறைஞ்சா ஒருத்தர் திருக்கடையூர் கோயிலுக்குப் போகாமே இருக்கக் கூடாதுன்னு பெரியவங்க



சொல்லியிருக்காங்க. அதனால போயிட்டு வந்துரலாங்க..."

"அட... அறிவு கெட்டவளே...! உனக்கு எத்தனை வாட்டிதான் படிச்சு படிச்சு சொல்றது...? அரசாங்க பொதுப்பணித் துறையில் நான் ஒரு பொறுப்பான உத்யோகத்தில் இருக்கேன். அரசாங்க ரிக்கார்ட்ஸ்படி எனக்கு வயசு ஐம்பத்தேழு. ரிக்கார்ட்ஸ் படி எனக்கு இன்னும் மூணு வருஷ சர்வீஸ் இருக்கு. என்னோட உண்மையான வயசு உன்னைத் தவிர வேற யார்க்கும் தெரியாதபடிக்கு சர்வ ஜாக்ரதையா இருந்துட்டு வர்றேன். இந்த நிலைமையில் நீயும் நானும் திருக்கடையூர் கோயிலுக்குப் போய் சஷ்டியப்த பூர்த்தி பூஜையை பண்ணிட்டு வந்தா என்னாகும் தெரியுமா...? ஜூனியர் விகடனிலேயும், நக்கீரனிலும் கவர் ஸ்டோரி எழுதிடுவானுக... உடனே சீஃப் செக்ரட்டரி கிட்டேயிருந்து எனக்கு மெமோ வரும். நான் போய் அவர்க்கு முன்னாடி கையைக் கட்டிக்கிட்டு நிக்கணும். என்னோட உண்மையான வயசைக் கண்டுபிடிக்கிறதுக்காக ஒரு என்கொய்ரி கமிஷனைப் போட்டு உயிர் எடுத்துடுவாங்க... இதெல்லாம் தேவையாடி...?"

"இதோ பாருங்க... ஒரு மனுஷனோட வாழ்க்கையில் அறுபது வருஷம்ங்கிறது மிகப்பெரிய விஷயம்... அறுபது வயசைப் பூர்த்தி பண்ணினவங்க கண்டிப்பாய் திருக்கடையூர் கோயிலுக்குள்ளே நுழைஞ்சேயாகணும். ஸ்ரீ மார்க்கண்டேயரையும், ஸ்ரீ காலஸம்ஹார மூர்த்தியையும், ஸ்ரீ அபிராமியையும் தரிசனம் பண்ணியேயாகணும்..."

"பண்ணலைன்னா என்னாகும்...?"

"இப்படி குதர்க்கமா பேசாதீங்க... சாமி காரியம்! சரின்னு சொல்லுங்க... ரெண்டே நாள்...! காரை எடுத்துக்கிட்டு போய்ட்டு வந்துடலாம்..."

"சரி... வர்றேன்...! வெறும் தரிசனம் மட்டும் தான்...! சஷ்டியப்த பூர்த்தி பூஜையெல்லாம் வேண்டாம்..."

"இதுக்காவது ஒத்துக்கிட்டீங்களே...! எப்ப

போலாம்? வர்ற வெள்ளிக்கிழமை கிளம்பலாமா...?''

''அப்படியெல்லாம் சட்டுபுட்டுன்னு கிளம்ப முடியாதுடி...! டிபார்ட்மெண்ட்ல ஏகப்பட்ட வேலையிருக்கு. ரெண்டு நாள்ல சென்ட்ரலிலிருந்து நீர்ப்பாசனத்துறை அமைச்சர் வர்றார். அவர்கூட நானும் போய் மூணு, நாலு டேம்களை சுட்டிக்காட்டணும். அவர் டெல்லிக்குப் போன பின்னாடி ஸ்டேட் மினிஸ்டர் வர்றார். அந்த ஆளுக்கு வறட்சி மாவட்டங்களைசுத்திக் காட்டணும்...''

''சரி... எப்பத்தான் கிளம்பலாம்? சொல்லுங்க...''

''இந்த வாரம் போகட்டும். சொல்றேன்...'' அவர் பேசப்பேச- டெலிஃபோன் அடித்தது.

''யார்ன்னு பாரு பர்வதம்...! எவனாவது காண்ட்ராக்ட்காரனாய் இருந்தா அய்யா இன்னிக்கு சீக்கிரமே படுத்து தூங்கிட்டார்ன்னு சொல்லிடு...''

பர்வதம் தலையை ஆட்டிவிட்டு ரிஸீவரை எடுத்து வலது காதுக்கு கொடுத்து செவிமடுத்துவிட்டு கணவனிடம் திரும்பினாள். ''என்னங்க...! கலெக்டரோட பி.ஏ. பேசறார்...''

''கொண்டா... கொண்டா...'' ரிஸீவரை பறிக்காத குறையாய் வாங்கி காதுக்கு ஒற்றினார்.

''வணக்கம் ஸார்...''

''சந்திரசேகர்...! கலெக்டர் உங்களை உடனே பார்க்கணும்னு சொன்னார். நீர்ப்பாசனத்துறை அமைச்சர் சென்ட்ரலிலிருந்து நாளைக்கு மறுநாள் சாயந்தரம் இங்கே வர்றார். அவர் வரும்போது அணைகளின் நீர்மட்டம் குறித்த பிரச்னைகளைப் பேசும்போது சில தகவல்களை அவர்க்கு சொல்லக் கூடாதுன்னு சி.எம். செக்ரட்ரி சொல்லியிருக்காங்க... அதைப் பத்தி கலெக்டர் பேச விருப்பப்படறார். அணைகள் சம்பந்தப்பட்ட ஃபைல் உங்ககிட்ட தானே இருக்கு...?''

''ஆமா... ஸார்...''

''ஃபைல்களை எடுத்துட்டு கலெக்டர் பங்களாவுக்கு வந்துடறீங்களா...? கலெக்டர் உங்களுக்காக அவரோட வரவேற்பறையில் வெயிட் பண்ணிட்டிருக்கார்...''



''உடனே புறப்பட்டு வர்றேன் ஸார்...!''

''ப்ளீஸ்... கம்...''

சந்திரசேகரன் ரிஸீவரை வைத்துவிட்டு மனைவி பர்வதத்தைப் பார்த்தார். ''என்னோட பொழப்பைப் பார்த்தியாடி...? ராத்திரியில் தூங்கக் கூட விட மாட்டேங்கறாங்க. இந்த லட்சணத்துல கோயில் குளத்துக்கு போகணும்னு சொல்றே...!''

சந்திரசேகரன் பரபரவென்று லுங்கியைக் களைந்து விட்டு ஒரு டீஸண்டான ட்ரஸ்ஸுக்கு மாறி, பீரோவுக்குப் போய் ஃபைல்களை அள்ளிக் கொண்டார்.

''பர்வதம்! கதவைச் சாத்தி தாழ்ப்பாள் போட்டுக்கோ...!''

''வர நேரமாகுமா...?''

''ஒரு மணி நேரத்துக்குள்ளே வந்துடுவேன்...''

சந்திரசேகரன் வெளியே வந்து காரில் கிளம்பிப் போனதும், பர்வதம் காம்பௌண்ட் கேட்டையும், வாசல் கதவையும் சாத்திக் கொண்டு உள்ளே வந்தாள். 'ஒரு மணி நேரம்ன்னு சொல்லிட்டுப் போயிருக்கார். எத்தனை மணிக்கு வர்றாரோ?' முனகிக் கொண்டே படுக்கையறைக்குள் கதவைச் சாத்தியவள் 'தூக்கம் வராமல் இருக்க ஒரு மணி நேரத்திற்கு டி.வி. பார்க்கலாம்' என்று நினைத்து ரிமோட் கண்ட்ரோலைத் தேடினாள். தேடிக் கொண்டிருக்கும்போதே டெலிஃபோன் குரல் கொடுத்தது. போய் ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ...''

''நான் கலெக்டரோட பி.ஏ. பேசறேம்மா...! ஸார் வீட்ல இருக்காரா...? கிளம்பிட்டாரா...?''

''கிளம்பிட்டாரே...?''

''அடேடே...!''

''ஏன்...?''

'' 'இந்த ராத்திரி நேரத்துல அவரை ஏன் தொந்தரவு படுத்தணும்...? நாளைக்கு காலையிலேயே பேசிக்கலாமே'ன்னு கலெக்டர் சொல்லிட்டார்...''

''அவர் வந்துட்டிருக்காரே...?''

''செல்ஃபோன் கொண்டு போயிருக்காரா?''

''ஆமா...!''

''அவர்க்கு தகவல் கொடுத்துடறீங்களாம்மா...? என்னோட செல்ஃபோனை சார்ஜ் பண்ணனும்...''

''நோ... ப்ராப்ளம்... நான் தகவல் கொடுத்துடறேன்...'' சொன்ன பார்வதம் இணைப்பைத் துண்டித்து விட்டு, தன் கணவரின் செல்ஃபோன் எண்களை உடனே டயல் செய்தாள்.

என்கேஜ்ட் டோன் கேட்டது.

மறுபடியும் டயல் செய்தாள்.

இந்தத் தடவை ரெக்கார்டட் வாய்ஸ். பெண் குரல். 'இந்த சந்தாதாரர் 'ஸ்விட்ச் ஆஃப்' செய்து இருப்பதால் அவரை இப்போதைக்கு தொடர்பு கொள்ள முடியாது. சிறிது நேரம் கழித்து தொடர்பு கொள்ளுங்கள்...!'

'இந்த மனுஷன் எதுக்காக இப்போ செல்ஃபோனை ஆஃப் பண்ணி வெச்சிருக்கார்...?'

மறுபடியும் டயல் செய்தாள்.

அதே ரெக்கார்டட் வாய்ஸ்.

பார்வதம் களைத்துப் போனவளாய் சோபாவுக்கு சாய்ந்தாள். 'சரி! கலெக்டர் பங்களாவுக்கு போய்விட்டு அவரே திரும்பி வரட்டும்...!'

காத்திருந்தாள்.

நிமிஷங்கள் கரைந்து சுவர்க் கடிகாரம் பதினோரு மணியைக் காட்டியபோது லேசாய் துணுக்குற்ற பார்வதம் மீண்டும் கணவனின் செல்ஃபோனுக்கு டயல் செய்தாள்.

ரெக்கார்ட்டட் வாய்ஸ் தொடர்ந்தது.

'கலெக்டர் பங்களாவுக்குப் போனவர் இந்நேரம் திரும்பியிருக்க வேண்டுமே...?''

'கலெக்டர் பங்களாவுக்கு ஃபோன் செய்து பார்த்தால் என்ன...?

பார்வதம் மேஜை டிராயரைத் திறந்து முக்கியமான டெலிஃபோன் நம்பர்கள் குறித்து வைத்து இருந்த புத்தகத்தை எடுத்து கலெக்டர் பங்களாவின் நம்பரை மனதில் வாங்கிக் கொண்டு டயல் செய்ய- மறுமுனையில் உடனே ரிஸீவர் எடுக்கப்பட்டது.



''கலெக்டர் பங்களாவா...?''

''ஆமா...''

''கலெக்டர்கிட்டே கொஞ்சம் பேச முடியுமா...?''

''நீங்க யாரு...?''

''பொதுப்பணித் துறையில் டேம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் டிபார்ட்மெண்ட்டின் சீஃப் என்ஜினியரா ஒர்க் பண்ற சந்திரசேகரனின் மனைவி பேசறேன்...''

''ஓ..! நீங்களாம்மா... நான் கலெக்டர் பங்களா செக்யூரிட்டி பேசறேன்... சொல்லுங்கம்மா... என்ன விஷயம்?''

''அய்யா... அங்கே வந்து இருக்காரா...?''

''அய்யாவா... வரலையேம்மா...?''

''அங்கேதான் புறப்பட்டு வந்தார்... உள்ளே கலெக்டரோட பேசிக்கிட்டிருக்காரோ என்னவோ...?''

''இல்லீங்கம்மா... கலெக்டர் தூங்கிட்டிருக்கார். ராத்திரி ஒன்பது மணியிலிருந்து இந்த நிமிஷம் வரைக்கும் கலெக்டர் பங்களாவுக்கு யாரும் வரலையேம்மா...''

''உங்களுக்கு நல்லாத் தெரியுமா...?''

''என்னம்மா... இப்படிக் கேட்டுட்டீங்க...? இது கலெக்டர் பங்களா. நான் செக்யூரிட்டி. இந்த பங்களாவுக்குள் இருக்கிற ஒரு சின்ன செடி அசைஞ்சாக் கூட எனக்குத் தெரியும்...''

''சரி...! நான் அய்யாவோட செல்லுக்கு ஃபோன் பண்ணிக்கறேன்...'' சொன்ன பார்வதம் அந்த இணைப்பைத் துண்டித்து விட்டு கணவனின் செல்லுக்கு டயல் செய்தாள்.

அந்த ரெக்கார்ட்டட் வாய்ஸும் இப்போது இல்லை. செல்ஃபோன் ஆழ்கடலாய் நிசப்தம் காத்தது.

பார்வதம் வியர்த்து வழிந்தாள்.

'எங்கே போனார் இவர்...?'

'செல்ஃபோன் என்னாயிற்று...?'

அடிவயிற்றில் ஒரு 'பகீர்' உற்பத்தியாகி பார்வதத்தின் ரத்த ஓட்டத்தில் கலந்தது.

கடவுள் எங்கே இருக்கிறார் என்கிற சிக்கலான கேள்விக் சித்தர்கள் சொன்ன பதில் இதுதான். கடவுள் ந உடம்புக்குள்ளேயே இருக்கிறார். எண்ணற்ற சித்தர்கள இயற்கை உண்மையாகிய இறைவன் இந்த உடலில் இருப்பதையும், அவரை அடைந்து அனுபவிப்பதையு காணும் ஞானத்துக்காகவே தங்கள் வாழ்நாள் முழுவதையு அர்ப்பணித்து இருக்கிறார்கள். அதில் வெற்றியு பெற்றிருக்கிறார்கள்.

3



கலிவரதன் ஏதோ அந்தக்கா சித்தரைப் போல் கணீரென்ற குரலி பேச ஆரம்பித்தான்,

''நான் சொன்ன பாடலின் பொரு இதுதான். சிலர் இடது கையையு பெரும்பான்மையோர் வல கையையும் சாப்பிடுவதற் உபயோகப்படுத்துகிறார்கள் அதேபோல் மூச்சு விடுவதற் மூக்கின் வலது பாகத்தையும், இடது பாகத்தையு உபயோகப்படுத்துகிறோம். இந்த இரண் முறையையும் மாற்ற வேண்டும். யானையி துதிக்கையைப் போல் நம் தொண்டைக்கு மே உள்நாக்கு தொங்கிக் கொண்டு இருக்கிறது. அது இரண் துவாரங்களைக் கொண்ட ஒரு மூக்கு போல் உள்ளது. ஒ மனிதன் இந்த துவாரங்கள் வழியாக சுவாசிக்கவும் உள்நாக்கின் வழியே உண்ணவும் பழகிவிட்டா அவர்களுக்குள் ஒரு புதிய மாற்றம் நிகழ்கிறது. புதி மாற்றம் பெற்ற அவர்கள் கண்ட கண்ட உணவை உண் மாட்டார்கள். சீக்கிரத்தில் களைத்துப் போ மாட்டார்கள். எப்போதும் இன்ப வெள்ளத்தில் மிதந் மரணமில்லாத பெருவாழ்வை வாழ்வார்கள். இதுதா நான் சொன்ன பாடலின் பொருள்...''

கலிவரதன் பேசி முடித்துவிட்டு மௌனமாகிவிட டாக்டர் மிருத்தியுஞ்சன் ஒரு கேலிப் புன்னகையோ கேட்டார்.

''இந்த அரிய விஷயங்களை உங்களுக்குச் சொன்ன



யார் ஸ்வாமி...?''

''இது எல்லாம் நான் படித்து உணர்ந்தது...''

''எதில் படித்தீர்கள்...?''

''பிரம்மஸ்ரீ கணபதி ஸ்வாமிகள் எழுதிய 'ஊன் உடம்பு ஆலயம்' என்ற நூலில்...''

''இது எல்லாம் சாத்தியமா...?''

''அஞ்ஞான இருளில் இருக்கும் மக்களுக்கு இது எல்லாம் சாத்தியமா என்று தோன்றும். ஆனால் மெய்ஞான வெளிச்சத்தில் இருக்கும் மஹா சித்தர்களுக்கு அது சாத்தியமே! உள்நாக்கு வழியாக சுவாசித்தும், அதே உள்நாக்கு வழியாய் சாப்பிட்டும் வந்த காரணத்தால்தான் உடல் ஆரோக்கியத்தோடு ஆயிரக்கணக்கான வருடங்கள் அவர்களால் உயிர்வாழ முடிந்தது. சித்த வித்தைகளைக் கற்றுக் கொண்டு அவர்களால் அற்புதங்கள் செய்ய முடிந்தது...''

மிருத்தியுஞ்சன் பக்கத்தில் இருந்த காசியைப் பார்த்து கண்சிமிட்டி விட்டு கலிவரதனிடம் கேட்டார்.

''சித்தர்கள் அப்படி என்ன அற்புதங்களைச் செய்து விட்டார்கள்?''

கலிவரதன் தன்னுடைய தாடை ரோமத்தை இடதுகை விரல்களால் தடவிக் கொண்டே ஒரு நமட்டுச் சிரிப்பு சிரித்தான்.

''காடைச் சித்தர் பார்வை பட்டு பட்ட மரம் ஒன்று பச்சைப்பசேலென்று துளிர்விட்டது. ஒரு இடையன் பாம்பு தீண்டி இறந்து கிடந்தபோது அவனால் வளர்க்கப்பட்ட பசுக்கள் எல்லாம் சுற்றி நின்று கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தன. அப்போது அந்த வழியாக வந்த சித்தர் திருமூலர் பசுக்களின் நிலை கண்டு இரங்கி அந்த இடையனை உயிர்ப்பித்தார். பல சித்தர்கள் வருங்காலத்தில் என்னென்ன நடக்கும் என்பதை தன் ஞானத்தால் உணர்ந்து பாடல்களாக எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன ஒவ்வொன்றும் இந்த கலியுகத்தில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன...''

காசி கண்ஜாடை காட்டி டாக்டரை முன்னறைக்கு

கூட்டிப் போய், திகதிகப்பாய் பேசினான்.

''இப்படித்தான் டாக்டர்... திடீர் திடீர்ன்னு கலிவரதன் சித்தர் காலத்து விஷயங்களைப் பேசுவான். பேசிக்கிட்டு இருக்கும் போதே திடீர்ன்னு நார்மலுக்கு வந்துடுவான். அரசியல் பேசுவான். டி.வி. பார்ப்பான். எஃப்.எம். கேட்பான்...''

''நேரத்துக்கு சாப்பிடறாரா...?''

''அதெல்லாம் கரெக்டா சாப்பிட்டு தூங்க வேண்டிய நேரத்துல படுக்கைக்கு போயிடுவான். ஆனா கடந்த ஒரு வார காலமாய் ஒரு புதுப்பிரச்னை டாக்டர்...''

''என்ன...?''

''கலிவரதன் சித்தர் மாதிரி சில நேரங்களில் பேசும்போது, கிராமத்தில் இருக்கிற சிலபேர் குறுக்கிட்டு ஏதாவது கேட்பாங்க. அதுக்கு கலிவரதன் பதில் சொல்ல, சில விஷயங்கள் பலிச்சிருக்கு. சிலர்க்கு நோய்கள் குணமாகியிருக்கு. சிலர்க்கு வேலை கிடைச்சிருக்கு... இன்னிக்கு பெருமழை பொழியும்ன்னு சொன்ன ராத்திரி கிராமத்துல கனமழை. என்னிக்குமே ரொம்பாத குளம் நிரம்பிப் போச்சு. இப்படி இவன் ஏதாவது ஒண்ணு சொல்லி அது நடந்துடறதால இவனைப் பார்க்கிறதுக்காக கூட்டம் அலைமோதுது... பேட்டி எடுக்கறேன்னு பத்திரிகைக்காரங்க தொந்தரவு வேறு... இவன் விஷயத்தில் என்ன பண்றதுன்னு தெரியாததினால உங்ககிட்டே இவனைக் கூட்டிட்டு வந்தேன்... இவனுக்கு உண்மையிலேயே என்னான்னு நீங்கதான் கண்டுபிடிக்கணும். குணப்படுத்தணும்...''

டாக்டர் மிருத்தியுஞ்சன் புன்னகைத்தார். ''இது ஒருவகை மனோ வியாதிதான். கலிவரதன் சித்தர் சம்பந்தப்பட்ட புத்தகங்களை நிறையப் படிப்பாரா...?''

''வீடு முழுக்க அதே புத்தகங்கள் தான் டாக்டர்...! அடிக்கடி வைத்தீஸ்வரன் கோயிலுக்கும், சிதம்பரத்துக்கும் போயிடுவான்... தஞ்சை சரஸ்வதி மஹாலுக்குப் போய் அங்கிருக்கிற ஓலைச்சுவடிகளை பிரதி எடுத்துட்டு வந்து படிச்சு படிச்சு பார்ப்பான்...''

''இது ஒரு வகை போபியாதான்...''



''சொன்னதெல்லாம் நடக்குதே டாக்டர்...''

''காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதைதான். எல்லாமே ஒரு 'கோ இன்சிடென்ட்'தான்...! முக்காலமும் உணர்ந்த ஞானிகள் அந்தக் காலத்தில் இருந்தாங்களான்னு எனக்குத் தெரியாது! பட்... இந்தக் காலத்துல அப்படி யாரும் இல்லை. இந்த நாடி ஜோஸ்யம், கைரேகை, ஜாதகம் எல்லாமே மனிதனுக்காக, மனிதனால் உண்டாக்கப்பட்டவை. நான் நம்பறது கடவுளை மட்டுமே...''

''ஓகே... டாக்டர்... கலிவரதன் விஷயத்துல என்ன பண்ணலாம் டாக்டர்...?''

''வெள்ளியங்கிரி மலையடிவாரத்தில் நான் ஒரு ஹாஸ்பிடலைக் கட்டியிருக்கேன் தெரியுமா...?''

''தெரியும் டாக்டர்... பேருகூட மந்த்ரா மனநல மருந்தகம்...''

''கரெக்ட்...! அங்கே கலிவரதனை அட்மிட் பண்ணி ஒரு மாசம் ட்ரீட்மெண்ட் கொடுத்தா உங்க ஃப்ரெண்டை சித்தர் போபியாவிலிருந்து மீட்டுடலாம். இவரோட பேரண்ட்ஸ் என்ன பண்றாங்க...?''

''விவசாயம்தான் டாக்டர்...''

''ட்ரீட்மெண்டுக்கு பணம் கொஞ்சம் அதிகமா செலவாகும். பரவாயில்லையா?''

''பணம் ஒரு பிரச்சனையே கிடையாது டாக்டர். வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன்தான் கலிவரதன். அவனுக்கு இந்தப் பிரச்னையிலிருந்து விடுதலை கிடைச்சா போதும் டாக்டர்...''

''தென்... நோ... ப்ராப்ளம்... நாளைக்கே அவரை ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணிடுங்க... காலையில் பத்து மணியிலிருந்து ஒரு மணி வரைக்கும்தான் மந்த்ரா ஹாஸ்பிடல்ல நான் இருப்பேன்...''

''நாங்க நாளைக்கு காலையில் பதினோரு மணிக்கு வர்றோம் டாக்டர்...''

''வாங்க...!''

இருவரும் மறுபடி உள்ளறைக்குப் போனார்கள். கலிவரதன் நாற்காலியில் கண்மூடி உட்கார்ந்திருந்தான்.

சத்தம் கேட்டு கண்களைத் திறந்தான். காசி மெல்ல நடந்து போய் அவனுடைய தோளைத் தொட்டான்.

''கலி! புறப்படலாமா...?''

''ம்...'' இன்னமும் அதே சித்தர் நிலை. பார்வை எங்கோ நிலைத்து இருந்தது. நாற்காலியை விட்டு இறங்கும் போது மிருத்தியுஞ்சனிடம் திரும்பினான்.

''டாக்டர்...!''

''என்ன...?''

''உங்களிடம் ஒரு விஷயம் சொல்லலாமா?''

''ம்... சொல்லலாமே...?''

''நீங்கள் எனக்கு சிகிச்சை தரப்போகிறீர்கள். இல்லையா...?''

''ஆமாம்...''

''வேண்டாம்... அந்த முயற்சி வேண்டாம்...!''

''ஏன் வேண்டாம்?''

''அது ஒரு விஷப்பரீட்சை...''

டாக்டர் புன்னகைத்தார். ''எனக்கு பரீட்சை எழுத ரொம்பவும் பிடிக்கும்''

''சொன்னால் கேளுங்கள்... எனக்குள் ஏற்பட்டிருக்கின்ற இந்த மாற்றம் எனக்குக் கிடைத்த வரம். சாபம் இல்லை. இந்த வரத்தை நான் சந்தோஷமாய் அனுபவித்துக் கொண்டு இருக்கிறேன். அதைக் கெடுக்க வேண்டாம்...''

டாக்டர் புன்னகைத்தார்.

''உங்களுக்கு கிடைத்து இருப்பது வரம் இல்லை. ஒரு வகையான மனோ வியாதி. அந்த வியாதி குணமானால் நீங்கள் இன்னமும் சந்தோஷமாய் இருப்பீர்கள்...''

''டாக்டர்! விதி உங்களோடு விளையாடுகிறது...''

''நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை...''

''விஷயத்தை உடைத்தே சொல்லி விடட்டுமா...?''

''சொல்லுங்கள்...''

''என்னை மருத்துவமனையில் வைத்து சிகிச்சையளித்து குணப்படுத்தி விட்டால் நான் குணமான அடுத்த விநாடியே உங்களுக்கு மரணம்... இது சித்தர்களின் சத்திய வாக்கு...''



சித்த வித்தை என்றால் என்ன? சித்தர்கள் நம் உடம்பின் தத்துவங்களை நன்கு உணர்ந்தவர்கள். இந்த உடம்பை நோய் நொடியின்றி நித்தியமாக வைத்துக் கொண்டு வாழும் ரகசியத்தை அறிந்தவர்கள். தாங்கள் பெற்ற நிலையான உடலைப் போல் மக்கள் எல்லோரும் பெற்று அவர்கள் நல்ல ஆரோக்கியத்தோடு நீண்ட நாட்கள் வாழ வேண்டும் என்பது சித்தர்களின் விருப்பம். அந்த ரகசியத்தை தெரிந்து கொள்வதுதான் சித்த வித்தை.

## 4



பார்வதம் அழுவதற்குக் கூட உடம்பில் திராணியில்லாமல் துவண்டு போய் உட்கார்ந்திருக்க, இன்ஸ்பெக்டர் கலையரசன் நிதானமான குரலில் விசாரணையை நடத்திக் கொண்டிருந்தார்.

''இதோ பாருங்கம்மா... உங்க கணவர் காணாமே போயிட்டாருன்னா அதுக்குப் பின்னாடி வலுவான காரணம் கண்டிப்பாய் இருக்கும்... நல்லா யோசனை பண்ணுங்க... அவர்க்கு எதிரிகள்ன்னு சொல்ற அளவில் யாராவது இருக்காங்களா?''

''அப்படி யாரும் கிடையாது...''

''சமீபத்துல அவர்க்கு மிரட்டல் கடிதம் ஏதாவது வந்ததா...?''

''இல்லை...''

''அவர்க்கு கீழே பணியாற்றுகிற ஊழியர்கள் யாருடனாவது உங்க கணவர்க்கு மனவேற்றுமை இருந்ததா...?''

''அவர்க்கு கோபமே வராது. தனக்கு கீழே வேலை செய்யற பணியாட்கள் கிட்டே மரியாதைக்குறைவா பேசி நான் பார்த்தது இல்லை...''

''உங்களுக்கு ஒரு பொண்ணுன்னு சொன்னீங்க. அந்தப் பொண்ணை அமெரிக்காவில் வேலை பார்க்கிற ஒரு ஸாஃப்ட்வேர் என்ஜினியர்க்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்கீங்க இல்லையா...?''

''ஆமா...''

''காதல் கல்யாணமா?''

''இல்லை... அரேன்ஜ்ட் மேரேஜ்...''

''சொத்தந்துல ஏதாவது கன்னட சச்சரவுகள், சொத்துப் பிரச்னை... கோர்ட்ல கேஸ் ஏதாவது உண்டா...?''

''இல்லை...''

''என்னம்மா நீங்க...! ஏதாவது சந்தேகப்படும்படியான விஷயத்தை சொன்னாத்தானே... அதை வெச்சுக்கிட்டு... நாங்க இன்வெஸ்டிகேட் பண்ண முடியும்...? இப்படி எல்லாத்துக்கும் 'இல்லை... இல்லை'ன்னு சொன்னா நாங்க கேஸை எங்கேயிருந்து ஆரம்பிக்க முடியும்...?''

பர்வதம் அழுது கொண்டு மௌனமாய் இருக்க, இன்ஸ்பெக்டர் கலையரசன் தொடர்ந்தார்.

''சம்பவம் நடந்து பனிரெண்டு மணி நேரம் ஆயிடுச்சும்மா... எதிரிகள் யாராயிருக்கும்ன்னு ஒரு சின்ன 'க்ளூ' கொடுத்தாக்கூட போதும். நாங்க எல்லா விபரங்களையும் தோண்டி எடுத்துடுவோம்...''

அவர் சொல்லிக் கொண்டிருக்க- மாடியிலிருந்து சப்-இன்ஸ்பெக்டர் மாதவன் கீழே இறங்கி வந்தார். கலையரசன் கேட்டார்.

''என்ன மாதவன்... மிஸ்டர் சந்திரசேகரனோட பர்சனல் அறையை செக் பண்ணிப் பார்த்தீங்களா...?''

''பார்த்தேன் ஸார்... எல்லாமே ஆபீஸ் ஃபைல்கள். கேஸுக்கு உபயோகப்படுகிற மாதிரி எதுவும் கிடைக்கலை. டயரி ஒன்னு கிடைச்சுது. ஸ்டேஷனுக்கு கொண்டு போய் புரட்டிப் பார்க்கணும்...''

கலையரசன் ஏதோ சொல்ல முயன்ற விநாடி- அவருடைய செல்ஃபோன் அழைத்தது. எடுத்து ''எஸ்'' என்றார். போலீஸ் கண்ட்ரோல் ரூமிலிருந்து சி.ஓ. பேசினார்.

''மிஸ்டர் கலையரசன்...! நீங்க இப்போ எங்கே இருக்கீங்க...?''

''சந்திரசேகரன் வீட்லதான்...!''



''சரி... நீங்க உடனடியாய் குறிஞ்சி நகர் எக்ஸ்டென்ஷன் ஏரியாவுக்கு வாங்க...''

''ஏன், என்ன விஷயம்?''

''அங்கே இருக்கிற கருவேலமரக் காட்டுக்குள்ளே காணாமப் போன சந்திரசேகரனோட ஸான்ட்ரோ கார் நிக்குது. காரோட கண்ணாடிக் கதவுகள் எல்லாப் பக்கமும் ஏற்றப்பட்டு சென்ட்ரலைஸ்ட் லாக்கால் பூட்டப்பட்டிருக்கு. காரோட டிக்கி போர்ஷன்ல ரத்தக்கறைகள் தெரியுது. கார்க்கு உள்ளே பின்சீட்டில் யாரோ குப்புற விழுந்து கிடக்கிறதாய் தகவல்...''

''இதோ...! ஸ்பாட்டுக்கு வந்துகிட்டிருக்கோம்...''

கலையரசன் செல்ஃபோனை அணைத்தார்.

> இரவு பகல் இருபத்தி நாலு மணி நேரமும் இடைவிடாமல் நாம் சுவாசித்துக் கொண்டு இருக்கிறோம். இது நம் உடலில் நம்மை அறியாமல் இயல்பாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கும் ஒரு நிகழ்ச்சி. இதன் மூலமாக நம் உடலுக்கு வேண்டிய பிராணவாயு கிடைத்துக் கொண்டு இருக்கிறது. இருந்தாலும் நம்முடைய ஜீவசக்தி சிறுகச் சிறுக குறைந்து கொண்டே வருகிறது. ஜீவசக்தியின் ஆற்றல் முழுவதும் குறைந்தவுடன் மரணம் ஏற்பட்டு விடுகிறது.




வெள்ளியங்கிரி மலையடிவாரம்.

நீலச்சாயம் பூசிக் கொண்ட மலைகள் பின்னணியில் தெரிய, மந்த்ரா மனநல மருத்துவமனை ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் வசதியாய் உட்கார்ந்திருந்தது. மருத்துவமனையின் வாசலிலிருந்து உட்கட்டிட புறப்பு வரை திரும்பிய பக்கமெல்லாம் சின்னச் சின்ன அறிவிப்புகள் பெயர்ப் பலகைகளில் தெரிந்தன.

வாடகைக் காரை விட்டு இறங்கிய க்ரியும், கவிவரதனும் பெயர்ப் பலகைகளில் இருந்த அந்த அறிவிப்புகளை படித்துக் கொண்டே நடந்தார்கள்.

மனநலம் பாதிக்கப்பட்டவர்கள்
நோயாளிகள் அல்ல;
குழந்தைகள்.

நின்று வேடிக்கை பார்க்காதீர்கள்.
சைகை காட்டாதீர்கள்.

இவர்கள் குணமடைய மருந்து உங்களிடமே
இருக்கிறது. அந்த மருந்துக்குப் பெயர் அன்பு.

பைத்தியம் என்ற வார்த்தையை
இந்த மருத்துவமனையின் வளாகத்துக்குள்
பயன்படுத்த வேண்டாம்.

நாளைக்கு ஒருவேளை நீங்களும் இங்கே
வரக்கூடிய கட்டாயம் நேரிடலாம்.
எனவே யாரையும் கேலி செய்ய வேண்டாம்.

எல்லா அறிவிப்புகளையும் படித்துக் கொண்டே வந்த கலிவர்தன், காசியிடம் திரும்பினான். ''காசி...!''

''ம்...''

''டாக்டர் மிருத்தியுஞ்சன் உண்மையிலேயே மனிதாபிமானம் உள்ள ஒரு டாக்டர்தான்...! என்னோட பிரச்னையைக் குணப்படுத்திடுவார் என்கிற நம்பிக்கை இந்த ஹாஸ்பிடலின் காம்பௌண்ட்டுக்குள்ளே நுழையும் போதே வந்துடுச்சு... ஒவ்வொரு போர்டிலும் என்ன ஒரு அழகான வாக்கியம் பார்த்தியா...?''

காசி புன்னகைத்தான். ''மனநல மருத்துவத்தில் இன்னிக்கு தமிழ்நாட்டிலேயே நம்பர் ஒன் டாக்டர் இவர்தான். இவர் வெளிநாடுகளுக்குப் போய் படிச்சுட்டு வந்திருந்தாலும் பேஷண்ட்டுகளுக்கு ஆங்கில மருத்துவ முறைப்படி ட்ரீட்மெண்ட் தர்றது கிடையாது. ட்ரீட்மெண்ட் எல்லாமே வெள்ளியங்கிரி மலையில் கிடைக்கிற மூலிகைகளை வெச்சுத்தான்! இந்த ஹாஸ்பிடலுக்கு வர்ற பத்து நோயாளிகளில் ஒன்பது பேர் மூணு மாசத்துக்குள்ளாகவே குணமாகிப் போயிடறாங்களாம். பாக்கி ஒருத்தர்க்கு ஆறு



மாசத்துக்குள்ளே குணம் கிடைக்குதாம்...''

''என்னைக் குணப்படுத்திடுவாரா?''

''டேய் கலி! அவர்க்கு அந்த நம்பிக்கை இல்லேன்னா இன்னிக்கு இங்கே வரச் சொல்வாரா...? நேத்திக்கு நீ அவரோட க்ளினிக்குக்குப் போகும்போது இப்ப இருக்கற மாதிரி நார்மலா இருந்தே! அங்கே போய் அவர்கிட்டே பேசிட்டு இருக்கும்போதே நீ சித்தர் நிலைக்குப் போயிட்டே...! அந்த சமயத்துல நீ பேசின ஒவ்வொரு வார்த்தையையும் ரசிச்சார். உனக்கு ஏற்ற மாதிரியே பேசினார். நீ சித்தர் நிலையில் இருக்கும் போது அவர்க்கு நீ ஒரு எச்சரிக்கையைக் கொடுத்தே... அந்த எச்சரிக்கையைக்கூட அவர் ஒரு பொருட்டா எடுத்துக்காமே ஸ்போர்ட்டிவா எடுத்துக்கிட்டார்...''

''டேய் காசி...! நீ என்ன சொல்றே... நான் சித்தர் நிலையில் இருக்கும்போது அவரை எச்சரிக்கை பண்ற மாதிரி பேசினேனா?''

''ஆமா...!''

''அப்படி என்ன பேசினேன்...?''

''டாக்டர் இதைப்பத்தி உன்கிட்டே பேசவேண்டாம்ன்னு சொல்லியிருந்தார்...! இருந்தாலும் சொல்றேன். நீ சித்தர் நிலையில் இருக்கும்போது டாக்டர் கிட்டே சொன்னது இதுதான். 'டாக்டர்! எனக்குள் ஏற்பட்டிருக்கிற இந்த மாற்றம் எனக்குக் கிடைத்த வரம். சாபம் இல்லை. இந்த வரத்தை நான் சந்தோஷமாய் அனுபவித்துக் கொண்டு இருக்கிறேன். அதைக் கெடுக்க வேண்டாம். எனக்கு எந்த சிகிச்சையும் வேண்டாம். மீறி என்னை மருத்துவமனையில் வைத்து சிகிச்சை அளித்து குணப்படுத்திவிட்டால் நான் குணமான அடுத்த விநாடியே உங்களுக்கு மரணம் - இது சித்தர்களின் சத்தியவாக்கு.' ''

கலிவரதனின் முகம் மாறியது.

''நான் அப்படியா சொன்னேன்?''

''நீ சொல்லலை... உனக்குள் இருக்கிற வேண்டாத குரல் சொன்னது அது...''

''டாக்டர் அதைக் கேட்டுட்டு என்ன சொன்னார்?''

''ரிச்சார்... 'இந்த கிளி ஜோஸ்யமெல்லாம் என்கிட்டே வேண்டாம் சித்தரே'ன்னு கேலி பண்ணினார்...''

''அப்படீன்னா... நான் சொன்னதை அவர் சீரியஸா எடுத்துக்கலை...?''

''உன்னோட பிரச்னையையே அவர் சீரியஸா எடுத்துக்கலை. சித்தர் சம்பந்தப்பட்ட கண்ட புஸ்தகங்களை படிச்சதோட விளைவு- மூளையின் நியூரான்களில் ஒரு ஸ்தம்பிதம் ஏற்பட்டிருக்கு... அந்த ஸ்தம்பிதம்தான் வேண்டாத கனவுகளை உற்பத்தி பண்ணிக்கிட்டு இருக்குன்னு சொன்னார்...''

''நான் சித்தர் நிலையில் இருக்கும்போது டாக்டர்கிட்டே ஏதாவது மரியாதைக் குறைவா பேசிட்டேனா...?''

''அந்த சித்தர் நிலையில் இருக்கும்போதுதான் டாக்டர் கிட்டே ரொம்பவும் மரியாதையோட பேசினே...''

இருவரும் மெல்ல நடந்து மருத்துவமனையின் வரவேற்பறைக்கு வந்தார்கள். டாக்டரின் அறை கீழ்த்தளத்திலேயே இருந்தது.

இரண்டு உதவி டாக்டர்களுக்கு ஏதோ இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்துக் கொண்டிருந்த டாக்டர் மிருத்யுஞ்சன், காசியையும், கவிவரதனையும் பார்வையில் வாங்கியதும் புன்னகைத்தார்.

''ஒரு நிமிஷம்!'' என்று சொல்லி, உதவி டாக்டர்களிடம் பேசி அவர்களை அனுப்பிவிட்டு கவிவரதனிடம் வந்தார் டாக்டர் மிருத்யுஞ்சன்.

''என்ன சித்தரே...! எப்படி இருக்கீங்க...?''

''மன்னிக்கணும் டாக்டர்... நான் சுயநினைவில் இல்லாமல் சித்தர் நிலையில் இருக்கும்போது உங்களை பயமுறுத்தற மாதிரி ஏதேதோ பேசிட்டேன் போலிருக்கு... காசி இப்பத்தான் சொன்னான்...''

''அதை விடுங்க கவிவரதன்...! நீங்க இப்போ நார்மலாத்தானே இருக்கீங்க...?''

''ஆமா...'' என்று தலையசைத்த



கவிவரதன், ''டாக்டர்! நேத்து ராத்திரி உங்களை க்ளினிக்கில் வந்து பார்த்துட்டு போன பிறகு நள்ளிரவு ஒருமணி வரைக்கும் சித்தர் நிலையில் இருந்தேன். அதுக்கப்பறம் சுய உணர்வுக்கு வந்துட்டேன். அதுக்குப் பிறகு இந்த நிமிஷம் வரை எனக்கு அந்த சித்தர் நிலை வரலை... பொதுவா மூணு மணி நேரத்துக்கு ஒரு தடவை ஒரு பத்து நிமிஷத்துக்காவது அந்த நிலை வரும்...''

''ஸோ... என்கிட்டே வந்ததுமே உங்களுக்குள்ளே ஒரு மாற்றம் தெரியுதுன்னு சொல்லுங்க...''

''கண்டிப்பா டாக்டர்...''

''சந்தோஷம்...! இப்படி வந்து உட்காருங்க கவிவரதன்! இன்னிக்கு நீங்க... நேற்றை விட தெளிவாய் இருக்கீங்க... உங்ககிட்டே சில கேள்விகளைக் கேட்டு தெளிவுபடுத்திக்கிட்ட பின்னாடிதான் நான் உங்களுக்குத் தரப்போகிற சிகிச்சை முறைகளைப் பத்தி பேச முடியும்...''

''கேளுங்க டாக்டர்...''

''கனுவாய் ஸ்வர்ணதேக ஸ்வாமிகள் உங்களை ஒரு மலைக்குகைக்கு கூட்டிட்டுப் போனதாய் சொன்னீங்க... அவர் சம்மணம் போட்டு உட்கார்ந்துட்டு உங்களை 'பக்கத்துல வா'ன்னு கூப்பிட்டார் இல்லையா?''

''ஆமா...''

''நீங்களும் போனீங்க...?''

''ஆமா டாக்டர்...''

''உங்க காதுல அவர் என்ன சொன்னார்...?''

''அது... வந்து... அது வந்து... டாக்டர்...''

''ம்... சொல்லுங்க...!''

''அடேய்...! மானுட ஜந்தே...!'' கவிவரதன் திடீரென்று கோபாவேசமாகி டாக்டர் மிருத்யுஞ்சனைப் பிடித்து மூர்க்கமாய்த் தள்ள- டாக்டர் ஒரு பந்து போல் எறியப்பட்டு சுவர் மூலையில் போய் விழுந்தார். ஒரு பொட்டலம் மாதிரி மடங்கினார்.

''டா... டாக்டர்...!'' காசி ஓடிப்போய் அவரைத் தூக்கினான். கவிவரதன் கோபத்தில் மூச்சிரைத்து சுற்றும்முற்றும் பார்த்து மேஜைமேல் உட்கார்ந்து

பத்மாசனம் போட்டான். தன் இடதுகையின் ஆட்காட்டி விரலை உயர்த்திக் கொண்டு டாக்டர் மிருத்தியுஞ்சனை கோபமாய்ப் பார்த்தான்.

''உன்னோட விபரீத விளையாட்டை என்னோடு ஆடாதே...! ஒதுங்கிப் போயிடு... நான் கடலுக்கு அடியில்- ஆயிரம் அடி ஆழத்தில் உட்கார்ந்து தவம் செய்யும் வாசி சித்தன்... என்னை நான்கு சுவர்க்குள் அடைத்து அபாயத்தை விலைக்கு வாங்காதே... என்னை வெளியே அனுப்பி வை...''

காசி பயத்தில் உறைந்து போய் நிற்க, டாக்டர் மிருத்தியுஞ்சன் முழங்கையில் ஏற்பட்ட ஒரு ரத்தக்காயத்தையும் பொருட்படுத்தாமல் இண்டர்காம் டெலிஃபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்து நிதானமான குரலில் பேசினார்.

''யாரது...? பரமசிவமா...? நீ ஒரு காரியம் பண்ணு! ஒரு நாலைஞ்சு ஆர்டர்லிகளை கூட்டிக்கிட்டு என்னோட ரூமுக்கு உடனே வா... லேட் பண்ண வேண்டாம். ஒரு மூர்க்கமான பேஷண்ட்டை மடக்கணும். இரும்புச் சங்கிலியும், லாக்கும் கொண்டாந்துடு. அப்புறம்... நர்ஸ் யாராவது பக்கத்துல இருக்காங்களா...?''

''ஸ்டாஃப் நர்ஸ் வசந்தி இருக்காங்க டாக்டர்...''

''பேசச் சொல்லு...''

அடுத்த சில விநாடிகளில் வசந்தி பேசினாள்.

''டாக்டர்...''

''வேலியம் இஞ்செக்‌ஷன் ஒண்ணை உடனே எடுத்து வா. ஹெவி டோஸ்... பனிரெண்டு மணி நேரத்துக்கு பேஷண்ட் கண்ணை விழிக்கக் கூடாது...''

''எஸ்... டாக்டர்...''

மிருத்தியுஞ்சன் ரிஸீவரை வைத்துவிட்டு மேஜையின் மேல் பத்மாசனம் போட்டு உட்கார்ந்திருந்த கலிவரதனைப் பார்த்தார். அவன் அவரையே வெறித்தான். கண்கள் விரிந்து அதில் கோபச் சிவப்பு பரவியிருந்தது. மெல்ல அவனை நோக்கி நகர, காசி குறுக்கே வந்தான்.

''வேண்டாம் டாக்டர்...! கலிவரதனோட நிலைமை



இப்போ சரியில்லை. அவன் இவ்வளவு மூர்க்கமாய் பேசி நான் பார்த்தது இல்லை. தயவுபண்ணி அவன் பக்கத்துல போகாதீங்க டாக்டர்...''

மிருத்தியுஞ்சன் புன்னகைத்தார். ''டாக்டரைப் பார்த்து பேஷண்ட்டோ, பேஷண்ட்டைப் பார்த்து டாக்டரோ பயப்படக் கூடாது. அப்படி பயப்பட்டா அது ரெண்டு பேர்க்குமே நல்லது இல்லை... என்னுடைய ஹாஸ்பிடல் வளாகத்துக்குள் வந்துட்ட கலிவரதனை இனிமே குணமாக்கி சந்தோஷமா வழியனுப்பி வைக்க வேண்டியது என்னோட கடமை...''

''டாக்... டர்...''

''என்ன... காசி...?''

''எதுக்கும் கொஞ்சம் யோசனை பண்ணி...''

''யோசனை பண்றதா...? எதுக்காக...?''

''கலிவரதன் இவ்வளவு கோபப்பட்டு நான் பார்த்தது இல்லை. அதுவுமில்லாமே...''

''ம்... சொல்லுங்க...''

''இன்னிக்குத்தான் முதன்முதலாய் தனக்குள்ளே இருக்கிற சித்தர் பேரைச் சொல்லியிருக்கான்...''

''ஓ...! அந்த வாசி சித்தர் கதையா?'' சிரித்த டாக்டர் சொன்னார். ''இதோ பாருங்க காசி... உங்க ஃப்ரண்டோட உடம்புக்குள்ளே எந்த சித்தனும் கிடையாது. எல்லாமே இல்யூஷன்ஸ்...! நீங்க அம்புலிமாமாவில் வர்ற கதைகளைப் படிச்சுட்டு அதை நிஜம்ன்னு நம்புவீங்களா...?''

''இல்லை...''

''அது மாதிரிதான் கலிவரதன் சொன்ன வாசி சித்தர் கதையும்...! ஒரு அஞ்சு வயசுக் குழந்தைகிட்டே இதைச் சொல்லிப் பாருங்க. 'போங்க மாமா... காதுல பூ வைக்காதீங்க'ன்னு சொல்லிட்டுப் போயிடும்...''

மிருத்தியுஞ்சன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே காசி திடீரென்று கத்தினான்.

''டாக்டர்...! கீழே குனிங்க...''

டாக்டர் கீழே குனிந்த விநாடி-

அவருடைய தலைக்கு மேல் கண்ணாடியாலான

பேப்பர்வெயிட் ஒன்று ஏவுகணை மாதிரி பறந்து எதிரில் இருந்த கண்ணாடி ஜன்னலை உடைத்துக் கொண்டு வெளியே போய் விழுந்தது.

ஒரு மனிதன் ஒரு நாளைக்கு 21,600 முறை சுவாசிக்கிறான் என்பதையும், அந்த சுவாசம் படிப்படியாகக் குறைந்து சிரசுக்கு உள்ளேயே சுவாசிக்கும் நிலை ஏற்படுமானால் அவன் ஆயுள் நீடிக்கும் என்பதையும் சித்தர்களின் தத்துவம் தெளிவாக உணர்த்துகிறது.
-பிரம்மஸ்ரீ கணபதி ஸ்வாமிகள்.



குறிஞ்சி நகர் எக்ஸ்டென்ஷன் கிட்டத்தட்ட நகரின் கோடியில், கருவேல மரங்களுக்கு நடுவில் மண்பாதையோடு இருந்தது. இரண்டொரு கட்டிடங்கள் சிமெண்ட் பூச்சு இல்லாமல் செங்கல் உடம்போடு இருந்தது.

இன்ஸ்பெக்டர் கலையரசன் ஸ்பாட்டுக்குப் போய்ச் சேர்ந்தபோது லோக்கல் எஸ்.ஐ. ஒருவர் எதிர்ப்பட்டு சல்யூட் வைத்தார்.

''கார் எங்கே...?''

''உள்ளுக்குள்ளே நிக்குது ஸார்...''

''காரோட லாக்கை ஓப்பன் பண்ணிட்டீங்களா?''

''ஃபாரன்ஸிக் பீப்பிள் இப்பத்தான் ஸார் வந்தாங்க. நவ் தே ஆர் ட்ரையிங்...''

''காரை மொதல்ல பார்த்தது யாரு...?''

''ஒரு கட்டிட மேஸ்திரி ஸார்...! கார் ரொம்ப நேரமா நின்னுட்டு இருந்ததைப் பார்த்ததும் பக்கத்துல போயிருக்கார். டிக்கி மேல ரத்தக்கறைகளைப் பார்த்ததும் உடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு தகவல் கொடுத்தார். நான் கண்ட்ரோல் ரூமுக்கு இன்ஃபார்ம் பண்ணிட்டேன்...''

''கார்க்குள்ளே பாடி ஏதாவது இருக்கா...?''

''காரோட பின்சீட்ல யாரோ விழுந்து கிடக்கிற மாதிரி தெரியுது ஸார். கண்ணாடிகளுக்கு சன் கண்ட்ரோல்



ஃபிலிம்மை டார்க்காய் ஒட்டியிருக்கிறதால உள்ளே இருக்கிற எதுவுமே சரியாத் தெரியலை ஸார்...''

கருவேலமரக் காட்டுக்குள் நுழைந்து நூறு அடி தூரம் உள்ளே போனதும் அந்த ஸான்ட்ரோ காரும், காரைச் சுற்றி நின்றிருந்த ஃபாரன்ஸிக் ஆட்களும் பார்வைக்குத் தட்டுப்பட - கலையரசன் வேகமாய் காரை நெருங்கினார். ஃபாரன்ஸிக் நபர் ஒருவர் டிக்கியின் மேல்பரப்பில் உறைந்து போயிருந்த ரத்தக்கறைகளை ஒரு சின்னக் கத்தியால் சுரண்டி எடுத்து ஒரு சிறிய பாலிதீன் பைக்குள் சேகரம் பண்ணிக் கொண்டிருந்தார்.

கலையரசனைப் பார்த்ததும் சீஃப் ஃபாரன்ஸிக் அதிகாரி ரத்னகுமார் பக்கத்தில் வந்தார்.

''கார் டோரை இப்ப ஓப்பன் பண்ணிடுவாங்க ஸார்...! லாக் சிஸ்டம் கொஞ்சம் வித்தியாசமாய் இருந்ததால மொதல்ல பிடிபடலை... இப்ப வேற மாஸ்டர் 'கீ பஞ்ச்'சை போட்டு ட்ரை பண்றாங்க. டோர் ஓப்பனாயிடும்...''

கலையரசன் காரைச் சுற்றி வந்தார். காரின் மேல் லேசாய் புழுதி படிந்திருந்தது. முன்புறக் கண்ணாடி வழியாக உள்ளே பார்த்தார். பின்சீட்டில் யாரோ படுத்து இருப்பது போல் தெரிந்தது.

'சந்திரசேகரனா...?'

உற்றுப் பார்த்தார்.

பிடிபடவில்லை.

'ப்ளக்'- பக்கவாட்டில் சத்தம் கேட்டது. ''ஸார்...! டோர்... ஓப்பன்ட்...'' ரத்னகுமார் குரல் கொடுத்தார்.

கலையரசன் போனார். காரின் நான்கு பக்க கதவுகளும் திறந்து வைக்கப்பட, காரின் பின்சீட்டைப் பார்த்தார்.

ஆள் யாரும் இல்லை.

பின்சீட்டில் ஃபைல்களை வைத்து அதன்மேல் பேண்ட்டையும், சர்ட்டையும் போர்த்தியிருந்தார்கள். பேண்ட்டிலும் சர்ட்டிலும் திட்டுத் திட்டாய் ரத்தக்கறைகள்.

கலையரசன் ஒரு ஃபைலை எடுத்து புரட்டிப் பார்த்தார். அணைகளின் நீர்மட்டம் பற்றிய க்ராஃப்ட்

வரைபடங்கள். அந்த வரைபடங்களுக்கு கீழே சந்திரசேகரனின் கையெழுத்து.

''ஸார்...! டிக்கியையும் ஓப்பன் பண்ணியாச்சு...! டிக்கிக்குள்ளேயும் ஒண்ணும் இல்லை...''

''பின்னே... ரத்தக்கறை எப்படி...?''

''ஸார்... கார்க்குள்ளே பாடியை வெச்சு இங்கே கொண்டு வந்து கருவேல மரக்காட்டுக்குள்ளே வீசியிருக்கணும்கிறது என்னோட அஸ்ஸெம்ஷன். போலீஸ் டாக்ஸைக் கொண்டு வந்து ஸ்மெல் பண்ண வெச்சு காட்டுக்குள்ளே விட்டா பாடி இருக்குற இடம் தெரிஞ்சுடும் ஸார்..!''

''ஓ.கே... டாக் ஸ்க்வாடுக்கு இன்ஃபார்ம் பண்ணுங்க...''

> இடது நாசியில் செல்லும் மூச்சை சந்திரகலை என்றும், வலது நாசியில் செல்லும் மூச்சை சூரியகலை என்றும் சொல்கிறார்கள். வலது நாசி வழியாக மூச்சு சென்று கொண்டு இருந்தால்தான் உடம்பு வெப்பமாக இருக்கும் என்றும், எடுத்த காரியங்கள் வெற்றி பெறும் என்றும் நம்புகிறார்கள். இதற்காகத்தான் பிராணாயாமப் பயிற்சியை மேற்கொள்கிறார்கள். தொடர்ந்து மூச்சு வலது நாசியிலேயே ஓடும்படி செய்து கொண்டு இருக்கிறார்கள். இவையெல்லாம் தவறான முயற்சிகளாகும்."
>
> ('ஊன் உடம்பு ஆலயம்' என்ற புத்தகத்திலிருந்து)

## 7



''இனி பனிரெண்டு மணி நேரத்துக்கு கவலையில்லை...'' என்றார் டாக்டர் மிருத்தியுஞ்சன்.

கலிவரதன் தனியறையில் ஹாஸ்பிடல் கட்டிலில் சலனம் இல்லாமல் தூங்கிக் கொண்டிருக்க, பக்கத்தில் காசி கவலையோடு நின்றிருந்தான்.

''எனக்கு பயமாயிருக்கு டாக்டர்...''

''எதுக்கு பயம்...?''

''கலிவரதன் கண் விழிச்சதுமே உங்களை மறுபடியும் தாக்க முயற்சி பண்ணுவானே...?''



''பயப்படாதீங்க காசி...! பண்ண மாட்டார்...''

''எப்படிச் சொல்றீங்க டாக்டர்...?''

''கலிவரதன் இப்படி மயக்கத்தில் இருக்கும்போதே நான் ட்ரீட்மெண்ட்டை ஆரம்பிச்சுடுவேன். பனிரெண்டு மணி நேரம் கழிச்சு கண் விழிக்கும்போது கலிவரதனின் மனசுக்குள் இருக்கிற ஆக்ரோஷமும், ஆவேசமும் பாதியாய் குறைஞ்சு போயிருக்கும். இந்த விஷயத்தில் எனக்குத் தெரிய வேண்டிய இன்னொரு உண்மை பாக்கியிருக்கு காசி...''

''என்னான்னு சொல்லுங்க டாக்டர்...''

''கணுவாய் மலையில் ஸ்வர்ணதேக ஸ்வாமிகளைப் பார்த்ததாய் கலிவரதன் சொன்னார் இல்லையா...?''

''ஆமா... டாக்டர்...''

''அது உண்மையா... இல்லை... பொய்யா...?''

''உண்மையாகத்தான் இருக்கும் டாக்டர்...''

''எப்படிச் சொல்றீங்க...?''

''ஸ்வர்ணதேக ஸ்வாமிகள் என்கிற பெயரில் ஒரு மகான் அந்த கணுவாய் மலையில் இருக்கிறதாக சுற்றுப்பகுதி மக்கள் சொல்றாங்க டாக்டர்...''

''யாராவது பார்த்து இருக்காங்களா...?''

''ம்... பார்த்ததாய் சொல்றாங்க...''

''அப்படிப் பார்த்த யாராவது ஒருத்தரை இங்கே கூட்டிக்கிட்டு வர முடியுமா காசி...?''

''சமயசஞ்சீவி அனுமார் கோயிலின் குருக்களே அந்த ஸ்வர்ணதேக ஸ்வாமிகளைப் பார்த்து இருக்கார்...''

''நாம ரெண்டு பேரும் அவரைப் போய்ப் பார்க்கலாமா...?''

''பார்க்கலாம் டாக்டர்...''

''எப்ப போலாம்...?''

''நீங்க எப்ப சொன்னாலும் சரிதான் டாக்டர்...''

டாக்டர் மிருத்தியுஞ்சன் மணிக்கட்டில் இருந்த வாட்ச்சைப் பார்த்துவிட்டு சொன்னார்

''இப்பவே போலாமா...?''

''போலாம் டாக்டர்...'' காசி தலையை ஆட்ட,

மிருத்தியுஞ்சன் பக்கத்தில் இருந்த நர்ஸிடம் திரும்பினார்.

"சிஸ்டர்...! இப்போ மணி பனிரெண்டு. சரியா ஒரு மணிக்கு இந்த பேஷண்ட்டுக்கு தன்வந்திரி ஃபார்முலா நம்பர் ஃபைவ் ட்ரீட்மெண்ட்டை ஸ்டார்ட் பண்ணிடு. ஏதாவது பிரச்னை ஏற்பட்டா என்னோட செல்லுக்கு ஃபோன் பண்ணு..."

"எஸ்... டாக்டர்..."

"வாங்க காசி... போலாம்..."

புறப்பட்டார்கள்.

> இறைவன் எல்லாப் பொருள்களிலும், எல்லா உயிர்களிலும், எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் வியாபித்து இருப்பவர். அப்படி எங்கும் வியாபித்து இருக்கும் இறைவனுக்கு குறிப்பிட்ட இடம் என்று ஒன்றும் கிடையாதா? குறிப்பிட்ட இடம் அவர்க்கு இருக்கிறது. நமக்கெல்லாம் முகவரி விலாசம் இருப்பதுபோல் இறைவனுக்கும் விலாசம் இருக்கிறது. இறைவன் இருக்கும் இடத்தை 'சிதம்பர விலாசம்' என்று வள்ளலார் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.
>
> -திருவடிப் புகழ்ச்சி.

8



உதவி போலீஸ் கமிஷனர் வஜ்ரவேல், இன்ஸ்பெக்டர் கலையரசன் நீட்டிய புலன் விசாரணை ஃபைலை வாங்கிப் படித்துவிட்டு எரிச்சலாய் அதை மேஜையின் ஓரத்துக்கு தூக்கிப் போட்டார்.

"என்ன கலையரசன்... பொதுப்பணித் துறையில் முக்கிய அதிகாரியாய் பணியாற்றிய சந்திரசேகரன் காணாமல் போய் இன்னிக்கு நாலு நாளாகுது. புலன்விசாரணை என்கிற பெயரில் ஏதேதோ பண்ணியிருக்கீங்க... ஆனா உருப்படியாய் எதுவும் இல்லை..."

கலையரசன் முகத்தில் துளிர்த்த வியர்வையை



கர்ச்சிப்பால் ஒற்றிக் கொண்டே பேசினார்.

"ஸார்..! சந்திரசேகரன் கடத்தப்பட்ட விஷயத்தில் யாரையுமே சந்தேக லிஸ்ட்டுக்கு கொண்டுட்டு வர முடியலை. காரணம் அவர்க்கு எதிரிகளே இல்லைன்னு அவருடைய மனைவி பார்வதம் சொல்றாங்க. பொதுப்பணித் துறையில் இருந்த ஊழியர்களிடம் பரவலாய் விசாரணை பண்ணிப் பார்த்ததில் அவரைப் பத்தி எல்லாருமே நல்லவிதமாகத்தான் சொல்றாங்க... அவருடைய பர்சனல் ஃபைலில் ஒரு ப்ளாக் மார்க் கூட இல்லை..."

"குறிஞ்சி நகர் எக்ஸ்டென்ஷன் கருவேலமரக் காட்டுக்குள்ளே அநாதையாய் நின்னுட்டிருந்த லாண்ட் ரோவர் அவரோடதுதானே...?"

"ஆமா... ஸார்..."

"காரோட பின்சீட்டில் கிடந்த பேண்ட்டும் சர்ட்டும்...?"

"அவரோடதுதான்னு அவருடைய மனைவி பார்வதம் அடையாளம் காட்டினாங்க..."

"சந்திரசேகரன் கொல்லப்பட்டிருப்பார்ன்னு நினைக்கறீங்களா...?"

"மே... பி... ஸார்... அவருடைய உடைகளில் ரத்தக்கறை இருந்தது. காரோட டிக்கி பகுதியிலும் ரத்தக்கறை இருந்தது. டிக்கியைத் திறந்து பார்த்தப்ப உள்ளே ஸ்டெப்னி டயர் மட்டும் இருந்தது. அதுக்கப்புறம் கருவேல மரக் காட்டுப்பகுதிக்குள்ளே அவருடைய உடல் எங்கேயாவது டிஸ்போஸ் பண்ணப்பட்டிருக்குமான்னு தெரிஞ்சுக்கறதுக்காக போலீஸ் டாக் சார்லியை வரவழைச்சோம். சார்லி ரெண்டு கிலோமீட்டர் பரப்பளவுக்கு ஓடியும் உடல் கிடைக்கலை..."

"காரணம் இல்லாமல் ஒரு அதிகாரி கடத்தப்படுவாரா? இவர் ஒரு அரசு ஊழியர். இவரைக் கடத்திக்கிட்டு போறதால யார்க்கு என்ன லாபம்...?"

"கொண்டு போன ஃபைல்கள் எல்லாமே

கார்க்குள்ளே அப்படியே இருக்கு ஸார்... இது வேற ஏதோ விவகாரம் ஸார்...''

''சந்திரசேகரனுக்கு சின்ன வீடு ஏதாவது இருக்கான்னு கிளறிப் பார்த்தீங்களா...?''

''பார்த்துட்டேன் ஸார்...! மனுஷனுக்கு அப்படி எதுவும் இல்லை...''

''எப்படிப்பட்ட உத்தமன் கிட்டேயும் ஒரு மைனஸ் பாயிண்ட் இருக்கும். அதைக் கண்டுபிடிக்கிற வரைக்கும் ஒவ்வொரு கேஸும் தலைவலிதான்... மண்டையிடிதான்...!'' வஜ்ரவேல் சொல்லிக் கொண்டிருக்கும் போது டெலிஃபோன் குரல் கொடுத்தது.

ரிஸீவரை எடுத்தார்.

''ஹலோ...''

மறுமுனையில் கமிஷனர் ஆதிசேஷன் பேசினார்.

''வஜ்ரவேல்! ஏதாவது முக்கியமான வேலையில் இருக்கீங்களா?''

''இல்ல... ஸார்... அயாம் ஃப்ரீ''

''உடனே என்னோட அறைக்கு வாங்க...''

''எஸ்... ஸார்...'' ரிஸீவரை பவ்யமாய் வைத்துவிட்டு எழுந்தார் வஜ்ரவேல்.

''கலையரசன்...! சந்திரசேகரனோட கேஸை இன்னும் கொஞ்சம் ஆழமா உழணும். உழைப்பு போதாது. ரெண்டு நாள் கழிச்சு மறுபடியும் உங்களை காண்டாக்ட் பண்றேன். அப்பவாவது உருப்படியான தகவலைச் சொல்லுங்க... யூ... மே... கோ...''

கலையரசன் இறுகிய முகத்தோடு ஃபைலை எடுத்துக் கொண்டு வெளியேற, வஜ்ரவேல் தொப்பியை எடுத்து சரியாய் பொருத்திக் கொண்டு அடுத்த கட்டிடத்தில் இருந்த கமிஷனரின் அறையை நோக்கிப் போனார்.

இரண்டு நிமிஷ நடை.

கட்டிடத்தின் முதல் தளத்தில் இருந்த கமிஷனரின் அறைக்குள் நுழைந்தார்.

அடுத்த வருடம் ஓய்வு பெறப்போகும் கமிஷனர்



ஆதிசேஷன் கழல் நாற்காலியில் இறுகிப்போன முகத்தோடு அரைவட்டம் அடித்துக் கொண்டிருந்தார். சுவரில் பொருத்தியிருந்த ஸ்பிலிட் ஏ.ஸி. அந்த அறையை ஊட்டியாய் மாற்றியிருந்தது.

சல்யூட் செய்த வஜ்ரவேலை எதிரில் காலியாய் இருந்த நாற்காலியில் உட்காரும்படி கமிஷனர் கையைக் காட்ட அவர் உட்கார்ந்தார்.

ஒரு நிமிஷம் அந்த அறைக்குள் வேண்டாத மௌனம் நிலவியது. பிறகு கமிஷனர் தன் இரண்டு முழங்கைகளையும் கண்ணாடி மேஜையின் மேல் ஊன்றிக் கொண்டு வஜ்ரவேலைப் பார்த்தார். மெல்லிய குரலில் கேட்டார்.

''பொதுப்பணித் துறை அதிகாரி சந்திரசேகரன் காணாமே போன விவகாரம் எந்த அளவில் இருக்கு...?''

''இன்ஸ்பெக்டர் கலையரசன் கிட்டே இப்பத்தான் அதைப்பத்தி பேசிட்டு வந்தேன் ஸார்...''

''பேசிக்கிட்டே இன்னும் எத்தனை நாள் இருக்கப் போறீங்க...?''

''ஸ... ஸார்... அது... வந்து... வந்து...''

''யூஸ்ஃபுல் க்ளு எதுவும் கிடைக்கலை... அப்படித்தானே?''

''ஆமா... ஸார்...''

''சரி...! இந்த ஃபோட்டோவைக் கொஞ்சம் பாருங்க...'' சொன்னவர் தன் மேஜையின் மேல் பேப்பர் வெயிட்டுக்கு கீழே வைத்து இருந்த அந்த போஸ்ட் கார்டு சைஸ் ஃபோட்டோவை எடுத்து வஜ்ரவேலிடம் கொடுத்தார் கமிஷனர்.

வஜ்ரவேல் வாங்கிப் பார்த்தார்.

ஃபோட்டோவில் 'டை' கட்டிய 55 வயது நபர் ஒருவர் வழுக்கைத் தலையோடு சிரித்துக் கொண்டிருந்தார்.

''யார் ஸார் இவர்...?''

''மின்துறை வாரியத்தில் சீஃப் என்ஜினியராய் இருக்கார். நேத்து சாயந்தரம் பொள்ளாச்சியில் நடந்த ஒரு கல்யாண ரிசப்ஷனுக்குப் போனவர் திரும்பி

வரவேயில்லை. கார் ஈச்சனாரி ரயில்வே கேட்டுக்குப் பக்கத்துல ஒரு ஆலமரத்துக்குக் கீழே அனாதையாய் நின்றிருந்தது. கார்க்குள்ளேயும் வெளியேயும் ரத்தக்கறைகள். உள்ளே யாருமே இல்லை...''

வஜ்ரவேல் திகைத்தார்.

''என்ன ஸார் இது...? நாலு நாளைக்கு முன்னாடி காணாமல் போன சந்திரசேகரன் விவகாரம் மாதிரியே இருக்கு?''

''எஸ்...! கூடவே இன்னொரு ஒற்றுமையும் இருக்கு...''

''ஒற்றுமையா...?''

''ம்... நாலு நாளைக்கு முன்னாடி காணாமல் போன பொதுப்பணித் துறை அதிகாரியின் பேரும் சந்திரசேகரன். நேத்து ராத்திரி காணாமல் போன மின்துறை வாரிய சீஃப் எஞ்ஜினியர் பேரும் சந்திரசேகரன். ரெண்டு பேருமே ஐம்பத்தைந்து வயதைக் கடந்தவர்கள்...''

''ஸ... ஸார்...''

''இந்த ரெண்டு பேருமே காணாமல் போன விஷயத்தில் ஏதோ ஒரு விபரீதம் இருக்கு... ஸோ, இந்த கேஸை இன்ஸ்பெக்டர் லெவலில் இன்வெஸ்டிகேட் பண்ணிட்டிருக்க வேண்டாம். நீங்க ஒரு ஸ்க்வாடை ஃபார்ம் பண்ணிட்டு தீவிரமா இன்வெஸ்டிகேட் பண்ணுங்க...''

''எஸ்... ஸார்...''

நாம் சாதாரணமாக மூச்சை விடும்போது பனிரெண்டு அங்குலம் நீளமுள்ள மூச்சு வெளியே போகிறது. திரும்பவும் எட்டு அங்குல மூச்சுதான் உள்ளே செல்கிறது. நாலு அங்குல மூச்சு விரயமாகிறது. சாப்பிடும்போது பதினெட்டு அங்குல மூச்சு வெளியேறுகிறது. நடக்கும்போது இருபத்தி நாலு அங்குலமும், ஓடும்போது நாற்பத்தெட்டு அங்குலமாகவும் மூச்சு வெளியேறுகிறது. தூங்கும் போது ஐம்பது அங்குலம் வெளியேறுகிறது. ஆனால் திரும்பவும் உள்ளே செல்வது மட்டும் எட்டு அங்குல மூச்சுதான்.

-பிரம்மஸ்ரீ கணபதி ஸ்வாமிகள்.



9



அந்த மத்தியான வெய்யிலில் கனுவாய் மலை ஏறினாலும் குளிர்ச்சியாகவே இருந்தது. டாக்டர் மிருத்யுஞ்சனுக்கும் சரி, காசிக்கும் சரி உடம்பு வியர்த்துக் கொட்டவில்லை.

'சமய சஞ்சீவி ஹனுமன் கோயிலுக்கு போகும் வழி' என்று எழுதப்பட்ட பெயர்ப்பலகை ஒன்று செடி கொடிகளுக்கு நடுவே எட்டிப் பார்த்து வழிகாட்ட, நடந்தார்கள்.

''இப்படி ஒரு கோயில் இருக்கிறதே எனக்குத் தெரியாது. ரொம்பவும் அற்புதமான இடத்துல ஹனுமார் உட்கார்ந்திருக்கார்...'' டாக்டர் சொல்ல, காசி புன்னகைத்தான்.

''இங்கே இந்த ஹனுமார் கோயில் உருவானதுக்கு ஒரு புராணக் கதையும் ஆதாரமாயிருக்கு டாக்டர்...''

''என்ன கதை அது...?''

''ராமனுக்கும், ராவணனுக்கும் இலங்கையில் போர் நடந்தப்ப லட்சுமணன் போரில் காயம்பட்டு மூர்ச்சையடைந்து விழ- அந்த மூர்ச்சையை தெளிவிக்க சஞ்சீவி மலையில் மூலிகை தேடிப் போனார் ஹனுமார்...''

''அந்தக் கதைதான் எனக்குத் தெரியுமே...! மூலிகைச் செடி எதுன்னு தெரியாமே சஞ்சீவி மலையையே பெயர்த்து எடுத்துட்டு வந்தாரே?''

''அப்படி அந்த மலையைப் பெயர்த்து எடுத்துட்டு பறந்து வரும்போது அந்த மலையில் இருக்கிற மண்ணும் கல்லும் இந்த கனுவாய் மலையிலும் கொஞ்சம் விழுந்ததாம். அப்படி விழுந்த இடத்துலதான் இந்தக் கோயில் கட்டப்பட்டு இருக்கு...''

''வெரி இண்ட்ரஸ்டிங்...''

''இன்னொரு இண்ட்ரஸ்டிங்கான விஷயமும் இருக்கு

டாக்டர்...''

''என்ன...?''

''இந்தக் கோயிலைச் சுத்தி வளர்கிற எல்லாச் செடிகளுக்கும் மூலிகை குணம் உண்டு. இந்த ஏரியாவில் இருக்கிறவங்க உடம்பு சரியில்லைன்னா டாக்டர் கிட்டே போக மாட்டாங்க... இந்தக் கோயிலுக்கு வந்து ஹனுமாரைக் கும்பிட்டு மூலிகைச் செடிகளை பறிச்சுட்டு போய் நோயாளிகளுக்குக் கொடுப்பாங்க...''

''அப்படீன்னா... இந்த ஏரியாவில் எந்த ஒரு டாக்டரும் க்ளினிக் வெச்சு பொழைப்பை நடத்த முடியாதுன்னு சொல்லுங்க...''

''கஷ்டம்தான்... டாக்டர்...'' காசி சிரித்து தலையாட்டிக் கொண்டிருக்கும்போதே சமயசஞ்சீவி ஹனுமார் கோயிலின் கோபுரம் பார்வைக்குக் கிடைத்தது. ஐந்து நிமிஷ நடைக்குப் பின் கோயிலை நெருங்கினார்கள்.

வயதான அந்த கோயில் குருக்கள் ஒரு திட்டின் மேல் உட்கார்ந்து வெற்றிலைகளை ஒரு நாரால் மாலையைப் போல் கட்டிக் கொண்டிருந்தார். கோயிலில் கூட்டமில்லை. இரண்டொருவர் மட்டும் அங்கிருந்த பாறைத் திட்டில் உட்கார்ந்து தேங்காயை உடைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

இருவரும் குருக்களுக்கு முன்பாய் போய் நின்றார்கள்.

''வணக்கம்... குருக்களய்யா!''

அவர் நிமிர்ந்தார். கண்களை இடுக்கிக் கொண்டு 'யாரு' என்பது போலப் பார்த்தார். காசி சொன்னான்.

''அய்யா...! என் பேர் காசி. இவர் ஒரு டாக்டர். பேரு மிருத்தியுஞ்சன். மனநல மருத்துவர். உங்க கிட்டே கொஞ்சம் பேசணும். இப்படி உட்காரலாங்களாய்யா...''

''உட்காருங்க...'' அவர் கையைக் காட்டினார்.

இருவரும் உட்கார்ந்தார்கள். காசி சில விநாடிகள் அமைதி காத்துவிட்டு பேச்சை ஆரம்பித்தான்.

''அய்யா... இந்த கணுவாய் மலையில் ஸ்வர்ணதேக ஸ்வாமிகள்ன்னு யாராவது இருக்காங்களா...?''



''ம்... இருக்காங்க...''

''அவரை நீங்க பார்த்து இருக்கீங்களா...?''

''ம்... பார்த்து இருக்கேன்...''

''ஊர்ல இருக்கிற சிலபேர் 'ஸ்வர்ணதேக ஸ்வாமிகள், என்கிற பெயரில் அப்படி ஒருத்தர் கணுவாய் மலையில் கிடையாது..அது பொய்'ன்னு சொல்றாங்களே...?''

''அவங்க சொல்றதுதான் பொய்...''

''நீங்க ஸ்வாமிகளைப் பார்த்ததாய் சொல்றீங்க... அவர் கிட்டே பேசியிருக்கீங்களா?'' டாக்டர் குறுக்கிட்டு கேட்க, 'இல்லை...' என்று தலையாட்டினார் குருக்கள்.

''பார்த்துட்டு ஏன் பேசலை...?''

''அவர் என்னோட பார்வைக்கு சில விநாடிகள்தான் கிடைச்சார். உடனே மரங்களுக்கு மத்தியில் மறைஞ்சுட்டார்...''

''ஸ்வாமிகள் எப்படியிருந்தார்ன்னு சொல்ல முடியுமா?''

''பெயர்க்கு ஏற்ற மாதிரி ஸ்வர்ணமா ஜொலிச்சார்...''

''ஒரு மானுட உடம்புக்கு அப்படி ஒரு தங்க நிறம் வருமா அய்யா...?''

''வரும்...'' குருக்கள் சிரித்தார்.

''எப்படி வரும் அய்யா...?''

''சொன்னால் உங்களுக்குப் புரியாது...''

''அய்யா... நீங்க சொல்லுங்க... முடிஞ்சா புரிஞ்சுக்கறோம். இல்லேன்னா விட்டுடறோம்...''

''ஸ்வாமிகளின் உடம்பு பொன்னிறமாய் ஜொலிப்பதற்குக் காரணம் அவர் ஜெபிக்கும் ஓங்கார மந்திரமும், வாசியோகமும் தான்...''

''......''

''ஏதாவது புரியுதா...?''

''நீங்க சொல்லுங்கய்யா...''

''நம் உடம்புக்குள் இருக்கும் வாசி என்கிற மூச்சு 'குண்டலி' வட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் போது ஓங்கார மந்திரத்தை ஜெபித்தால் உடம்பின்

சிதாகாசத்தில் அந்த உஷ்ணம் ஓங்கிப் பரவும். அந்த உஷ்ணத்தை வாசி என்கிற மூச்சைக் கொண்டு மேலும் மேலும் வளர்த்துவர வேண்டும். சிதாகாசத்தில் தோன்றிய அந்த உஷ்ணம் அங்கிருந்து அதிகமாகி விரிந்து பரவும். உயிரிலும், மனதிலும், உடலிலும் பரவும். உடலுக்கு வெளியில் அதன் சூழ்நிலையிலும் பரவும். அப்போது ஊன் உடம்பு சுத்த உடம்பாகும். சுத்த உடம்பு பொன் உடம்பாகும். பொன் உடம்பு ஒளி உடம்பாகும்...''

''நீங்க சொல்றது பிரமிப்பாயிருக்கய்யா...''

''இந்த வித்தைகள் எல்லாமே பிரமிப்பானவைதான். அதெல்லாம் நம்ம மாதிரியான சாதாரண ஜனங்களுக்கு எட்டாத உயரங்கள்...''

காசி கேட்டான். ''நீங்க கடைசியா ஸ்வர்ணதேக ஸ்வாமிகளைப் பார்த்து எத்தனை நாள் இருக்கும்ய்யா?''

''நாளா...? எத்தனை வருஷம்னு கேளுங்க...''

''சரி... எத்தனை வருஷம்...?''

''ரெண்டு வருஷம்...''

''அதுக்கப்புறம் உங்க கண்ணுல அவர் படலை...?''

''படலை...''

''ரெண்டு வாரத்துக்கு முந்தி என்னோட ஃப்ரண்ட் ஒருத்தன் இந்தக் கோயிலுக்கு வந்தான். அப்போ மத்தியான நேரம். கோயில் நடை சாத்தியிருந்தது. நடை திறக்க அவன் இந்த மண்டபத்துல உட்கார்ந்து காத்திட்டிருந்தபோது ஸ்வர்ணதேக ஸ்வாமிகள் இங்கே வந்து இருக்கார்...''

''ம்... அப்புறம்...''

'' 'உனக்கு காயத்ரி மந்திரம் தெரியுமா'ன்னு கேட்டு இருக்கார். தெரியாதுன்னு இவன் சொல்ல, 'சரி! என்கூட வா'ன்னு சொல்லி மலைக்கு மேல கூட்டிட்டுப் போயிருக்கார்...''

''ஆச்சரியமாயிருக்கே...! சரி! அதுக்கப்புறம் என்ன நடந்தது...?''

''தெரியலை...! அந்த ஃப்ரண்டுக்கு இப்போ மனநலம் சரியில்லை. ஹாஸ்பிடல்ல அட்மிட்



பண்ணியிருக்கோம். இந்த டாக்டர்தான் ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டிருக்கார்... ஃப்ரண்டுக்கு மனநலம் சரியில்லாமே போனதுக்கு யார் காரணம்னு தெரிஞ்சுக்கிறதுக்காகத்தான் நானும் டாக்டரும் இங்கே வந்தோம்...''

குருக்கள் கோபமானார். ''உங்க நண்பர் மனநலம் குன்றிப் போனதுக்கு காரணம் ஸ்வர்ணதேக ஸ்வாமிகள்தான்னு குற்றம் சாட்ட வந்து இருக்கீங்களா...?''

''நாங்க அப்படிச் சொல்லலை...''

''பின்னே நீங்க சொன்னதுக்கு என்ன அர்த்தம்...? நீங்க நினைக்கிற மாதிரி அவர் ஒண்ணும் சாதாரண நபர் கிடையாது. சித்தர். இந்த கலியுகத்து சித்தர். அவர் இந்த மலையில் நடமாடறதாலதான் இந்த ஊர் செழிப்பாய் இருக்கு. அவரோட பார்வை ஒருத்தர் மேல பட்டாலே உடம்பில் இருக்கிற நோய்கள் எல்லாம் காணாமல் போயிடும். உங்க ஃப்ரண்டோட புத்தி கெட்டுப் போனதுக்கு என்ன காரணம்னு வெளியே போய் தேடுங்க... ஸ்வாமிகளை சம்பந்தப்படுத்திக்கிட்டு இங்கே வராதீங்க...''

''அய்யா... நாங்க... என்ன சொல்ல வர்றோம்ன்னா...'' காசி சொல்லி முடிக்கவில்லை. குருக்கள் கோயில் கோபுரத்தைப் பார்த்து குரல் கொடுத்தார்.

''டேய்... ராமா...!''

அடுத்த விநாடி-

கோயில் கோபுரத்தின் பின்பக்கமிருந்து வெளிப்பட்ட அந்தப் பெரிய சைஸ் குரங்கு, மேலேயிருந்து கீழே தாவிக் குதித்து குருக்களின் பக்கத்தில் வந்தது. 'என்ன?' என்பது போல் அவருடைய முகத்தைப் பார்த்தது.

''இவங்களைத் தொரத்துடா...'' குருக்கள் சொல்லிவிட்டு கோயிலுக்குள் போய்விட, அந்த 'ராமா' டாக்டரையும் காசியையும் பார்த்து 'உர்ர்ர்' என்று உறுமி தன் கோரைப் பற்களைக் காட்ட, இருவரும் பதறியடித்துக் கொண்டு பின்வாங்கி ஓடினார்கள்.

மனிதன் மட்டுமே இறை அனுபவம் பெற முடியும். காரணம், இறைவன் தன் முழுத்தன்மையின் பரிபூரணமான பிரணவ வடிவத்துடன் மனித உடலில்தான் இருக்கிறான். அதனால் மனித உடம்பை ஓர் ஆலயம் என்று சொல்கிறார் திருமூலர்.

## 10



உதவி போலீஸ் கமிஷனர் வஜ்ரவேல் சுந்தராபுரத்தில் இருந்த அந்த பங்களாவுக்கு முன்பாய் ஜீப்பை நிறுத்திவிட்டு உள்ளே போய் அழைப்பு மணிக்கு வேலை கொடுக்க- ஒரு இளைஞன் வந்து கதவைத் திறந்தான். கண்களில் கனமாய் சோகம். மோவாயில் மூன்று நாள் சொரசொரப்பு. குரலில் சுரத்தே இல்லாமல் வரவேற்றான்.

''வாங்க... ஸார்...''

வஜ்ரவேல் வீட்டுக்குள் நுழைந்து கொண்டே கேட்டார்.

''என்ன... அருள்...! அப்பாவைப் பத்தி ஏதாவது தகவல் கிடைச்சுதா...?''

''இல்ல ஸார்...! பொள்ளாச்சியில் இருக்கிற எல்லா சொந்தக்காரர்களுக்கும் ஃபோன் பண்ணி கேட்டுட்டேன் ஸார்...''

வஜ்ரவேல் ஹாலில் இருந்த சோபாவுக்குப் போய் சாய்ந்தார். ''அருள்...! போன வாரம் பொதுப்பணித் துறையில் முக்கிய அதிகாரியாய் பணியாற்றிய சந்திரசேகரன் காணாமல் போனார். அவருடைய கார் குறிஞ்சி நகர் எக்ஸ்டென்ஷன் கருவேலமரக் காட்டில் அநாதையாய் நின்னுட்டிருந்தது. அவர் என்ன ஆனார்... எங்கே போனார்ன்னு இதுவரைக்கும் தெரியலை... காரில் ரத்தக் கறைகள் இருந்தது. அந்த ரத்தத்தை சோதனை செய்து பார்த்தப்ப அது சந்திரசேகரனின் ப்ளட் க்ரூப்தான்னு தெரிஞ்சுது. அவர் காணாமப்



போனதிலிருந்து சரியா மூணாவது நாள் உங்கப்பாவைக் காணோம். அவர் ஓட்டிட்டுப் போன கார் கிணத்துக்கடவுக்குப் பக்கத்துல குழந்தை வேலாயுதசாமி மலையடிவாரத்துல தனியா நின்னுட்டிருந்தது. ஆனா கார்ல ரத்தக் கறைகள் இல்லை. இந்த ரெண்டு கேஸ்களுக்கும் இடையில் மூணு முக்கியமான ஒற்றுமைகள் இருக்கு. முதல் ஒற்றுமை... ரெண்டு பேர்க்குமே சந்திரசேகரன் என்ற பெயர். ரெண்டாவது ஒற்றுமை... இருவருமே அரசாங்க அதிகாரிகள். மூணாவது ஒற்றுமை... வயசு... ரெண்டு பேருமே 55 வயதைக் கடந்தவர்கள். சில வருடங்களில் ஓய்வுபெறப் போகிறவர்கள். ஒருவர் பொதுப்பணித் துறை. மற்றவர் மின்துறை. இது ஒண்ணுதான் வித்தியாசம்...''

அருள் கண்களில் நீரோடு வஜ்ரவேலுக்கு முன்பாய் வந்து உட்கார்ந்தான்.

''ஸார்...! அப்பா... யார்க்கும் எந்த ஒரு கெடுதலையும் மனசால கூட பண்ணாதவர்... அவர்க்கு கடவுள் பக்தி அதிகம். ஒவ்வொரு தமிழ் மாசப் பிறப்பன்னிக்கும் காலையில அஞ்சு மணிக்கு பழனி கோயில்ல இருப்பார். வருஷா வருஷம் மகரஜோதி தரிசனம் பண்ண இருமுடி கட்டிக்கிட்டு சபரிமலைக்குப் போவார். யாரையும் அதிர்ந்துகூட பேசமாட்டார். இப்படிப்பட்ட ஒருத்தர் மேல யார்க்கு என்ன கோபம்ன்னு தெரியலை... பணத்துக்காக கடத்தியிருந்தா இந்நேரம் கடத்தல் பேர்வழிகள் என்னை ஃபோன்ல காண்டாக்ட் பண்ணியிருப்பாங்க...''

''இதோ பார் அருள்...! நான் இப்போ இங்கே வந்தது மறுபடியும் என்கொயரிக்காகத்தான். நான் இன்னிக்கு சில புதுக் கேள்விகளோடு வந்திருக்கேன். அந்தக் கேள்விகளுக்கு நீ நிதானமாய் யோசனை பண்ணி பதில் சொல்லணும்...''

''கேளுங்க... ஸார்...''

''உங்க மதர் இறந்தப்ப உனக்கு என்ன வயது?''

''பதினாலு ஸார்...''

''அந்த சமயத்துல உங்க ஃபாதர்க்கு ஏஜ் ஃபார்ட்டி ஃபைவ் இருக்குமா...?''

''மே... பி... ஸார்...''

''அவர் ஏன் ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கலை?''

''எனக்கு ஒரு சித்தி வர்றதை அவர் விரும்பலை ஸார். அதுவுமில்லாமே அப்பாவுக்கு அந்தச் சமயத்துல ஹெல்த்தும் சரியில்லாமே இருந்தது...''

''காரணம் இதுதான் இல்லையா...?''

''ஆமா... ஸார்...''

வஜ்ரவேல் சில விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டுக் கேட்டார்.

''உங்க மதர் எப்படி இறந்து போனாங்க?''

''ஹார்ட் அட்டாக்...''

''அப்ப... அவங்களுக்கு என்ன வயசு...?''

''முப்பத்தியாறு...''

''அந்த சின்ன வயசுல எப்படி ஹார்ட் அட்டாக்?''

''ஸார்! மதர் ஒரு சுகர் பேஷண்ட். பி.பி.யும் இருந்தது. ஆனா ரெண்டுமே கண்ட்ரோலில் இல்லை. ஒருநாள் ராத்திரி தூக்கத்திலேயே ஹார்ட் அட்டாக் வந்து போயிட்டாங்க...''

வஜ்ரவேல் புன்னகைத்தார்.

''நான் கேள்விப்பட்டது வேற மாதிரி இருந்ததே...?''

அருள் முகம் மாறினான்.

''என்ன கேள்விப்பட்டீங்க ஸார்...?''

''உன் அம்மாவோட மரணம் இயற்கையான மரணம் இல்லையாமே...?''

''ஸ... ஸார்...''

''அவங்க நிறைய தூக்கமாத்திரை சாப்பிட்டு தற்கொலை பண்ணிக்கிட்டாங்களாமே...?''

''இந்தப் பொய்யை உங்களுக்கு யார் ஸார் சொன்னது?''

''இது பொய் கிடையாது அருள்... அக்மார்க் உண்மை. நான் எந்த ஒரு விஷயத்தையுமே ஆதாரம்



இல்லாமே சொல்ல மாட்டேன்... பத்து வருஷத்துக்கு முந்தி இந்த வீட்ல கோமதி என்கிற பேர்ல ஒரு வேலைக்காரி இருந்திருக்கா...''

''ஆமா...''

''அவ எப்போ வேலையை விட்டு நின்னா?''

''அஞ்சு வருஷம் இருக்கும்...''

''ஏன் வேலையை விட்டு நின்னுகிட்டா...?''

''தெரியாது...''

''அருள்...! ஒரு பணக்கார வீட்டில் எந்த ஒரு குற்றம் நடந்தாலும் சரி, போலீஸோட சந்தேகம் பாயற முதல் இடம் எது தெரியுமா...? சமீபத்துல வீட்டு வேலையிலிருந்து நின்னுக்கிட்ட வேலைக்காரங்க மேல தான்... அந்த வகையில் நான் இன்வெஸ்டிகேட் பண்ணிப் பார்த்ததில் உங்க வீட்ல வேலை பார்த்த கோமதி கிடைச்சா. அவ வீட்டு அட்ரஸைக் கண்டுபிடிச்சு ஸ்டேஷனுக்கு கூட்டி வந்து விசாரிச்சோம். அப்படி விசாரணை பண்ணின போதுதான் உன் அம்மாவோட தற்கொலை விஷயமும் வெளியே வந்தது...''

''ஸார்...! ஒரு வேலைக்காரி பேச்சை நம்பறீங்க... என்னோட பேச்சை நம்ப மாட்டீங்களா...?''

''ஏன், ஒரு வேலைக்காரியோட பேச்சை நம்பக் கூடாதா...?''

''ஸார்... அவ ஏதோ கற்பனை பண்ணிக்கிட்டு சொல்லியிருக்கா...''

''அது கற்பனையா, உண்மையான்னு கொஞ்சம் இன்வெஸ்டிகேட் பண்ணிப் பார்த்துட்டா தெரிஞ்சுடுமே...?''

அருள் சற்றே கோபமாக நிமிர்ந்தான்.

''ஸார்...! என்னோட அம்மா அப்படி தற்கொலை பண்ணிக்கிட்டே செத்துப் போயிருந்தாலும் அந்த சம்பவத்துக்கும் இப்போ அப்பா காணாமே போன சம்பவத்துக்கும் என்ன தொடர்பு...?''

''மேலோட்டமாய் பார்த்தா ஒண்ணும் இல்லைதான்...

இருந்தாலும் கொஞ்சம் கிளறிப் பார்க்கலாமே...?''

''ஸார்... திஸ்... ஈஸ் டூ மச்... என்னோட ஃபாதர் காணாமல் போன விவகாரத்தில் ஏற்கெனவே நொந்து போயிருக்கேன். நீங்க எப்பவோ நடந்துபோன சம்பவங்களையெல்லாம் கொண்டு வந்து லிங்க் பண்ணாதீங்க...''

வஜ்ரவேல் மேற்கொண்டு பேசும் முன்பு அவருடைய செல்ஃபோன் அழைத்தது. எடுத்து காதுக்கு ஒற்றினார்.

மறுமுனையில் கமிஷனர்.

''குட்மார்னிங்... ஸார்...''

''வஜ்ரவேல்...! இப்போ எங்கேயிருக்கீங்க...?''

''ஸார்...! மின்துறை வாரிய என்ஜினீயர் சந்திரசேகரன் வீட்டில் அவரோட சன் அருளை என்கொயர் பண்ணிட்டிருக்கேன். எனிதிங்க் இம்பார்ட்டண்ட் ஸார்?''

''எஸ்... நீங்க உடனே புறப்பட்டு ஆபீஸுக்கு வாங்க...''

''எஸ்... ஸார்...'' வஜ்ரவேல் செல்ஃபோனை அணைத்து பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு அருளிடம் நிமிர்ந்தார்.

''அருள்...! கேள்விகள் இன்னும் பாக்கியிருக்கு. சாயந்தரம் ஆறு மணிக்கு மேல வீட்டுக்கு வர்றேன். வெளியே எங்கேயாவது போறீங்களா...?''

'இல்லை...' என்பதுபோல் அருள் தலையாட்ட, வஜ்ரவேல் பங்களாவினின்றும் வெளிப்பட்டார். காத்திருந்த ஜீப்பில் ஏறிக் கொண்டார். மண்டையைப் பிளக்கிற வெய்யிலில் பதினைந்து நிமிஷப் பயணம்.

கமிஷனரின் அலுவலகம் வந்தது.

ஜீப்பினின்றும் இறங்கி வராந்தாவில் வேகநடை போட்டு கமிஷனரின் சாத்தியிருந்த அறைக் கதவைத் தட்டினார். ''ப்ளீஸ் கெட் இன்'' என்ற அனுமதிக் குரல் வந்ததும், வஜ்ரவேல் உள்ளே நுழைந்தார்.

கமிஷனர்க்கு முன்பாய் இருந்த நாற்காலியில் அந்த அழகான இளம்பெண் உட்கார்ந்திருந்தாள். தலை



குனிந்திருந்தது.

விஷ் செய்த வஜ்ரவேலை காலியான நாற்காலியைக் காட்டி உட்காரச் சொன்னார் கமிஷனர். உட்கார்ந்ததும் தன் கையில் வைத்து இருந்த ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டோவைக் கொடுத்தார். வஜ்ரவேல் வாங்கிப் பார்த்தார். ஒரு வயதான நபரின் போட்டோ. வயது கிட்டத்தட்ட அறுபது இருக்கலாம். வழுக்கைத் தலை.

கமிஷனர் சொன்னார். ''நீங்க போட்டோவில் பார்த்துக்கிட்டு இருக்கிற நபர் ரெவின்யூ டிபார்ட்மெண்டில் ஒரு பெரிய அதிகாரி. ரிடையராக இன்னும் ஒரு மாசம்தான் இருக்கு. கடந்த ரெண்டு நாளா இவரைக் காணோம். உறவினர் ஒருத்தரை பார்க்க பஸ்ஸில் திருப்பூர் போனவர் திரும்பவேயில்லை. அந்த உறவினர் வீட்டுக்கும் போகலை. வழியிலேயே எங்கேயோ காணாமே போயிட்டார். எல்லாத்துக்கும் மேலா ஒரு அதிர்ச்சியான செய்தி என்னான்னா இவர் பேரும் சந்திரசேகரன்தான்...''

மனமே! பதற்றமடையாதே! மெல்ல மெல்லத் தான் எல்லாம் நடக்கும். கிணற்றில் நீர் இருக்கிறது என்பதற்காக தோட்டக்காரன் மரத்திற்கு நூறு குடம் நீர் ஊற்றினாலும் பருவம் வந்த பிறகுதான் அந்த மரம் பழங்கள் கொடுக்கும்.



டாக்டர் மிருத்தியுஞ்சன், கலிவரதனின் அறைக்குள் நுழைந்தபோது அவன் கட்டிலில் சம்மணம் போட்டு உட்கார்ந்து ஜன்னலுக்கு வெளியே பார்வையைப் போட்டிருந்தான்.

''குட்மார்னிங் கலிவரதன்...''

அவன் திரும்பினான்.

''குட்மார்னிங் டாக்டர்...''

''எப்படியிருக்கீங்க...?''

''ஃபைன் டாக்டர்...''

''ராத்திரி தூங்கினீங்களா...?''

''சவுண்ட் ஸ்லீப்...''

''கனவுகள் ஏதாவது வந்ததா...?''

''இல்ல டாக்டர்...''

''வெரிகுட்! முன்னேயெல்லாம் உங்களுக்கு படுத்தா நிறைய கனவுகள் வரும் இல்லையா...?''

''ஆமா டாக்டர்... டி.வி. சீரியல்கள் மாதிரி தொடர்ந்து கனவுகள் வந்துட்டேயிருக்கும்... இன்ன சமயம்தான்னு கிடையாது. அமெரிக்க அதிபர் ஜார்ஜ் பஷ்ஷிலிருந்து கார்ட்டூன் பாத்திரங்கள் டாம் அண்ட் ஜெர்ரி வரைக்கும் வரும் டாக்டர்... என்னுடைய தலைக்குள்ளே இருக்கிறது மூளையா இல்லை ஃபிலிம் ரோலான்னு எனக்கே சந்தேகம் வந்துடும்...''

கலிவரதன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வெளியே சென்றிருந்த காசி அறைக்குள் நுழைந்தான். கையில் அன்றைய நாளிதழும், சில வார இதழ்களும் இடம் பிடித்து இருந்தன. தோளில் காப்பி பிளாஸ்க்.

''குட்மார்னிங் டாக்டர்...! கலி என்ன சொல்றான்...?''

டாக்டர் சிரித்தார். ''கலிவரதன் இப்போ ஓரளவுக்கு தெளிவாயிட்டார். ஆயுர்வேத ஆயில் மசாஜைத் தொடர்ந்து பண்ணிட்டு வந்தா ஒரு வாரத்துக்குள்ளே எழுபத்தைந்து சதவிதம் நல்லாயிடுவார். நேற்று மத்தியானத்திலிருந்து கலிவரதனுக்கு சித்தர் ஞாபகங்களே வரலைங்கிறது மிகப் பெரிய விஷயம். அதுவுமில்லாமே...''

டாக்டர் மேற்கொண்டு பேசும் முன்பு-

அந்த நர்ஸ் பதட்டத்தோடு உள்ளே வந்தாள். முகம் ஏராளமாய் வியர்த்துப் போயிருக்க, ''டாக்டர்!'' என்றாள்.

''என்ன சிஸ்டர்...?''

''டா... டாக்டர்... 31-ம் எண் அறையிலிருந்த பேஷண்ட் பத்மய்யா மொட்டை மாடிக்குப் போய் அங்கேயிருந்து கீழே குதிச்சுட்டார்... மண்டை சிதறி ஸ்பாட்லயே மரணம்...''

''மை குட்னஸ்...''

டாக்டர் மிருத்தியுஞ்சன் ஓடினார்.



பயத்தில் இரண்டு வகை உண்டு. ஒன்று அன்பினால் வரும் பயம். மற்றொன்று அடிமைத்தனத்தினால் வரும் பயம். பிறருடைய மனம் நோகும்படி நம் பேச்சோ, செய்கையோ அமைந்துவிடக் கூடாது என்பது அன்பினால் வரும் பயம். அடிமைத்தனத்தால் வரும் பயம் நம் மனதின் உண்மையையும் உறுதியையும் அழித்து நிலைகுலையச் செய்யும் பயம்.

-நா.சோமசுந்தரம்

12



கமிஷனர் சொன்னதைக் கேட்டு உதவி கமிஷனர் வஜ்ரவேல் தன் சதைப்பிடிப்பான முகம் பூராவும் அதிர்ந்து போக நிமிர்ந்தார்.

''என்ன ஸார்... சொன்னீங்க...? இவர் பேரும் சந்திரசேகரனா...?''

''எஸ்...'' என்று மையமாய் தலையாட்டியவர், தனக்கு முன்பாய் உட்கார்ந்திருந்த அந்த இளம்பெண்ணைக் காட்டினார்.

''இவங்க... அவரோட மகள் ஹம்ஸா... ரெண்டு நாளா அப்பாவைத் தேடிட்டு கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் போலீஸ்ல கம்ப்ளைண்ட் பண்ணியிருக்காங்க...!''

வஜ்ரவேல் அந்தப் பெண் ஹம்ஸாவைப் பார்த்தார்.

''அப்பா எந்த டிபார்ட்மெண்ட்...?''

''ரெவின்யூவில் க்ரேடு ஒன் ஆபீஸர்...''

''திருப்பூர்க்கு பஸ்ஸில்தான் போவார்ன்னு நிச்சயமா உனக்குத் தெரியுமாம்மா?''

''அப்படித்தான் என்கிட்டே சொன்னார்...''

''திருப்பூர்ல யார் ரிலேட்டிவ்...?''

''தாய் வழி மாமா வகையில் தூரத்து சொந்தம்...''

''உங்க மதர்... எங்கே...?''

ஹம்ஸா தயங்கிவிட்டு மெல்லிய குரலில் சொன்னாள்.

''அம்மா எங்களோடு இல்லை... ஸார்...''

''இதுக்கு என்ன அர்த்தம்?''

''லீகல் டைவர்ஸ்...''

''ஓ...! எப்ப டைவர்ஸ் ஆனது...?''

''பத்து வருஷத்துக்கு முந்தி...''

''டைவர்ஸுக்கு என்ன காரணம்...?''

''ரெண்டு பேர்க்கும் ஒத்துப் போகலை. மியூச்சுவல் டைவர்ஸ் கேட்டு ரெண்டு பேரும் கோர்ட்டுக்குப் போயிட்டாங்க...''

''அம்மா இப்போ எங்கே...?''

ஹம்ஸா சில விநாடிகள் மௌனித்துவிட்டு, ''அது... வந்து... அம்மா வேற ஒருத்தரை மேரேஜ் பண்ணிகிட்டு சிகாக்கோ போயிட்டாங்க...''

''எப்போ...?''

''ரெண்டு வருஷத்துக்கு முந்தி...''

''டைவோர்ஸுக்கு அப்புறம் ரெண்டு பேர்க்குள்ளே ஏதாவது பிரச்சனை வந்ததா?''

''இல்லை...''

''சரி...! அப்பா காணாமே போயிருப்பார்ன்னு நினைக்கறியா...? இல்லை... யாராவது கடத்திக்கிட்டு போயிருப்பாங்கன்னு நினைக்கறியா...?''

''எனக்குத் தெரியலை ஸார்...''

''சொத்து தகராறு சம்பந்தமா கோர்ட்ல ஏதாவது கேஸ் இருக்காம்மா...?''

''இல்லை...''

''நீ படிக்கிறியா... இல்லை வேலைக்குப் போறியா?''

''படிக்கிறேன்...''

''எங்கே...?''

''அமிர்தா காலேஜில் எம்.பி.ஏ...''

''உனக்கு ஏதாவது காதல் விவகாரம் உண்டாம்மா?''

''உண்டு... என்கூட படிக்கிற வாசுவைக் கடந்த ஒரு வருஷமா விரும்பிட்டிருக்கேன்...''

''இந்த காதல் விவகாரம் அப்பாவுக்குத் தெரியுமா?''

'தெரியும் ஸார்... படிப்பு முடிஞ்சதுமே எனக்கு கல்யாணம் பண்ணி வைக்க அப்பா ஒத்துக்கிட்டார்...''

''வாசுவோட அப்பா யாரு...?''

''தொழிலதிபர் சக்கரபாணியோட சன் ஸார்...''

''சரி... நீ வீட்டுக்குப் போம்மா... அப்பாவை



எப்படியும் கண்டுபிடிச்சுடலாம்...''

கைகளை கூப்பிக் கொண்டு எழ முயன்ற ஹம்ஸாவை கமிஷனர் கையமர்த்தினார்.

''ஒரு நிமிஷம் உட்காரம்மா...''

உட்கார்ந்தாள்.

கமிஷனர் தன் மேஜையின் இழுப்பறையைத் திறந்து இரண்டு போட்டோக்களை எடுத்து ஹம்ஸாவிடம் நீட்டினார்.

''இந்த போட்டோக்களை கொஞ்சம் பாரம்மா. முதல் போட்டோவில் இருக்கிறவர் பேர் சந்திரசேகரன். பொதுப்பணித் துறையில் உயர் அதிகாரியா இருந்தார். இவரையும் சில நாட்களா காணோம். ரெண்டாவது போட்டோவில் இருக்கிறவர் பேரும் சந்திரசேகரன்தான். இவர் மின்வாரியத் துறையில் சீஃப் என்ஜினியர். பொள்ளாச்சிக்கு ஒரு கல்யாணத்துக்காகப் போனவர் கடந்த மூணு நாளா காணோம். உன்னோட அப்பா பேரும் சந்திரசேகரன். அவரையும் ரெண்டு நாளா காணோம். போட்டோவில் இருக்கிற இந்த சந்திரசேகரன்களை உனக்குத் தெரியுதான்னு பாரு...!''

ஹம்ஸா பார்த்துவிட்டு தலையாட்டினாள்.

''தெரியலை ஸார்...''

''அப்பாவுக்குன்னு வீட்ல தனி ரூம் இருக்காம்மா?''

''இருக்கு ஸார்...''

''அந்த ரூமை பூட்டியே வைம்மா... மிஸ்டர் வஜ்ரவேல் ரெண்டு மணி நேரத்துக்குள்ளே உன் வீட்டுக்கு வருவார்...''

ஹம்ஸா தலையை ஆட்டிவிட்டு கிளம்பிப் போனதும் வஜ்ரவேலை ஏறிட்டார் கமிஷனர்.

''நாம் இதுவரைக்கும் ஹேண்டில் பண்ணாத ஒரு விசித்திரமான கேஸ் இது. கடந்த பத்து நாட்களுக்குள்ளே மூணு அரசு அதிகாரிகள் காணாமே போயிருக்காங்க. மூணு பேர்க்குமே ஒரே ஏஜ் க்ரூப். ஒரே பெயர்கள்...! மோட்டீவ் என்ன...? கடத்தப்பட்ட மூணு பேரும் உயிரோடு இருக்காங்களா இல்லையா...? ஒண்ணுமே புரியலை மிஸ்டர் வஜ்ரவேல்!''

வஜ்ரவேலுவும் பெருமூச்சு விட்டார்.

''கேஸை எங்கே தொட்டு எப்படி ஆரம்பிக்கிறதுன்னே தெரியலை ஸார்...''

> இந்த உலகத்தில் ஆத்மா தோன்றுகிறது. வாழ்கின்றது. ஒருவன் ஒழுக்கத்துடன் வாழ்ந்தால் உள்ளிருக்கும் ஆத்மா மகிழ்ச்சியடைகிறது. பெயரும் புகழும் போதிய பயனைத் தராது. புகழும் கல்வியும் அவ்வாறே. பயனளிப்பது ஒழுக்கம் ஒன்றே! கஷ்டங்கள் வைரக் கற்களெனக் குறுக்கிட்டு தடுப்பினும் அதையும் பிளந்து கொண்டு முன்செல்வது ஒழுக்கம் ஒன்றே!
>
> -அறநூல்.




டாக்டர் மிருத்தியுஞ்சன் ஓட்டமும் நடையுமாய் சிமிந்தளத்துக்கு வர நோயாளிகளைப் பார்க்க வந்திருந்த பார்வையாளர்களின் கும்பல் போர்டிகோவுக்கு பக்கத்தில் கூடியிருந்தது. நர்ஸ்களும், ஆர்டர்லிகளும் பதட்டத்துடன் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

மிருத்தியுஞ்சன் ஓடிப்போய் கும்பலை விலக்கிக் கொண்டு எட்டிப் பார்த்தார்.

அந்த ஐம்பது வயது பத்ரய்யா ரத்தச் சகதியில் கைகளையும், கால்களையும் பரப்பிக் கொண்டு ஒரு ஆக்டோபஸ் மாதிரி விழுந்திருந்தார். இரண்டு கால்களும் முறிந்து போயிருந்தது. மண்டை இரண்டாகப் பிளந்து மூளையின் வெண்மை வெளியே எட்டிப் பார்த்தது.

மிருத்தியுஞ்சன் கோபாவேசமாக சத்தம் போட்டார்.

''ட்யூட்டி நர்ஸ் யாரு...?''

நர்ஸ் ஸ்டெல்லா ஓடிவந்து உடல் நடுங்க நின்றாள். டாக்டர் கண்கள் சிவக்க அவளை ஏறிட்டார். ''நீ பேஷண்ட்டை பார்த்துக்கிற லட்சணம் இதுதானா...?''

''ஸாரி... டாக்டர்... எப்படியோ ஏமாந்துட்டேன்.



பத்ரய்யாவுக்கு மாத்திரை கொடுத்துட்டு தம்ளரில் தண்ணி எடுக்கப் போனேன். மொட்டை மாடிக்கு ஓடிட்டார். நானும் பின்னாடியே ஓடினேன். அவரைப் பிடிக்க முடியலை...''

''ஸ்டாஃப் நர்ஸ் வேதா எங்கே...?''

வேதா ஓடி வந்தாள்.

''டாக்டர்...!''

''போலீஸுக்கு ஃபோன் பண்ணு... செம்மேடு போலீஸ் ஸ்டேஷன்ல இப்ப இன்ஸ்பெக்டர் யாரு...?''

''விஸ்வநாதன் டாக்டர்...''

''ஃபோன் பண்ணி என்கிட்டே குடு. நானே பேசறேன்...'' தன்னிடமிருந்த செல்ஃபோனை மிருத்தியுஞ்சன், நர்ஸ் வேதாவிடம் கொடுக்க, அவள் போலீஸ் ஸ்டேஷனின் எண்களைத் தட்டி, இன்ஸ்பெக்டரை தொடர்பு கொண்டபின், செல்ஃபோனைக் கொடுத்தாள். டாக்டர் வாங்கிப் பேசினார்.

''இன்ஸ்பெக்டர் விஸ்வநாதன்...?''

''நான்தான்...! சொல்லுங்க டாக்டர்...''

''என்னோட ஹாஸ்பிடலில் வேண்டாத ஒரு சம்பவம். ஒரு மனநோயாளி... பேரு பத்ரய்யா... மாடியிலிருந்து கீழே குதிச்சு தற்கொலை பண்ணிக்கிட்டான். ஸ்பாட்டுக்கு வர்றீங்களா? பார்வையாளர்களும் மத்த நோயாளிகளும் பார்த்து பயந்துடக்கூடாது...''

''இதோ... புறப்பட்டேன்...''

அடுத்த பதினைந்தாவது நிமிஷம் ஒரு போலீஸ் ஜீப்பும் வேனும் ஹாஸ்பிடல் வளாகத்துக்குள் நுழைந்தது. ஜீப்பினின்றும் இறங்கிய இன்ஸ்பெக்டர் விஸ்வநாதனை டாக்டர் எதிர்கொண்டார்.

''வாங்க...! மிஸ்டர் விஸ்வநாதன்...''

விஸ்வநாதன் கேட்டார்.

''சம்பவம்... எப்படி...?''

''பத்ரய்யா மெண்ட்டலி டிஸ்ஆர்டர்ட் பர்ஸன்.. கடந்த

ஒரு மாச காலமாய் ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டிருக்கேன். கொஞ்ச நேரத்துக்கு முந்தி நர்ஸ் ஸ்டெல்லா பத்ரய்யாவுக்கு மாத்திரை கொடுத்துட்டு, டம்ளர்ல தண்ணி எடுக்கப் போனபோது பத்ரய்யா மொட்டை மாடிக்கு ஓடிப் போய் குதிச்சிருக்கார்...''

விஸ்வநாதன் டாக்டரோடு பேசிக் கொண்டே பத்ரய்யா விழுந்து கிடந்த இடத்துக்கு வந்தார்.

சில விநாடிகள் வரை உடலைப் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு டாக்டரிடம் திரும்பினார்.

''பத்ரய்யாவுக்கு சொந்தக்காரங்க யாரு...?''

''யாரும் இல்லை... விஸ்வநாதன்! அவன் ஒரு ஒண்டிக்கட்டை. ஊட்டி நடுவட்டம் கெஸ்ட் ஹவுஸில் பல வருஷங்களாய் வாட்ச்மேனாய் வேலை பார்த்தான். அவனுக்கு இருந்த ஒரே ஒரு சொந்தம் பனிரெண்டு வயசு பேத்தி மாயா. அந்த மாயா போன மாசம் திடீர்னு விஷக் காய்ச்சல்ல விழுந்து சரியானபடி வைத்தியம் பார்க்காததினாலே இறந்துட்டா. பேத்தி மாயா இறந்ததிலிருந்தே பத்ரய்யா மனம் உடைஞ்சு போயிருந்தார். கடைசியில் மூளை பாதிக்கப்பட்டு, புத்தி பேதலிச்சுப் போய் ட்ரீட்மெண்ட்டுக்காக இங்கே கொண்டு வந்தாங்க... நானும் ட்ரீட்மெண்ட் கொடுத்துக்கிட்டு இருந்தேன்... குணமாகிற ஸ்டேஜ். இப்படி பண்ணிக்கிட்டார்...''

விஸ்வநாதன் கேட்டார். ''பத்ரய்யா எந்த கெஸ்ட் ஹவுஸில் வேலை பார்த்ததாய் சொன்னீங்க...?''

''ஊட்டியில் இருக்கிற நடுவட்டம் கெஸ்ட் ஹவுஸில்...''

''அந்த கெஸ்ட் ஹவுஸ் யார்க்குச் சொந்தமானது?''

''அது அரசாங்க கெஸ்ட் ஹவுஸ்... பைகாரா அணைக்குப் போகிற வழியில் இருக்கு...''

இன்ஸ்பெக்டர் விஸ்வநாதன் ஹாஸ்பிடல் கட்டிடத்தை அண்ணாந்து பார்த்து கேட்டார்.

''பத்ரய்யா எந்த இடத்திலிருந்து கீழே விழுந்தான்...?''

''வாங்க இன்ஸ்பெக்டர்... காட்டறேன்...'' டாக்டர்



கூட்டிப் போக, இருவரும் நடந்தார்கள்.

முதல் மாடி ஏறும்போது காசி பதட்டத்தோடு எதிர்ப்பட்டான்.

''டாக்டர்...''

''என்ன காசி...?''

''கலிவரதன் மறுபடியும் சித்தர் நிலைக்குப் போயிட்டான். இந்த தடவை ரொம்பவும் ஆர்ப்பாட்டம் பண்றான்...''

ஒரு மனிதனுடைய கர்மா எங்கு இருந்து தொடங்குகிறது? அவனுடைய வாழ்விலிருந்து தொடங்குகிறது. வாழ்வு எங்கு தொடங்குகிறது? தாயினிடமிருந்து வெளிவந்த பின் தொப்புள் கொடியை அறுக்கிறார்கள். தாய்க்கும் குழந்தைக்கும் தொடர்பு அறுந்து விடுகிறது. பின் குழந்தை வெளியில் உள்ள காற்றை முதல் சுவாசமாக உள்ளே இழுக்கிறது. குழந்தையின் வாழ்க்கை ஆரம்பமாகிறது. நவக்கிரகங்கள் சுவாசத்தின் வழியாக உள்ளே செல்ல, கர்மா வேலை செய்ய ஆரம்பித்து விடுகிறது.

## 14



உதவி போலீஸ் கமிஷனர் வஜ்ரவேல் வெளியே புறப்பட்டுப் போக எண்ணி நாற்காலியிலிருந்து எழுந்த விநாடி-

அறை வாசலில் நிழலாடியது.

நிமிர்ந்தார்.

அருள் நின்றிருந்தான். மோவாயில் இன்னமும் மழிக்கப்படாத ரோமம். கண்களில் சோகம்.

''அடடே... வா... அருள்...''

''ஸார்...! நீங்க வெளியே கிளம்பிட்டீங்க போலிருக்கு...?''

''அதெல்லாம்... ஒண்ணுமில்லை... வா...'' எதிரில் இருந்த நாற்காலியைக் காட்டிவிட்டு தானும் உட்கார்ந்தார்.

பழையபடி தொப்பி மேஜையின் மேல் உட்கார்ந்தது.

''சொல்லு அருள்...! நீயே என்னைப் பார்க்க வந்திருக்கேன்னா... விஷயம் இல்லாமே இருக்காது...''

அருள் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு கேட்டான். ''ஸார்! அப்பாவைப் பத்தி ஏதாவது தகவல் கிடைச்சுதா?''

''இல்லை...! கேஸ்ல எல்லாப் பக்கமும் இருட்டு. ஒரு சின்ன தீக்குச்சி வெளிச்சம் கிடைச்சுட்டாக் கூட போதும்... எல்லாத்தையும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்துடலாம். பட், கிடைக்க மாட்டேங்குதே...?''

''ஸார்... நீங்க சொன்ன அந்த தீக்குச்சி வெளிச்சம் எனக்கு கிடைச்சிருக்கு...''

''அருள்... நீ என்ன சொல்றே...?''

அருள் தன் கையில் மடித்து வைத்து இருந்த அந்த நாளிதழை விரித்தான்.

''ஸார்...! இது இன்னிக்கு காலையில் வந்த பேப்பர். இதில் ரெண்டாம் பக்கம் ஒரு நியூஸ் வந்திருக்கு. படிச்சுப் பார்த்தீங்களா?''

வஜ்ரவேல் பேப்பரின் இரண்டாவது பக்கத்தில் வெளியாகியிருந்த அந்தச் செய்தியை பார்த்துவிட்டு புன்னகைத்தார்.

''பார்த்தேனே...! மந்த்ரா மனநல மருத்துவமனையின் மொட்டை மாடியிலிருந்து பத்ரய்யா என்கிற ஒரு மனநோயாளி குதிச்சு தற்கொலை பண்ணிக்கிட்ட செய்திதானே...?''

''ஆமா... ஸார்...''

''இந்தச் செய்திக்கும் அப்பா காணாமே போன செய்திக்கும் என்ன சம்பந்தம்?''

''நூலிழை மாதிரி ஒரு சம்பந்தம் இருக்கு ஸார்...''

வஜ்ரவேல் நிமிர்ந்து உட்கார்ந்தார். ''என்னது...? சம்பந்தம் இருக்கா...?''

''ஆமா ஸார்...''

''என்ன சம்பந்தம்...?''

''அந்த பத்ரய்யா ஊட்டியில் இருக்கிற நடுவட்டம் கெஸ்ட் ஹவுஸில் வாட்ச்மேனாய் இருந்திருக்கார் இல்லையா ஸார்...?''

''ஆமா...''

''அப்பா போன மாசம் ஊட்டியில் நடந்த ஒரு



கருத்தரங்குக்குப் போயிருந்த போது அந்த நடுவட்டம் கெஸ்ட் ஹவுஸில் தான் தங்கினார்...''

வஜ்ரவேல் புருவங்களை உயர்த்தினார்.

''அருள்...! உங்கப்பா ஒரு அரசு ஊழியர். ஊட்டியில் நடந்த கருத்தரங்குக்குப் போயிருந்தபோது அரசுக்கு சொந்தமான கெஸ்ட் ஹவுஸில் தங்கியிருக்கார். இதுல பெரிசா என்ன இருக்கு...?''

''ஸார்...! அப்பா அந்த கெஸ்ட் ஹவுஸில் தங்கியிருந்தபோது எனக்கு ஃபோன் பண்ணிப் பேசினார். பேசும்போது அவர் குரலில் ஒரே பதட்டம்...''

''என்ன பேசினார்...?''

''நான் இப்போ நடுவட்டம் கெஸ்ட் ஹவுஸிலிருந்து பேசிட்டிருக்கேன் அருள். நான் நாளைக்கு காலையில் ஒன்பது மணிக்கெல்லாம் கோயமுத்தூர் வந்துடுவேன். மத்தியானம் ரெண்டு மணிக்கு ஃப்ளைட்ல நான் மும்பை போகணும். ஃப்ளைட்ல ஒரு டிக்கெட் புக் பண்ணிடு'ன்னு சொன்னார். நானும் உடனடியா ஃப்ளைட்டுக்கு புக் பண்ணினேன். அப்பா மறுநாள் சரியா ஒன்பது மணிக்கெல்லாம் வந்துட்டார். முகம் சரியில்லை. ரொம்பவும் சோர்வாய் இருந்தார். தன்னுடைய அறைக்குள்ளே போய் படுத்தவர் பனிரெண்டு மணிக்கு வெளியே வந்து 'நான் மும்பைக்கு போகலை. ஃப்ளைட் டிக்கெட்டை கான்ஸல் பண்ணிடு'ன்னு சொன்னார். 'ஏம்பா போகலை'ன்னு கேட்டேன். 'கேள்வி கேட்காதே. சொன்னதைச் செய்'ன்னு போயிட்டார். அதுக்கப்புறம் அப்பா ரெண்டு நாள் ஆபீஸ் போகாமே வீட்லயே இருந்தார். சரியா சாப்பிடலை... சரியா தூங்கலை... இது எல்லாம் இரண்டு நாள்தான். அப்புறம் அப்பா நார்மலுக்கு வந்துட்டார்...''

''இது எப்ப நடந்தது...?''

''சரியா ஒரு மாசத்துக்கு முன்பு...''

''சரி... நீ இப்ப என்ன சொல்ல வர்றே?''

''அப்பா காணாமே போன சம்பவத்துக்கும் இந்த பத்ரய்யாவுக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கு...''

வஜ்ரவேல் சிரித்தார். "என்ன அருள்...! அந்த பத்ரய்யாதான் மனநோயாளியாகி இப்போ தற்கொலையும் பண்ணிக்கிட்டானே! அவனுக்கும் உங்க அப்பா கடத்தப்பட்டதுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?"

"ஸார்...! ஊட்டி நடுவட்டம் கெஸ்ட் ஹவுஸில் அப்பா போய் தங்கியிருந்தபோது அங்கே ஏதோ ஒரு வேண்டாத சம்பவம் நடந்திருக்கு... அப்படியில்லாத பட்சத்தில் அப்பா ஏன் அப்செட் ஆகணும்?"

வஜ்ரவேலின் முகத்தில் இருந்த சிரிப்பு மறைந்தது.

நாம் சுவாசிக்கும் காற்று ஒரு செய்தியைக் கொண்டு வருகிறது. சுவாசித்து வெளிவிடும் காற்று ஒரு செய்தியைக் கொண்டு செல்கிறது. சுவாசிக்கும் காற்றின் வழியாக கோள்களின் கதிர் அலைகள் நமது உடலுக்குள் சென்று நம்மை ஒவ்வொரு விநாடியும் ஆட்டிப் படைக்கிறது.




கலிவரதன் ஹாஸ்பிடல் கட்டிலில் சம்மணம் போட்டு உட்கார்ந்திருக்க, அறையில் சாம்பிராணியும், ஊதுவத்தியும் புகைந்தது. டாக்டர் மிருத்தியுஞ்சனும், காசியும் கவலைக் கண்களோடு கலிவரதனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் கண் மூடி உரத்த குரலில் அரற்றினான்.

"ஆத்மாவைப் பற்றி அறிந்து கொள்வோம். ஆத்மா எவ்விதம் உள்ளது? எங்கு உள்ளது? தாமரைத்தண்டினை ஒடித்தால் மெல்லிய நூல் வரும். அந்த நூலை எடுத்து ஆயிரம் பங்காகப் பிளந்தால் எத்தனை மெல்லியதாக இருக்கும்...? இத்தகைய அமைப்புதான் ஜீவாத்மாவின் வடிவம். நெருப்பில் வேகாது. நீரில் கரையாது. ஆகாய வீதியில் காற்றினை வாகனமாகக் கொண்டு அலைந்து கொண்டேயிருக்கும். கருமேகங்கள் திரண்டு மின்னல் மின்னி இடி இடித்து மழையாகப் பொழியும்போது



ஆத்மாவானது பூமிக்கு வருகிறது. நிலத்து நீரிலே நிற்கிறது. குளத்து நீரில் குளிக்கிறது. ஏரி நீரில் விளையாடுகிறது. நெல்லில் நிறைகிறது. புல்லில் புகுகின்றது. பசுமாட்டின் வயிற்றில் பாலாக மாறுகிறது. காய்கறிகளுடன் கலந்து கொள்கிறது. ஆண்மகனின் வயிற்றுக்குள் உணவாகப் போகிறது. அந்த உணவு ரத்தமாக மாறுகிறது. ரத்தம் உயிரணுவாக மாறி பெண்ணில் கலக்கும்போது கருவாக உருவாகிறது. இதுதான் ஆன்மாவின் பயணம்..."

காசி கண்களில் நீரோடு மிருத்தியுஞ்சனைப் பார்த்தான்.

"டாக்டர்... நேற்றிலிருந்தே கலிவரதன் சரியில்லை. கொஞ்சம் குணமான மாதிரி இருந்தது. திடீர்ன்னு இப்படி அதிகமாக என்ன காரணம் டாக்டர்...?"

டாக்டர் பெருமூச்சு விட்டார். "அதுதான் எனக்கும் புரியலை... ட்ரீட்மெண்ட்டை மாத்திப் பார்க்கணும்..."

"வேண்டாம் டாக்டர்..."

"ஏன் வேண்டாம்...?"

"கலிவரதனோட அப்பாவும், அம்மாவும் ரொம்பவும் பயப்படறாங்க... கிராமத்துக்கு கூட்டிப் போய் வீட்லயே வெச்சு வைத்தியம் பார்க்கலாம்ன்னு அபிப்பிராயப்படறாங்க..."

"நோ... நோ...! கலிவரதனை இந்த நிலைமையில் வீட்டுக்கு கூட்டிப் போறது சரியில்லை. ட்ரீட்மெண்ட் ஃபார்முலாவை மாற்றினால் பலன் கிடைக்கலாம். இது காய்ச்சலோ... ஜலதோஷமோ... கிடையாது... உடனடியாய் குணம் தெரியறதுக்கு. கொஞ்சம் பொறுமையாய் இருந்தாத்தான் பலன் கிடைக்கும்..."

கலிவரதன் இன்னமும் ஆத்மாவைப் பற்றி பேசிக் கொண்டிருக்க, மிருத்தியுஞ்சன் சர்ட் பாக்கெட்டில் இருந்த செல்ஃபோன் குரல் கொடுத்தது. எடுத்து காதுக்குப் பொருத்தினார்.

"எஸ்..."

"நான் உதவி போலீஸ் கமிஷனர் வஜ்ரவேல்... அது டாக்டர் மிருத்தியுஞ்சன்தானே...?"

''ஆமா...''

''டாக்டர்...! நேற்றைக்கு உங்க மனநல மருத்துவமனையின் மொட்டை மாடியிலிருந்து பத்ரய்யா என்கிற ஒரு மனநோயாளி கீழே குதிச்சு தற்கொலை பண்ணினது சம்பந்தமாய் ஒரு என்கொய்ரி...''

''ப்ளீஸ்...''

''தேங்க்யூ... அந்த பத்ரய்யா ஒரு மனநோயாளியாய் மாற என்ன காரணம்...?''

''அவனுடைய ஒரே உறவான பனிரெண்டு வயசு பேத்தி விஷக்காய்ச்சல் காரணமாய் இறந்துட்டா. அந்த வேதனையைத் தாங்க முடியாமே கொஞ்சம் கொஞ்சமா ஈச்சிதைவுக்கு உள்ளாகி ஒரு மனநோயாளியாய் மாறிட்டான்...''

''அவன் ஹாஸ்பிடல்ல இருக்கும்போது அவனைப் பார்க்க சந்திரசேகரன் என்கிற பெயரில் யாராவது வந்தாங்களா?''

''யாரும் வரலை... அவன் ஒண்டிக்கட்டை. உறவினர்களோ, நண்பர்களோ கிடையாது...''

''நீங்க ட்ரீட்மெண்ட் கொடுக்கும் போதோ அல்லது வேற சந்தர்ப்பத்திலோ பத்ரய்யா தன் பேச்சில் சந்திரசேகரன் என்ற பெயரை எப்போதாவது சொன்னதுண்டா...?''

''பத்ரய்யா இந்த ஹாஸ்பிடலுக்கு வந்ததிலிருந்து ஒரு வார்த்தைகூட பேசினதே இல்லை... 24 மணி நேரமும் மௌனம் தான்...''

> நாம் உணவு உண்ணுவதற்கு முன்பாக இறைவனுக்கு இலை, பூ கொண்டு பூஜித்தல் எல்லோராலும் சாத்தியமாகக் கூடியது. அவ்வாறே பசுவுக்கு ஒரு வாயளவு புல் கொடுத்தல் எல்லோராலும் முடியக் கூடியதே. அதுபோலவே நாம் உண்பதற்கு முன் சிறிதளவு பிறர்க்கு கொடுப்பது, அதுவும் இல்லையெனில் பிறர் மனம் நோகாதவாறு நடந்து கொள்வது எல்லோராலும் சாத்தியமாகக் கூடியதே!
>
> -திருமந்திரம்.

ஊட்டி. நடுவட்டம்.



16



யூகலிப்டஸ் மரங்களுக்கு மத்தியில் ஒளிந்திருந்த அந்த கெஸ்ட் ஹவுஸுக்குள் பைக்கை நுழைத்தார் வஜ்ரவேல். அடித்த குளிர்காற்றில் நீலகிரியின் முற்பகல் வெய்யில் காணாமல் போயிருந்தது.

பைக்கை ஸ்டாண்டிட்டு நிறுத்திவிட்டு சுற்றும் முற்றும் பார்க்க, ரோஜாச் செடிகளுக்கு பூச்சிமருந்து அடித்துக் கொண்டிருந்த அந்த கெச்சலான வாட்ச்மேன் ஓடிவந்தான். யூனிஃபார்மைப் பார்த்து மிரண்டு போய், ''அய்யா...'' என்று கும்பிட்டான்.

''நீதான்... வாட்ச்மேனா...?''

''ஆமாங்கய்யா...''

''எவ்வளவு நாளாக இங்கே இருக்கே...?''

''ஒரு மாசமா...''

''அதாவது, பத்ரய்யாவுக்கு உடம்பு சரியில்லாமே போனதிலிருந்து இல்லையா...?''

''ஆமாங்கய்யா...''

''இதுக்கு முந்தி எங்கே வேலை பார்த்துட்டிருந்தே?''

''ஊட்டி பொட்டானிக்கல் கார்டன்ல கேட்கீப்பராய் இருந்தேன்...''

''பத்ரய்யா செத்துப் போனது தெரியுமா?''

''பேப்பர்ல பார்த்தேன்யா...''

''பத்ரய்யாவோடு உனக்கு நல்ல பழக்கம் உண்டா?''

''உண்டுங்கய்யா...''

''சரி...! ஒரு மாசத்துக்கு முந்தி வரை நல்லாயிருந்த பத்ரய்யாவுக்கு திடீர்னு என்னாச்சு...? அவனுக்கு எப்படி பைத்தியம் பிடிச்சது?''

''அதைப்பத்தி எனக்கு ஒண்ணும் தெரியாதுங்கய்யா...''

''வேற யார்க்கு தெரியும்...?''

''இந்த கெஸ்ட் ஹவுஸ்ல சமையல்காரன் ஒருத்தன் இருக்கான். பேரு மாதவன். அவனுக்குத்தாய்யா

எல்லாம் தெரியும்...''

''மாதவன் எங்கே...?''

''கெஸ்ட் ஹவுஸுக்குப் பின்னாடி ஒரு ஓட்டு வீடு இருக்கய்யா. அதுதான் அவனோட ஜாகை...''

வஜ்ரவேல் கெஸ்ட் ஹவுஸை சுற்றிக் கொண்டு பின்பக்கம் போனார். அடர்த்தியான சிப்ரஸ் மரங்களுக்கு நடுவில் அந்த வீடு தெரிய, அதை நோக்கி நடந்தார்.

வீட்டின் கதவு வெறுமனே சாத்தப்பட்டிருக்க, உள்ளேயிருந்து யாரோ பாடும் சத்தம் கேட்டது.

''இந்த உலகம் பிறந்தது எனக்காக...
ஓடும் நதிகளும் எனக்காக...''

வஜ்ரவேல் கதவைத் தட்டாமல் மெல்ல நடந்து போய் பக்கவாட்டில் திறந்து இருந்த ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார்.

வீட்டின் நடுவே ஒரு இளைஞன் சம்மணம் போட்டு உட்கார்ந்து, தனக்கு முன்னால் இருந்த சூட்கேஸை திறந்து வைத்துக் கொண்டு எதையோ அடுக்கிக் கொண்டிருந்தான்.

'என்ன செய்கிறான்?'

கால்களை எம்பிப் பார்த்தார்.

கட்டுக் கட்டாய் கரன்ஸி!

வஜ்ரவேல் ஒரு நிமிஷம் வரைக்கும் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, கதவை மெல்லத் தட்டினார்.

'டொக்... டொக்...'

''யாரது...?'' உள்ளேயிருந்து குரல் வேகமாகவும் அதிர்ச்சியாகவும் வெளிப்பட்டது.

வஜ்ரவேல் பதில் பேசாமல் மறுபடியும் கதவை சப்திக்க, அவன் கோபமாய் எழுந்து வரும் சத்தம் கேட்டது.

காத்திருந்தார்.

கதவு மெல்லத் திறந்தது. கதவைத் திறந்த இளைஞன், வஜ்ரவேலின் காக்கி யூனிஃபார்மைப் பார்த்ததும் அவசர அவசரமாய் எச்சில் விழுங்கி, ''ஸ... ஸார்...'' என்றான். கழுத்தில் வியர்வை மினுமினுத்தது.



''இங்கே... மாதவன் யாரு...?''

''நான்தான் ஸார்...''

''இந்த கெஸ்ட் ஹவுஸுக்கு சமையல் நீதானா...?''

''ஆ... ஆ... ஆமா ஸார்...''

''உள்ளே நீ மட்டும்தான் இருக்கியா...? வேற யாராவது இருக்காங்களா...?''

''நான் மட்டும்தான் ஸார்...'' சொன்ன மாதவனை தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தார் வஜ்ரவேல். சுவரோரமாய் சாத்தி வைத்து இருந்த ஸ்டீல் நாற்காலியை விரித்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.

''செத்துப் போன பழைய வாட்ச்மேன் பத்ரய்யாவுக்கு எப்படி மனநலம் பாதிக்கப்பட்டதுன்னு உனக்குத் தெரியுமா?''

''அது... வந்து ஸார்... பத்ரய்யாவோட பேத்தி மாயாவுக்கு விஷக்காய்ச்சல் வந்து...''

மாதவன் பேசிக் கொண்டிருக்கும்போதே, வஜ்ரவேல் தன் பூட்ஸ் காலால் எட்டி உதைக்க, அவன் அப்படியே வயிற்றை பிடித்துக் கொண்டு மடங்கி உட்கார்ந்தான். தலைமுடியை எட்டிப் பிடித்தார்.

''இதோ... பார்... இன்னும் ஐந்தே நிமிஷத்தில் எனக்கு எல்லா உண்மையும் வேணும்... தப்பு உன்கிட்டேயிருந்துதான் ஆரம்பமாகியிருக்குன்னு போன நிமிஷம்தான் தெரிஞ்சுக்கிட்டேன். அந்த சூட்கேஸ் முழுக்க முழுக்க கட்டுக்கட்டாய் பணம்...! அது எப்படி வந்தது... யார் கொடுத்ததுன்னு எனக்குத் தெரியணும்... இல்லேன்னா ஸ்டேஷனுக்கு கொண்டு போய் உன்கிட்டேயிருந்து உண்மைகளை எப்படி வாங்கணுமோ அப்படி வாங்கிக்குவேன். ரப்பர் தடியால எப்பவாவது நீ அடி வாங்கியிருக்கியா...? ஒரு நிமிஷம் சேர்ந்த மாதிரி அடிச்சா போதும். உள்ளேயிருக்கிற ஒவ்வொரு உறுப்பும் ரணமாகி சீழ் பிடிச்சுக்கும். அப்புறம் மூணு மாசத்துக்கு நரகவேதனைதான்... சாப்பிட முடியாது. அப்படியே மீறி சாப்பிட்டாலும் ஜீரணமாகாது. அப்படியே ஜீரணமாயிட்டாலும் கக்கூஸ்ல போய் குத்துக்காலிட்டு உட்கார முடியாது...''

மாதவன் கண்களில் அப்பட்டமாய் பயம்.

''சொ... சொல்லிடறேன் ஸார்...''

''சொல்லு...''

மாதவன் சில விநாடிகள் மௌனித்துவிட்டு மெல்லிய குரலில் சொல்ல ஆரம்பித்தான்.

''ஸார்... போன மாதம் ஊட்டியில் அரசு அதிகாரிகளோட கருத்தரங்கம் நடந்தது. அதுல கலந்துக்கிறதுக்காக தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா அரசுத்துறை பெரிய அதிகாரிகளும் வந்திருந்தாங்க. அதில் மின்துறை வாரிய அதிகாரி சந்திரசேகரன் ஒருவர். அவர் இந்த கெஸ்ட் ஹவுஸ்ல தான் தங்கியிருந்தார். கருத்தரங்கு முடிஞ்சன்னிக்கு ராத்திரி ஒரு பதினோரு மணி சுமார்க்கு சந்திரசேகரன் என்னைக் கூப்பிட்டார். போனேன். அவர் ஃபுல்லா குடிச்சுட்டு சோபாவில் படுத்திருந்தார். 'என்ன வேணும் ஸார்?'ன்னு கேட்டேன். 'ஒரு பொண்ணு வேணும்'ன்னு கேட்டார். அதுக்கு நான் 'என்ன ஸார்... முன்னாடியே ஒரு வார்த்தை சொல்லியிருந்தா ஏற்பாடு பண்ணியிருப்பேன். இந்நேரத்துக்குப் போனா கிடைக்காது'ன்னு சொன்னேன். நான் சொன்னதை அவர் காதுலயே போட்டுக்கலை. 'போய்ப்பாரு! எவ்வளவு பணமானாலும் பேசி முடி'ன்னு சொன்னார். நானும் கிளம்பிப் போனேன். ரெண்டு மணி நேரம் அலைஞ்சும் எந்த கிராக்கியும் கிடைக்காமல் போகவே, ஏமாற்றத்தோடு கெஸ்ட் ஹவுஸுக்கு வந்தேன்...''

மாதவன் பேச்சை நிறுத்திவிட்டு எச்சில் விழுங்கினான்.

''அப்புறம்... ம்... சொல்லு...''

''நான் போய்ட்டு வர்றதுக்குள்ளே அந்த சந்திரசேகரன் வாட்ச்மேன் பத்ரய்யாவோட பனிரெண்டு வயசு பேத்தி மாயாவை பாலியல் பலாத்காரம் பண்ணி நாசம் பண்ணிட்டார் ஸார்... அந்த பிஞ்சு 'வயசுக்கு' வந்து ரெண்டு மாசம்தான் ஆயிருந்தது ஸார்... இவர் ஃபோர்ஸ் பண்ணினதுல அது உயிரை விட்டுட்டது... பத்ரய்யா பிரமை பிடிச்சவன் மாதிரி உட்கார்ந்திருக்க,



சந்திரசேகரன் அவனோட கைகளைப் பிடிச்சுக்கிட்டு 'என்னை மன்னிச்சுடு... போதையில தெரியாமே பண்ணிட்டேன். உனக்கு எவ்வளவு பணம் வேணும்னாலும் தர்றேன்... தயவுபண்ணி விஷயத்தை வெளியே சொல்லிடாதே'ன்னு கெஞ்சிக்கிட்டு இருந்தார். அவர் சொல்றதை கேட்கக் கூடிய நிலைமையில் பத்ரய்யா இல்லை. பேத்தி செத்துப் போனதில் பிரமை பிடிச்சுப் போய் ஒரு ஜடம் மாதிரி உட்கார்ந்திருந்தான். நான் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கிட்டு சந்திரசேகரன் கிட்டே பேரம் பேசினேன். பத்ரய்யாவை சமாதானப்படுத்தவும் மாயாவோட மரணத்தில் யார்க்கும் சந்தேகம் வராதபடி செய்யவும் பத்து லட்சம் பணம் கேட்டேன். சந்திரசேகரன் ஒத்துக்கிட்டார். அட்வான்ஸாய் கையோடு கொண்டு வந்திருந்த ஒரு லட்ச ருபாயை உடனே கொடுத்தார். நான் மறுநாள் மாயா விஷக்காய்ச்சலில் இறந்துட்டதா சொல்லி அக்கம்பக்கத்து ஆட்களை நம்ப வெச்சு அடக்கத்தை நல்லபடியா முடிச்சேன். பத்ரய்யா தன்னோட பிரமை பிடிச்ச நிலையிலிருந்து மாறவே இல்லை... எனக்கு அது ஒரு வகையில் சந்தோஷமாய் இருந்தது. பத்ரய்யாவை உள்ளூரில் இருக்கிற டாக்டர் ஒருத்தர் கிட்டே கூட்டிட்டு போய் காட்டினேன். அவர் டெஸ்ட் பண்ணிப் பார்த்துட்டு எதிர்பாராத அதிர்ச்சியில் மூளை செயலிழந்து போயிருக்கு. கோயமுத்தூர்க்கு கூட்டிப் போய் ஒரு நல்ல சைக்யாட்ரிக் டாக்டர் கிட்டே காட்டச் சொன்னார். நான் டாக்டர் மிருத்தியுஞ்சன் கிட்டே கூட்டிட்டுப் போனேன். அவர் அட்மிட் பண்ணிக்கிட்டார். டாக்டர்க்குத் தெரியாமே நான் அப்பப்ப கோயமுத்தூர்க்கு வந்து பத்ரய்யாவை வாட்ச் பண்ணினேன். அவன் கல்லு மாதிரி அப்படியே இருந்தான். எனக்கு பேசினபடி சந்திரசேகரன் பணம் கொடுத்ததாலே சந்தோஷமாயிருந்தது. ஒரு கட்டத்துல பத்ரய்யாவை தீர்த்துக் கட்டிடலாமான்னு கூட நினைச்சேன். அதை செயல்படுத்த திட்டமும்

மாடியிலிருந்து
போட்டேன். அதுக்குள்ளே அவனே மாடியிலிருந்து
குதிச்சு தற்கொலைபண்ணிக்கிட்டான்...''
''சரி...! சந்திரசேகரனை கடத்திகிட்டுப் போனது
யாரு...?''
மாதவன் கையெடுத்து கும்பிட்டான். ''அய்யா! அது
பத்தியெல்லாம் எனக்கு ஒண்ணுமே தெரியாது. நான்
சம்பந்தப்பட்ட எல்லா உண்மைகளையும் உங்ககிட்டே
சொல்லிட்டேன்... எனக்கு பணம் கொடுத்துட்டுப்
போன சந்திரசேகரனை கடந்த ஒரு மாச காலமா நான்
பார்க்கவேயில்லை...''
மாதவன் சொல்லிவிட்டு அழுத அழுகையில் நிஜம்
தெரிந்தது.

இதயப் பாத்திரத்தில் இருந்து ஆசை நீரைக் கொட்டி, கடவுளின் நாமஸ்காணத்தால் அதை நிரப்பி விடு. ஜீவத்துளியை எடுத்து வைராக்கிய வெய்யிலில் காய விடு. இதனால் அமாஜோதியை, ஞானச் சுடரைக் காண முடியும்.



மந்த்ரா மணநல மருத்துவ மனையின் பின்புறத்தில் இருந்த டாக்டர் மிருத்தியுஞ்சனின் பங்களா.
காலை ஆறு மணி.
தன் படுக்கையறையின் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு கண்விழித்த மிருத்தியுஞ்சன் எழுந்து போய் கதவைத் திறந்தார்.
வெளியே வேலையாள் நுரை ததும்பும் காப்பி டம்ளரோடு நின்றிருந்தான்.
டாக்டர் ஆச்சர்யப்பட்டார்.
''என்ன பீட்டர்... இன்னிக்கு இவ்வளவு சீக்கிரத்துல
காப்பி...?''
அவன் சிரித்தான்.
''அய்யா...! காப்பி சாப்பிட்டுகிட்டே இந்த
பேப்பரோட கடைசிப் பக்கத்துல வந்திருக்கிற
செய்தியை படிச்சுப் பாருங்க... அதுல உங்களுக்கு ஒரு
சந்தோஷமான நியூஸ் இருக்கு...''



புருவங்களை உயர்த்திய மிருத்தியுஞ்சன், காப்பியை
பொருட்படுத்தாமல் அவன் நீட்டிய அன்றைய
நாளிதழை வாங்கிப் புரட்டி கடைசிப் பக்கத்துக்குப்
போனார். செய்தி பார்வைக்கு சிக்கியது.
மின்துறை வாரிய அரசு அதிகாரி சந்திரசேகரன்
சிறுமியை கற்பழித்துக் கொலை
சமையல்காரர் மாதவன் பரபரப்பு வாக்குமூலம்.
தலைப்பு செய்திக்கு கீழே மாதவனின் வாக்குமூலம்
பேப்பரின் அரைப் பக்கத்தை அடைத்துக்
கொண்டிருக்க, அதை சில நிமிடங்களில் படித்து முடித்த
மிருத்தியுஞ்சன் பரவசமாய் நிமிர்ந்தார்.
''பீட்டர்...! காரை எடு... திராட்சைத் தோட்டத்துக்கு
போலாம்...''
''அய்யா...! இப்பவேவா...?''
''உடனே...!''
அடுத்த சில நிமிடங்களில் போர்டிகோவில்
நின்றிருந்த அவருடைய க்வாலிஷ் சீறிக் கொண்டு
புறப்பட்டது.
கிட்டத்தட்ட ஒரு மணி நேரப் பயணம். கோவை -
பொள்ளாச்சி மெயின் ரோட்டில் இருந்து ஒத்தக்கால்
மண்டப கிராமத்துக்குள் நுழைந்து மண்ரோட்டில்
மேலும் ஒரு கிலோமீட்டர் தூரம் ஓடி பசுமையாய்
இருந்த அந்த திராட்சைத் தோட்டத்துக்குள் நுழைந்து
நின்றது. கிணற்றுக்குப் பக்கத்தில் மோட்டார் பம்ப்பை
பிரித்துப் போட்டு ரிப்பேர் பார்த்துக் கொண்டிருந்த
வாட்டசாட்டமான ஒரு ஆள் காரைப் பார்த்ததும்
'திமுதிமு' வென்று ஓடிவந்து மார்புக்கு குறுக்காக
கைகளை கட்டிக் கொண்டு நின்றான்.
''அய்யா...!''
டாக்டர் காரினின்றும் இறங்கிக் கொண்டே கேட்டார்.
''என்ன பெரியசாமி... அந்த மூணு
சந்திரசேகரன்களும் எப்படி இருக்காங்க...?''
''தினமும் ஒரு வேளை சாப்பாடுதானே...?
ரொம்பவும் சோர்ந்து போயிட்டாங்கய்யா...''
''எந்த கிழட்டுப் பயலாவது உண்மையை

ஒத்துக்கிட்டானா?''

''இல்லீங்கய்யா...''

''இப்ப... உண்மை வெளியே வந்தாச்சு பெரியசாமி! மின்வாரியத் துறை சந்திரசேகரன்தான் பத்ரய்யாவோட பனிரெண்டு வயசுப் பேத்தியை பாழ் பண்ணியது... கெஸ்ட் ஹவுஸ் சமையல்காரன் மாதவன் பேப்பர்ல பத்தி பத்தியா சொல்லியிருக்கான்... நீ போய் நிலவறைக் கதவைத் திறந்து வை. வர்றோம்...''

''சரிங்கய்யா...'' பெரியசாமி ஓடினான்.

நீ காணாத, கேளாத, அறிந்திராத அனைத்தையும் இல்லாதவையென தள்ளிவிட முடியாது. பார்வையற்றவன் முன் மிகப் பிரகாசமான விளக்கை வைத்தாலும் அவன் இருளையே காண்பான். அதேபோல் கடவுளை நம்பாதவர் முன் கடவுளைக் காட்டினாலும் அவர்கள் காணப்போவது இல்லை.




திராட்சைத் தோட்டத்துக்கு உள்ளே மறைவாய் இருந்த அந்தப் பழைய கல் கட்டிடத்தின் கதவை பெரியசாமி திறந்துவிட, டாக்டர் மிருத்தியுஞ்சனும், பீட்டரும் உள்ளே போனார்கள். ''பெரியசாமி...! நீ வெளியேயே இரு...!'' டாக்டர் சொல்லிவிட்டு- அரையிருட்டில் மெல்ல நடந்து போய் பக்கத்து அறைக்குள் நுழைந்தார். பீட்டர் பின்தொடர்ந்தான்.

சுவரோரமாய் வைக்கப்பட்டிருந்த ஒரு பீரோவை திறக்க, அது மறுபக்கம் சரிவோடு கூடிய படிக்கட்டுகளைக் காட்டியது.

இருவரும் படிகளில் இறங்கினார்கள். ட்யூப் லைட் வெளிச்சத்தில் அந்தச் சிறிய அறை நிரம்பியிருக்க, வரிசையாய் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் மூன்று சந்திரசேகரன்களும் கயிற்றால் கட்டப்பட்டு தெரிந்தார்கள். வாய்களில் ஒட்டப்பட்ட ப்ளாஸ்டர். கண்களில் கட்டப்பட்ட கறுப்பு பட்டை.



டாக்டர் அவர்களுக்கு முன்பாய் போய்-நின்றார். குரலை மாற்றிக் கொண்டு பேசினார். ''நான் ஒரு கிரிமினல் கிடையாது...! ஒரு சமூகநலத் தொண்டன்...! சித்தம் கலங்கிப் போன பத்ரய்யாவை சப்கான்ஷியஸ் மைண்ட்டுக்கு கொண்டுபோய் அவனோடு பேசிப் பார்த்ததில் தன்னுடைய பேத்தியை நாசம் பண்ணியது ஒரு அரசு அதிகாரி... அவர் பேர் சந்திரசேகரன் என்கிற இரண்டு தகவல்களை மட்டும் சொன்னான். அந்த சந்திரசேகரன் அரசின் எந்தத் துறையில் வேலை பார்க்கும் அதிகாரின்னு அவனால சொல்ல முடியலை. அது யார்ன்னு கண்டுபிடிக்கத்தான் ஊட்டி அரசு கருத்தரங்கில் கலந்துக்கிட்ட உங்க மூணு பேர்களையும் என்னோட ஆட்கள் மூலமா கடத்தி இங்கே கொண்டு வந்தேன். 'பத்ரய்யாவோட பேத்தியை நாசம் பண்ணினது யார்'ன்னு கேட்டேன். நீங்க மூணு பேருமே 'அது நானில்லை'ன்னு சொல்லிட்டீங்க... நான்கூட அது ஒருவேளை உண்மையோன்னு நினைச்சுட்டேன்... ஆனா இன்னிக்கு காலையில் நியூஸ் பேப்பரில் அந்த உண்மை வெளியே வந்தாச்சு. சமையல்கார மாதவன் சாங்கோபாங்கமா சொல்லிட்டார்... உங்க மூணு பேர்ல அந்த மதிப்புக்குரிய குற்றவாளி யார்ன்னு தெரிஞ்சாச்சு! இனி அந்த ஒருவரைத் தவிர மற்ற ரெண்டு பேர்க்கும் விடுதலை. அந்த ரெண்டு பேர்க்கும் மயக்க ஊசி போட்டு ஹைவேஸ் ரோட்டு ஓரமாய் இருக்கிற புளியமரங்களுக்குப் பின்னாடி படுக்க வெச்சுடுவோம். அவங்களுக்கு எப்போ மயக்கம் தெளியுதோ அப்ப எழுந்து வீட்டுக்குப் போயிடலாம். நாங்க யார்ன்னு அவங்களுக்குத் தெரியாது. இது எந்த இடம்ன்னும் தெரியாது. எந்த ஜென்மத்திலும் போலீஸ் எங்க பக்கத்துல கூட வரமுடியாது...''

டாக்டர் பேசிவிட்டு பீட்டர்க்கு கண்களைக் காட்ட, அவன் சுவரோர ஷெல்ப்புக்குப் போய், மயக்க ஊசி மருந்தையும், ஸிரிஞ்சையும் கொண்டு வந்தான்.

மிருத்தியுஞ்சன் மயக்க மருந்தை ஸிரிஞ்சில் ஏற்றிக் கொண்டே சொன்னார்.

''ஒரு அரும்பை கசக்கி எறிஞ்ச காம மிருகமான மின்வாரியத் துறை சந்திரசேகரனுக்கு தினசரி மூணு வேளைக்கு உணவுக்கு பதிலாய் கரண்ட் ஷாக் தருவோம். அவர் தாக்குப் பிடிக்கிறவரை தாக்குப் பிடிச்சுட்டு முடியலைன்னா செத்துப் போயிடலாம்... வக்கீல், கோர்ட், நீதிபதிகளுக்கு வேலை கொடுக்காமே ஏதோ எங்களால முடிஞ்ச உதவியை அந்த நீதி தேவதைக்கு பண்றதுல எங்களுக்கு ஒரு திருப்தி...''

டாக்டர் பேசிக் கொண்டே பொதுப்பணித்துறை அதிகாரி சந்திரசேகரனுக்கு ஊசியைப் போடுவதற்காக அவருடைய தோள்பட்டையைப் பற்றிய விநாடி-

நிலவறைப் படிகளில் யாரோ இறங்கி வரும் சத்தம் கேட்டது. டாக்டரும், பீட்டரும் திரும்பிப் பார்த்தார்கள்.

பெரியசாமி வந்து கொண்டிருந்தான்.

''என்ன... பெரியசாமி...! நீ ஏன் உள்ளே வந்தே? வெளியே போய் காவலுக்கு நில்... தோட்டத்துக்குள்ளே யாராவது... வந்துட...''

டாக்டரின் பேச்சு அப்படியே நின்றது. வியர்த்து வழிந்த- பெரியசாமிக்குப் பின்னால்-

காசியும், வஜ்ரவேலுவும் கைகளில் கனமான துப்பாக்கிகளோடு தெரிந்தார்கள்.

> மனிதன் என்பவன் சுலபமாக தெய்வமாகலாம்.
> எப்படி?
> மற்றவர்களின் துயரங்களில் பங்கெடுத்துக் கொள்ளும் போது.




''என்ன டாக்டர்... அப்படியே திகைச்சுப் போய் நின்னுட்டீங்க...? இந்த இடத்துக்கெல்லாம் நாங்க வரமாட்டோம்னு நினைச்சுட்டீங்களா...?''

கேட்டுக் கொண்டே காசி முன்னால்வர- டாக்டர் சுவாசிக்கத் திணறினார்.



''காசி... நீ... நீங்க...?''

''டாக்டர்! நான் கலிவரதனோட ஃப்ரெண்ட்தான்... அதுக்கும் மேல சி.பி.சி.ஐ.டி. போலீஸ் பிரிவில் யூனிஃபார்ம் அணியாத ஷேடோ ஸ்க்வாட் இன்ஸ்பெக்டர்... உங்களை இப்படி ஒரு சூழ்நிலையில் பிடிக்கிறதுக்காக நான் கையில் எடுத்துக்கிட்ட ஆயுதம்தான் கலிவரதன்...!''

மிருத்யுஞ்சன் திகைக்க, காசி தொடர்ந்தான்.

''என்ன டாக்டர்...! நான் சொல்றது உங்களுக்குப் புரியலையா...? புரியும்படியா சொல்லட்டுமா...? கடந்த ரெண்டு வருஷ காலமா நடந்த கொலைகளில் நாலு கொலைகள் மட்டும் போலீஸ் டிபார்ட்மெண்ட்டை 'ட்ரில்' வாங்கியது. அந்த கேஸ் ஃபைல்கள் என்னுடைய ஸ்க்வாடுக்கு வந்தபோது நான் ஒரு உண்மையைக் கண்டுபிடிச்சேன். கொலையுண்ட நான்கு பேர்களில் மூன்று பேர் ஆண்கள். ஒருவர் பெண். அந்த நாலு பேர்களோட குடும்ப பின்னணிகளை அலசிப் பார்த்தபோது அந்த குடும்பத்தில் உள்ள யாராவது ஒருத்தர் மனநலம் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். அவங்க உங்க மந்த்ரா மனநல மருத்துவமனையில் அட்மிட்டாகி உங்ககிட்ட ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டவங்களாகவும் இருந்தாங்க... இது என்னோட மனசுக்கு கொஞ்சம் உறுத்தலாய்ப் பட்டது. தனிப்பட்ட முறையில் தீவிரமான இன்வெஸ்டிகேஷனில் இறங்கினேன். தகவல்கள் கிடைத்தது. ஒரு மருமகளை மனநோயாளியாக மாற்றி கொடுமைப்படுத்திய மாமியார் கொலை செய்யப்பட்டிருந்தாள். சொத்துக்காக பெற்ற அப்பாவை தனியறையில் சங்கிலியால் கட்டிப்போட்டு பைத்தியம் என்று சொல்லிச் சொல்லியே சாகடித்த இரண்டு மகன்கள் கொலை செய்யப்பட்டிருந்தார்கள். தன்னுடைய அழகான மனைவியை ஒருவன் விபச்சாரத்தில் ஈடுபடுத்த, அதனால் மனநோயாளியாகிப் போன பெண்ணை மயக்கத்தில் வைத்து நீலப்படம் எடுத்த காரணத்துக்காக அவனும் கொலை செய்யப்பட்டிருந்தான். இப்படி இந்த

நான்கு கொலைகளுக்குப் பின்னால் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் இருந்ததாலும், முதல் தடவையாய் எனக்கு உங்க பேரிலும், மருத்துவமனை பேரிலும் சந்தேகம் வந்தது. சந்தேகத்தை என்னுடைய மேலதிகாரிகிட்டே சொன்னேன். அவர் உடனே 'நீயே ஒரு மனநோயாளி மாதிரி நடிச்சு, அந்த ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆயிடு'ன்னு சொன்னார். அது எனக்கு உடன்பாடாய் இல்லை... உண்மையிலேயே மனநோயாளியாய் இருக்கிற ஒருத்தரை ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணி, அவர்க்கு உதவி பண்ற மாதிரி அங்கேயே தங்கி, உண்மைகளைக் கண்டுபிடிக்க முடிவு எடுத்தேன். அதுக்கான முயற்சியில் ஈடுபட்டிருந்த போதுதான் என்னுடைய கிராமத்து ஃப்ரண்ட் கலிவரதனோட ஞாபகம் வந்தது. அவன் சித்தர் சம்பந்தமான விஷயங்களில் அதிக நாட்டம் காட்டி, குண்டலினி யோகம் அது, இதுன்னு போய், ஒரு மாதிரியான மென்ட்டல் டிஸ் ஆர்டரில் இருந்தான். அவனுடைய அப்பா, அம்மா கிட்டே பர்மிஷன் வாங்கி அவனை உங்க ஹாஸ்பிடல்ல சேர்த்தேன். கலிவரதனோட அறையிலேயே தங்கி உங்களை வாட்ச் பண்ண ஆரம்பிச்சேன். ஆரம்பத்துல எல்லாமே நார்மலாய்த்தான் இருந்தது. உங்க மேல சந்தேகப்பட்டது கூட தப்போன்னு நினைச்சேன். ஆனா பத்ரய்யா தற்கொலை பண்ணிக்கிட்டதும் உங்ககிட்ட நிறைய பதட்டம் தென்பட்டது. ஒரு தடவை பேப்பரில் மூணு சந்திரசேகரன்கள் காணாமல் போன விஷயம் வெளியாகியிருந்தது. அந்த செய்தியை நான் கலிவரதனுக்கு படிச்சு காட்டிக்கிட்டு இருக்கும்போது நீங்க 'சட்டு'ன்னு டென்ஷனாகி 'ஒரு மென்ட்டல் பேஷண்டுக்கு நல்ல செய்தியை படிச்சுக் காட்டக் கூடாதா'ன்னு சத்தம் போட்டீங்க. நான் உஷாரானேன். அதுக்கப்புறம் உங்களை தீவிரமா வாட்ச் பண்ணினேன், இந்த கேஸை டீல் பண்ற உதவி போலீஸ் கமிஷனர் வஜ்ரவேல் கிட்டே என்னோட சந்தேகத்தைச் சொன்னேன்...''



காசி பேச்சை நிறுத்த, வஜ்ரவேலு இப்போது குறுக்கிட்டார்.

''மிஸ்டர் காசி இந்த விஷயத்தை என்கிட்டே சொன்ன நேரம் கெஸ்ட் ஹவுஸ் சமையல்காரன் மாதவன் என் கையில் மாட்டியிருந்தான். உடனே எல்லா பேப்பரிலும் அவனுடைய வாக்குமூலத்தை வரும்படியாய் பண்ணினேன். அந்த நியூஸைப் படிச்சதும் உங்க ரியாக்ஷன் எப்படி இருக்கும்னு தெரிஞ்சுக்கறதுக்காக காலையில் அஞ்சு மணியிலிருந்தே உங்க வீட்டை நானும் காசியும் வாட்ச் பண்ணிட்டிருந்தோம். எங்க கணிப்பு வீண் போகலை. சரியாய் ஆறேகால் மணிக்கு வேலையாள் பீட்டரும் நீங்களும் க்வாலீஸ்ல புறப்பட்டீங்க... நாங்க உங்களுக்கு சந்தேகம் வந்துடக் கூடாதுங்கிறதுக்காக ஒரு ட்ரான்ஸ்போர்ட் லாரியில் ஒரு சின்ன போலீஸ் படையோடு ஃபாலோ பண்ணினோம்... திராட்சை தோட்டத்துக்குள்ளே புகுந்தோம்...''

காசி ஒரு புன்னகையோடு மிருத்தியுஞ்சனை ஏறிட்டான்.

''டாக்டர்! உங்க கோபம் நியாயமானதுதான். நீங்க செய்த கொலைகளும் நியாயமானதுதான்! ஒரு மனிதன் என்கிற முறையில் அது எனக்கு சந்தோஷமே...! ஆனால் ஒரு போலீஸ் அதிகாரி என்கிற முறையில் நீங்க செய்தது எனக்கு வருத்தம்...! குற்றவாளிகளை போலீஸுக்கு அடையாளம் காட்டுங்கள். மற்றதை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். தமிழ்நாட்டு போலீஸில் பல குறைகள் இருக்கலாம். ஆனால் என்றைக்கும் தரத்திலிருந்து கீழே இறங்காது... குற்றவாளிகளை தப்ப விடாது!''

''வெல் செட்...'' என்றார் வஜ்ரவேல்.

**(முற்றும்)**

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில் அச்சிட்டு (பிரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜி. அசோகன். முகவரி: 352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5.
ஆசிரியர்: ஜி. அசோகன். தொலைபேசி: 28544294